Vol.5, Issue 11 | Annual Subscription ₹ 480

@NewsRotary

/RotaryNewsIndia

ஏப்ரல் 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.


Rotary
MELBOURNE 2023
Rotary International Convention Melbourne, Australia
May 27 - 31, 2023
Jennifer Jones
RI President
Join us for a Vibrant and Festive
SOUTH ASIAN RECEPTION
at The Rotary International Convention, Melbourne
Register soon..!!
Registration Fee: Rs 6,000 / US $75 per person
Date: May 28, 2023 | Time: 05.00 pm to 08.00 pm
Venue: Crown Conference Centre, 8 Whiteman Street, Southbank VIC 3006, Australia
AS Venkatesh
RI Director
Convener - South Asia Reception
Bank Details:
Muruganandam . M
Account no: 00000035443584016
IFSC Code: SBIN0001363
Dr Mahesh Kotbagi
RI Director
MMMTRICHY
PDG AKS Rtn Muruganandam M
B.E., M.B.A., M.S., M.F.T., PGDMM., DEM.,
Chairman - South Asia Reception - 2023 RI Convention, Melbourne
Chairman - Mahabs 21 (Rotary Zone Institute)
RPIC - Zone 5 (2023-2026) | District Trainer (2023-24)
District Governor (2016-17) | RID 3000
Chairman - Excel Group of Companies
/mmmtrichy | www.mmmtrichy.com | Mail: mmmrotary@excelgroup.co.in | Ph: +91 93825 50001

# உள்ளே


12
பெண்களுக்கு தன்னம்பிக்கை வளர்க்கும் ரோட்டரி திட்டம்

20
தொலைநோக்கியை உருவாக்கிய பஞ்சாயத்து பள்ளி மாணவர்கள்

26
இளைஞர்கள் பரிமாற்ற திட்டத்தால் வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்த வடகிழக்கு மாநிலங்கள்

32
எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் துணைகளை சந்திக்கின்றனர்

34
RID 3150இல் உள்ள கிராமங்களை ரோட்டரி ஆதரிக்கிறது

44
பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக அமைந்த துருக்கி பயணம்!

46
பசியை விரட்ட, ஒரு கைப்பிடி அரிசி

48
வையில் உள்ள பழங்குடியினரின் வீடுகளில் ப்ராஜெக்ட் சூர்யா விளக்கேற்றியது

52
சென்னையில் ஒரு மாறுபட்ட இசை விழா

54
அலிகரில் புதிய தொழில்முனைவோருக்கான கண்காட்சி

60
வெளிநாட்டினரை கவர்ந்த ரைடு ஃபார் ரோட்டரி பேரணி

64
பாதுகாப்பான குடிநீருக்கு ஒரு தீர்வு

68
நௌஷாத் - பாலிவுட் இசையின் கோஹினூர்

74
இரத்த அழுத்தத்தை குறைப்போம்




## நன்கு தொகுக்கப்பட்ட மார்ச் இதழ்

*குடிசை குழந்தைகளுக்கு ரோட்ராக்டர்கள் கற்பிக்கும் அட்டைப் படத்தைப் பார்த்தும், ஆஸ்திரேலியாவின் RC பெர்ரியின் கென் ஹாட் இந்த உன்னதமான காரணத்திற்காக பாராகிளைடிங் மூலம் 200,000 வசூலித்ததை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.*

*டீ மாஸ்டர் ஜென்ஷிடு சென் பற்றி RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் எழுதிய கட்டுரை, அமைதியை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தி ஊக்கமளிக்கிறது. சமீபத்தில் வெளியாகி 1,000 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்த பதான் திரைப்படத்திற்கு எதிரான வெறுப்பூட்டும் கருத்துகளை எதிர்த்துப் போராடுவதில் இந்தியர்களின் ஒற்றுமையின் தெளிவான கருத்தை தந்த ஆசிரியரின் குறிப்பு சுவாரஸ்யமாக இருந்தது.*

*RID மகேஷ் கோட்பாகி துருக்கி/சிரியா நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து மனதை தொடும் செய்தியை எழுதியுள்ளார். RID A S வெங்கடேஷ், உறுப்பினர்களைத் தக்கவைக்க சங்கத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். TRF அறங்காவலர் தலைவர் இயன் ரிஸ்லி தண்ணீர் மற்றும் சுகாதார பிரச்சனைகளை கையாள்வதன் அவசியத்தை நன்கு விளக்குகிறார். TRF அறங்காவலர் பரத் பாண்டியா, இந்தியர்களின் பழங்காலப் பழக்கத்தை சரியான நேரத்தில் நினைவூட்டி, அதை TRF கொடுப்பதோடு தொடர்புபடுத்துகிறார். பூந்தமல்லி அருகே உள்ள குடிசைப் பகுதியில் வகுப்பறையை நடத்தி வரும் சென்னை சென்ட்ரல் ரோட்ராக்ட் சங்கத்தின் உன்னதப் பணியை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். TRF மாயாஜாலத்தை வெளிப்படுத்துவோம், PRIP ராஜேந்திர சாபு எழுதிய பாண்டுரங்க செட்டியின் இரங்கல் கட்டுரை, உங்கள் கேள்விகளுக்கு கோர்டன் மெக்கினலி பதிலளிக்கிறார் போன்ற பிற கட்டுரைகள் அனைத்தும் ரசிக்க வைத்தன.*




*சங்கத்தலைவர் ஜோன்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்த விபரங்கள் கொண்ட புகைப் படங்கள் அழகாக இருந்தன. மேலும், தேவதையின் குரல் கொண்ட வாணி ஜெய்ராம் பற்றி படித்ததில் மகிழ்ச்சி. கிளப் ஹாப் அழகாக வழங்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் மார்ச் இதழ் சூப்பர்.*

*பிலிப் முலப்போன்* M T
RC *திருவனந்தபுரம் புறநகர்* — D 3211

*மார்ச் இதழில் ரோட்டரி சங்கத்தின் செயல்பாடுகள் பற்றிய சிறப்பான கட்டுரைகள் இருந்தது. வாணி ஜெயராமின் அஞ்சலி அவரது வாழ்க்கையில் நடந்த சில சுவாரஸ்யமான நிகழ்வுகளை நினைவுபடுத்துகிறது. மறைந்த பின்னணிப் பாடகர் பற்றிய கட்டுரையை வெளியிட்ட ரோட்டரி செய்திகளுக்கு நன்றி, இந்த பதிவு உலகம் முழுவதும் படிக்கப்படும்.*

K *கணேசமூர்த்தி*
RC *குற்றாலம்* — D 3212

ஒரு வயதற்ற குரல் சோகமாக அமைதியானது: வாணி ஜெய்ராம் பற்றிய இரங்கல் கட்டுரையில் தென்னிந்திய இசையமைப்பாளர்களுடன் அவரின் படங்கள் எதுவும் இல்லை என்பதை நான் கவனித்தேன். அவற்றையும் சேர்த்திருக்கலாம்.

கந்தசாமி சரோஜா

பழங்குடியினர் நலனுக்காக பாடுபடும் நாக்பூர் ரோட்டேரியர்கள் கட்டுரை அருமையாக இருந்தது. நாக்பூரிலிருந்து சுமார் 300 கிமீ தொலைவில் உள்ள ஒரு மலைப் பகுதியான மேல்காட்டின் பழங்குடி மக்களுக்கு சேவை செய்யும் இந்த யோசனையைப் பெற்றதற்காக RC நாக்பூர் விஷன் தலைவர் டாக்டர் ஷிவானி சுலேவுக்குத்தான் பெருமை சேர வேண்டும். புனேவிலிருந்து ஆறு மணி நேர பயணத்தில் இந்த கிராமம் இருந்தபோதிலும், மகான் அறக்கட்டளையின் மருத்துவர்களின் உதவியுடன் சங்கம் மருத்துவ முகாமை நடத்தியது பாராட்டுக்குரியது.

தற்காலிக ஆபரேஷன் தியேட்டரில், 32 பெரிய அறுவை சிகிச்சைகளுடன் மொத்தம் 52 அறுவை சிகிச்சைகளை ஏற்பாடு செய்த டாக்டர் ஷிவானி மற்றும் அவரது குழுவினருக்கு பாராட்டுகள்.

N ஜெகதீசன், RC எலூரு — D 3020

### உயர பறக்கும் மகளிர்

RC சென்னை மெராக்கி என்ற அனைத்து மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள், தாங்கள் வித்தியாசமானவர்கள் மற்றும் தங்களால் அதிசயங்களைச் செய்ய முடியும் என்பதை நிரூபித்துள்ளனர்.

அதன் பட்டயத் தலைவர் சிவபால ராஜேந்திரன், தலைவர் ஸ்ரீகலா கோபி, செயலாளர் ப்ரீத்தா மகேஷ், ஒருங்கிணைப்பாளர் கோதங்கி சுசித்ரா ஆகியோர் அடங்கிய குழு 5,500 கி.மீ மனஉறுதியுடன் பயணம் செய்துள்ளனர்.

மேலும், ஐந்து RI மாவட்டங்களில் உள்ள 150 சங்கங்களிடம் இருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றது ரோட்டரியின் பொது உருவத்தை வெளிப்படுத்தும் அவர்களின் முயற்சிக்கு சான்றாகும். ரோட்டரியை பிரபலபடுத்த என்ன அற்புதமான ஒரு வழி. இந்த நால்வர் குழு அவர்களின் விரியும் சிறகுகள் திட்டத்தின் மூலம் இமயமலை உயரத்திற்கு உயர்ந்துள்ளனர், இதற்காக தமிழ்நாட்டின் ரோட்டேரியர்களாகிய நாங்கள் பெருமை கொள்கிறோம். அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

நமது இதழான ரோட்டரி நியூஸை நான் மிகவும் பாராட்டுகிறேன், ஏனெனில் ரோட்டரியின் பல்வேறு அம்சங்களைத் தவிர, நமக்கு உத்வேகம் தரும் கட்டுரைகளையும் வெவ்வேறு சங்கத் திட்டங்களையும் பற்றி படிக்க வாய்ப்பளிக்கிறது.

கீதா துபே, RC ஜாம்ஷெட்பூர் ஃபெமினா — D 3250

ஜோஷிமத், நடக்கக் காத்திருக்கும் சுற்றுச்சூழல் பேரழிவு என்ற பிப்ரவரி தலையங்கம், இயற்கையைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து வாசகர்களை சரியான நேரத்தில் எச்சரித்துள்ளது. ரோட்டரியை தவிர்க்கமுடியாததாக மாற்றுங்கள் என்ற கட்டுரை படிக்கத் தக்கது.

விசாகா விஸ்டா ஜோன் இன்ஸ்டிடியூட் பற்றிய அனைத்து கட்டுரைகளும் மிகவும் விரிவானவை மற்றும் நிகழ்வில் பங்கேற்க முடியாதவர்களுக்கு படிக்க ஆர்வமுடையதாக இருந்தன.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

### ரோட்டரி பிளஸ்- நல்ல முயற்சி

உண்மையில் இது ஒரு அற்புதமான முயற்சி. உன்னதமான திட்டங்கள் பல பல்வேறு கட்டுப்பாடுகளால் நமது அச்சு இதழில் வெளிவருவதில்லை. ரோட்டரி நியூஸ் பிளஸ், இவற்றை காண்பிக்க ஒரு நல்ல தளமாகும்.

கணேஷ் பட்டான்ஷெட்டி
RC நிபானி — D 3170

ஒரு ரோட்டேரியன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ள எனது சங்கம் சமூகங்களுக்குப் பயன்படும் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. நன்றி, ரோட்டரி.

ஜவஹர் அம்பலவாணன்
RC வீராணம் லேக் சிட்டி — D 2981

**அட்டைபடம்:** RID 3212-ன் மகளிரை மேம்படுத்தும் யாதுமானவள் திட்டத்தின் பகுதியாக கிராம பள்ளியில் ஒரு மாணவி பேசுகிறார்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் *rushbhagat@gmail.com* அல்லது *rotarynewsmagazine@gmail.com* என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் *www.rotarynewsonline.org* என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.




## ரோட்டரி நியூஸில் விளம்பரம் செய்யுங்கள்

**Tariff**

| | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner front cover | ₹60,000 |
| Inner back cover | ₹60,000 |
| Inside fullpage | ₹30,000 |
| Half page | ₹20,000 |

**Specification**

| | |
|---|---|
| 17 x 23 cm | Full page |
| 17 x 11 cm | Half page |

**Advertisements in colour only.**

மூன்று மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட விளம்பரங்களுக்கு கவர்ச்சிகரமான தள்ளுபடிகள் உண்டு.

**ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட்**
**தொலைபேசி:** 044 42145666,
**ஈமெயில்:** rotarynews@rosaonline.org

# அறிமுகப்படுத்துகிறோம், ரோட்டரி இளைஞர் வலைப்பின்னல்

*நோய்ப்பரவல் நம் உலகத்தையும் நம் வாழ்க்கைகளையும் எப்படி மாற்றியது என்பதை நாம் மறக்கமாட்டோம். இது ஒரு மாறுபட்ட வகை உலகத் தலைமைக்கான இடத்தை உருவாக்கியுள்ளது என்று நான் தனிப்பட்டமுறையில் எண்ணுகிறேன். 2020ம் ஆண்டின் தொடக்கத்தில், நான் என்னுடைய நல்ல நண்பரான அன்னியெல்லா கர்ராசிடோ அவர்களை இணையத்தில் சந்தித்தேன். அவர் அப்படிப்பட்ட ஒரு தலைவர், இந்த மாதம் என்னுடைய பக்கத்தை அவருக்கு வழங்குவதில் மகிழ்கிறேன்.*

*— ஜெனிஃபர் ஜோன்ஸ்*



*ஜனவரியில் ஒர்லாண்டோ, ஃபுளோரிடா பன்னாட்டுக் கூடுகையில் அன்னியெல்லா கர்ராசிடோ பேசுகிறார்.*

மார்ச் 2020ல் எனக்கு ஓர் அச்சத் தாக்குதல் ஏற்பட்டது. என்னால் மூச்சு விட இயலவில்லை, நெஞ்சில் பயங்கரமான வலியை உணர்ந்தேன்.

அப்போது, உலக சுகாதார அமைப்பு Covid-19ஐ ஒரு பன்னாட்டு நோய்ப்பரவலாக அறிவித்துச் சில நாட்கள் ஆகியிருந்தன, நான் அமெரிக்காவில் ரோட்டரி இளைஞர் பரிமாற்ற மாணவராக என் ஆண்டின் நடுவில் இருந்தேன். யோசித்துப் பாருங்கள்: 18 வயதுப் பெண் இன்னொரு நாட்டில் சிக்கிக் கொண்டிருக்கிறாள், அவளுக்கு உள்ளூர் மொழி தெரியாது, அவளைச் சுற்றியுள்ளவர்களுடன் அவளுக்கு வெறும் 6 மாதப் பழக்கம்தான். அது அச்சுறுத்தும் சூழல்.

நான் என்னுடைய இன்டராக்ட் மற்றும் இளைஞர் பரிமாற்ற நண்பர்களை அழைத்தேன். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஓர் இணையக் கூட்டம் நடத்தினோம், திட்டங்களைப் பகிர்ந்துகொண்டோம், தனிமைப்படுத்தப்பட்டபோது மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கேட்டு ஊக்கம் பெற்றோம். அந்த முதல் கூட்டத்தில் 17 நாடுகளில் இருந்து 70 பேர் பங்கேற்றார்கள்.

அங்கு தொடங்கி, உலகெங்கும் உள்ள ரோட்டரி இளைஞர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு, தனிமைப்படுத்தப்படும்போது என்னவெல்லாம் செய்யலாம் என்கிற யோசனைகளின்மூலம் பிறருக்கு ஊக்கம் வழங்க நாங்கள் ஓர் இணையத் தளத்தைக் கட்டமைத்தோம்.

ஒரே ஆண்டில் நாங்கள் 80 நாடுகளில் இருந்து 5,000க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் உரையாடினோம். எங்கள் குழு உறுப்பினர்களில் பலர் மாவட்ட இன்டராக்ட் பிரதிநிதிகளாக, மாவட்டக் குழு உறுப்பினர்களாக ஆனார்கள். எங்களில் சிலர் ரோட்டரி பன்னாட்டு அவைகளிலும் சேவையாற்றுகிறோம்.

எங்களுடைய கடைசி அலுவல் பூர்வமான கூட்டத்தில், PRIP பாரி ராஸ்ஸின் இன்னும் பெரிய மாற்றம் ஒன்றை உருவாக்க எங்களை ஊக்குவித்தார்.

எங்கள் உறுப்பினர்களில் சிலர் (நான் உள்பட) தொடக்க இன்டராக்ட் அறிவுறுத்தல் அவையில் சேவை யாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டோம், அங்கு நாங்கள் ரோட்டரியில் இளைஞர்கள் என்பதற்கான எங்கள் தொலைநோக்குப் பார்வையை RI இயக்குநர்கள் வாரியத்துக்கு வழங்கினோம்.

வாரியத்துக்கு நாங்கள் வழங்கிய உரை தலைவர் ஜெனிஃபர், அவருடைய குழுவை ஊக்குவித்து ரோட்டரி இன்டர்நேஷனலில் இளைஞர் அறிவுறுத்தல் அவை ஒன்றை உருவாக்கச்செய்தது, அதன் இணைத் தலைவராகச் சேவையாற்றும் பெருமை எனக்குக் கிடைத்துள்ளது.

ஹூஸ்டனில் நடைபெற்ற 2022 மாநாட்டின்போது ஒரு துணை நிகழ்ச்சியில் ரோட்டரி இளைஞர் வலைப்பின்னல் அலுவல்பூர்வமாகத் தொடங்கப்பட்டது. இன்டராக்ட், இளைஞர் பரிமாற்றம், ரோட்டரி இளைஞர் தலைமை விருதுகளில் பங்கேற்ற எங்களில் ஐந்து பேர் கண்டங்களைத் தாண்டிப் பயணம் செய்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன் இணையத்தில் நாங்கள் உண்டாக்கிய ஓர் அமைப்பைத் தொடங்கிவைத்தோம். நாங்கள் முதன்முறையாக நேரில் சந்தித்ததும் அந்த மாநாட்டின்போதுதான்.

என் நண்பர்களும் நானும் பேசி முடித்தபோது, 500க்கும் மேற்பட்ட மக்கள் எழுந்து நின்று கைதட்டியதை உணர்ந்தோம். எங்கள் கண்களில் கண்ணீர் நிறைந்தது, மகிழ்ச்சி, சாதனை உணர்வு நிரம்பியது.

ஓர் அச்சத் தாக்குதல் இதற்கெல்லாம் வழிவகுக்கும் என்று யார் நினைத்திருப்பார்கள்?

**அன்னியெல்லா கர்ராசிடோ**
RC பே செயின்ட் லூயிஸ், மிசிசிப்பி மாவட்டம் 6840 ரோட்டராக்ட் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்



# பெண்கள் சக்தி
# கட்டுக்கதையும் உண்மையும்

முதலில் ஒரு எச்சரிக்கை சர்வதேச மகளிர் தினத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. தாய்மார்கள், தந்தையர்கள், மகன்கள் இப்படி பலவற்றை கொண்டாடும் தினத்திலும் எனக்கு நம்பிக்கையில்லை. இவை சந்தை படுத்துதலுக்கான வித்தைகள். பல்வேறு வகையான தயாரிப்புகளின் விற்பனைக்காக உருவாக்கப்பட்டவை.


துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவ நன்கொடை வழங்குமாறு ரோட்டரியின் முதல் பெண் தலைவர் விடுத்த வேண்டுகோள்தான் என் கண்முன்னே தெரிகிறது. இவ்வாறு செய்வதன் மூலம், அவர், தலைமை, ஆற்றல், கருணை மற்றும் சக மனிதர்கள் சந்திக்கும் துன்பங்களை அறிந்து கொள்ளும் திறன் ஆகியவற்றை தாம் இருக்கும் இடத்திலிருந்தே வெளிப்படுத்துகிறார். பெரும்பாலான பெண்கள் இந்த குணங்களை பணியிடத்துக்கு கொண்டு வருவார்கள். கவனம், நேர்மை, கடின உழைப்பு ஆகியவைதான் வெற்றிக்கான சூத்திரமாகும். பெண்கள் பன்முகத்தன்மையும், உள்ளடக்கத்தையும் கொண்டிருப்பது நமக்குத் தெரியும். அவர்களில் பெரும்பாலானவர்கள் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் பாகுபாட்டை எதிர்கொண்டிருப்பார்கள். ஆனால், பெண்கள் கண்ணாடி மேற்கூரையை உடைத்துக் கொண்டு உச்சத்தை தொடும்போது அவர்களின் குணங்கள் அல்லது பங்களிப்புகள் பாராட்டப்படுகிறதா? துரதிருஷ்டவசமாக இல்லை என்றே 2022-ஆம் ஆண்டு வெளியான மெக்கென்ஸி அறிக்கை கூறுகிறது. 40 சதவீத பெண் தலைவர்கள், தங்களின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் (ரோட்டரியின் மந்திரமும் இதுதான்) ஆகியவை பணிகள் செயல்திறன் மதிப்பாய்வுகளில் அங்கீகரிக்கப்படுவதில்லை என்றே அந்த அறிக்கை கூறுகிறது.

2022-ஆம் ஆண்டில் வெளியான எர்னஸ்ட் அண்ட் யங் அறிக்கையின்படி, இந்தியாவில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் 18 சதவீதம் பேரே நிர்வாகக் குழுவில் இடம்பெறுகின்றனர். 2013-ஆம் ஆண்டில் வெறும் 6 சதவீதமாக இருந்தது இப்போது சற்று முன்னேறி யிருக்கிறது. ஆனாலும், நிலைமை திருப்திகரமாக இல்லை. இதுவும்கூட 2013-ஆம் ஆண்டு இந்திய அரசின் கம்பெனிகள் சட்டம் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் நிர்வாகக்குழுவில் குறைந்தபட்சம் ஒரு பெண் இடம்பெற வேண்டும் என்று கூறிய காரணத்தால்தான். நிப்டியின் கீழ் வரும் 50 நிறுவனங்களில் தற்போது குறைந்தபட்சம் 95 சதவீதம், ஒரு பெண் இயக்குநர்கள் உள்ளனர்.

ஆனால், நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவத்தில் முன்னணியில் உள்ள இன்ஃபோசிஸ், குழந்தைப்பேறு காரணமாக வெளியேற நேர்ந்தால் அவர்களுடன் தொடர் பேச்சு நடத்தி அவர்களுக்கு கூடுதல் பயிற்சி அளித்து, பணிநேரங்களில் நெகிழ்வுத்தன்மையை உறுதிசெய்கிறது. டாடா ஸ்டீல் நிறுவனம் பாலின சமத்துவத்தை உறுதிசெய்வதற்காக Women@Mines என்ற முன்முயற்சியை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் சுரங்கவேலை, எலெக்ட்ரிகல் மற்றும் மெக்கானிக்கல் பாராமரிப்பு பணிகளில் அனைத்து ஷிப்டுகளிலும் பணி செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

பெண்களை கொடுமைப்படுத்துவதை நிறுத்திவிட்டு, குடும்பத்திற்காக காலையில் எழுவது முதல் இரவு தூங்கச் செல்லும் வரை பெண்கள் செய்யும் தியாகங்களுக்காக அவர்களை பாராட்ட வேண்டாம். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்களை நாம் பெருமைபடுத்தவில்லை. அவளிடம் இடுப்பு ஒடிய வேலை வாங்குகிறோம். இதுபோன்ற புகழ், பாராட்டுகள் தேவையில்லை. அவர்கள் ஆண்களுக்கு நிகராக அவர்கள் பக்கத்தில் நிற்கிறார்களே அந்த மகிழ்ச்சியே அவர்களுக்கு போதுமானது.

அவர்களை தூக்கிவிட கை தான் தேவையே தவிர, "சூப்பர் பெண்மணி" என்ற பட்டம் அவர்களுக்கு தேவையில்லை!



ரஷீதா பகத்

# RI இயக்குநர்



## உலகத்தை சுத்தமாகவும் பசுமையாகவும் மாற்றுவோம்

நீங்கள் வசிக்கும் இடத்திற்குள் பசுமையைப் பெறுவதற்கு நான் உங்களுக்கு உதவுகிறேன். ஒரு தோட்டத்திற்கான இடம் அல்லது மொட்டை மாடி அல்லது பால்கனியில் அல்லது ஒரு சன்னல் ஆகியவற்றில் எதாவது ஒன்றை நாம் அனைவரும் தாவரங்களுக்கான இடமாக ஒதுக்க முடியும். உங்கள் வாழ்வறையில் உட்புற தாவரங்களுடன் நீங்கள் தொடங்கலாம்-அவை நிறைய ஆக்ஸிஜனை வெளியிடுவது மட்டுமல்லாமல், அந்த இடத்தில் அழகியல் மற்றும் அரவணைப்பையும் சேர்க்கின்றன.

நீங்கள் வசிக்கும் இடத்தை சுற்றி மரங்களை நடவு செய்வது கோடை காலத்தில் உங்கள் வீடுகளை குளிர்விக்கவும், குளிர்காலத்தில் காற்றை தடுக்கவும் உதவும். மேலும் நம்மால் முடிந்த இடமெல்லாம் மரக்கன்றுகளை நடவு செய்வதன் மூலம் நம் பங்கினை செய்யலாம்.

மரங்கள் துர்நாற்றத்தை உறிஞ்சுகிறது, சத்த மாசுபாட்டைக் குறைக்கின்றது, சாலைகள், பாலங்கள் போன்ற திடமான, மனிதனால் உருவாக்கப்பட்ட மேற்பரப்புகளிலிருந்து பிரதிபலிக்கும் வெப்பத்தைக் குறைகின்றது. ஒரு பெரிய விதானத்துடன் கூடிய உயரமான மரங்கள் ஒரு பெரிய பகுதியை உள்ளடக்கி, வெப்பத்தை உறிஞ்சி சுற்றியுள்ள வெப்ப நிலையைக் குறைக்கிறது.

சமீபத்தில் RI சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் ஒரு புதிய கவனம் செலுத்தும் பகுதியாக சேர்த்துள்ளது, மேலும் பல்வேறு தூய்மை பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுச் சூழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எவரெஸ்ட் அடிவார முகாம், பெருங்கடல்கள், கோட்டைகள், கால்வாய்கள், பொது பூங்காக்கள் மற்றும் கோயில்களை சுத்தம் செய்வது போன்ற தூய்மை பிரச்சாரங்கள் நமது சூழலைப் பாதுகாக்க நடத்தப்பட வேண்டும்.

சதுப்புநிலங்கள் கடற்கரைக்கு ஸ்திரத்தன்மையை அளிக்கின்றன. அவை வெள்ளத்தைத் தடுக்கவும் மண் அரிப்பைக் குறைக்கவும் உதவுகின்றன. அவை ஆக்ஸிஜன் குறைவான மண்ணிலும் வளரக்கூடும்.

நாம் அனைவரும் அதிக எண்ணிக்கையிலும் பல்வேறு தளங்களிலும் ஒன்றிணைந்து நமது பூமியை சிறப்பாக மாற்றுவோம். புவி வெப்பமடைதலைக் குறைக்க உதவுவோம் மற்றும் சிறந்த, தூய்மையான மற்றும் பசுமையான சூழலை ஊக்குவிப்போம். உலகின் காலநிலை மாற வேண்டும், நாம் தூய்மையான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் காற்றை சுவாசிக்க வேண்டும். மழைக்காலம் விரைவில் வருகிறது, எனவே இந்த தலைமுறையினருக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் எதிர்காலத்தை மாற்றத் தயாராகுவோம், இதனால் நாம் அனைவரும் அழகான இயற்கையின் மத்தியில் வாழ முடியும்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குநர், 2021–23


**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா



துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், “ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14” என்ற முகவரியில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.



ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம்பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.


இணையதளம்

# களின் செய்திகள்



## நெகிழ்வுத் தன்மையே முக்கியமானது

ஒவ்வொரு நல்ல அர்த்தமுள்ள ரோட்டேரியன் தனது சங்கம் துடிப்பான ஒன்றாக இருக்க வேண்டும் என விரும்புவர். ஒரு துடிப்பான சங்கம் என்னவென்பது பற்றி வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு வரையறைகளைக் கொண்டிருந்தாலும், உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் சங்கம் எப்போதும் துடிப்பானதாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

உறுப்பினர்களின் திருப்திக்கான திறவுகோல் அவர்களின் எதிர் பார்ப்புகளை பூர்த்தி செய்வதில் உள்ளது. பல ஆண்டுகளாக ரோட்டரி விலை உயர்ந்ததாகிவிட்டது என்று பலர் வெளிப்படுத்தியுள்ளனர். வீணான செலவினங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் ஒப்புக்கொள்கிறேன், ஆனால் நாம் அனைவரும் குறைவான முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களுக்கு அதிகமாக செல விடுகிறோம் என்பதும் உண்மைதான். எனவே புரிந்துக் கொள்ளவேண்டியது என்னவென்றால்? உறுப்பினர்கள் புத்திசாலித்தனமாக செலவழிக்க விரும்பும் மிக முக்கியமான ஆதாரம் அவர்களின் பணம் அல்ல, அவர்களின் நேரம்.

இந்த தேவையை பூர்த்தி செய்ய சங்கங்கள் நெகிழ்வாக இருக்க வேண்டும். கடந்த சில ஆண்டு களாக, ஒரு விதியின் மூலம் முன்னர் நிர்வகிக்கப்பட்ட பல விஷயங்களில் முடிவுகளை எடுக்க சங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 'ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்' என்பது இனி கிடையாது. வருகைத் தேவை, சந்திப்பின் இடைவெளி, கூட்டங்களின் தன்மை, சங்கங்களின் வகை, உறுப்பினர்களின் வகைப்பாடு மற்றும் இதுபோன்ற பல சிக்கல் களுக்கு இப்போது சங்கங்கள் தங்களுக்கு ஏற்ற மாற்றங்களைச் செய்ய முடியும், சரியான முடிவுகளை எடுக்க முடியும்.

நம்மிடம் இருக்கும் இந்தப் புதிய அஸ்திரக் களஞ்சியத்தை நாம் உண்மையில் பயன்படுத்துகிறோமா அல்லது மாற்றம் மோசமானது என்ற நம்பிக்கையில் இன்னும் சிக்கிக் கொண்டிருக்கிறோமா? உறுப்பினர்கள் என்ன விரும்புகிறார்கள் மற்றும் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு சங்கம் நெகிழ்வாக உள்ளதா என்பதை மறுபரிசீலனை செய்யுமாறு சங்கங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றம் அவசியம் என்பதை உணரும் போது முன்னேற்றம் தொடங்குகிறது. உறுப்பினர்கள் ரோட்டரிக்கு ஒதுக்கும் நேரம் பயனுள்ளதாய் இருக்கும் வகையில், நம் சங்கங்களை மீண்டும் உருவாக்க முடிவு செய்வோம். மாற்றத்தின் காற்று வீசும் போது, நாம் ஒன்று வளைந்து, வளர வேண்டும் அல்லது கடினமாக இருந்து உடைய வேண்டும். தேர்வு நம்முடையது மற்றும் செய்ய எளிதானது.

A S வெங்கடேஷ்
RI இயக்குநர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் **RI இயக்குநர் மற்றும் RNT தலைவர்** | RID 3232 |
| Dr மகேஷ் கோட்பாகி **RI இயக்குநர்** | RID 3131 |
| Dr பரத் பாண்ட்யா **TRF அறங்காவலர்** | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |
| **RI இயக்குநர் தேர்வு** | |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2022–23)

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி **தலைவர், ஆளுநர் குழு** | RID 3070 |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே **செயலாளர், ஆளுநர் குழு** | RID 3170 |
| Dr N நந்தகுமார் **பொருளாளர், ஆளுநர் குழு** | RID 3232 |
| தினேஷ்குமார் சர்மா **ஆலோசகர், ஆளுநர் குழு** | RID 3100 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

**இதழ்**

# பெரிதாகச் சிந்தியுங்கள், பெரிதாகச் செயல்படுங்கள்



1874ம் ஆண்டு, வின்சென்ட் வான் கா தன் உடன்பிறந்தவர் தியோ-வுக்கு எழுதிய கடிதத்தில், “நீங்கள் இயற்கையை உண்மையாக நேசித்தால், எங்கும் அழகைக் காண்பீர்கள்” என்று எழுதினார்.

இயற்கை உலகின் மீது வான் கா வைத்திருந்த நேசத்தை நீங்கள் அவருடைய ஓவியங்களில் காணலாம்: ஒளிரும் சூரியகாந்திகள், வளைந்த ஆலிவ் மரங்கள், புரோவென்சுக் கிராமம் ஒன்றின்மீது விண்மீன்கள் நிறைந்த இரவு வானம். நீங்கள் இயற்கையை நேசித்தால், அதைப் பராமரிக்கவும் விரும்புவீர்கள். ஏப்ரல் மாதம், ரோட்டரியின் சுற்றுச்சூழல் மாதம், 22ம் தேதி பூமி நாள். இதை முன்னிட்டு நீங்கள் சாலையோரங்களைத் தூய்மைப்படுத்துதல் போன்ற உள்ளூர்த் திட்டங்களை நடத்தலாம். இன்னும் பெரிய அளவிலான ஒரு திட்டத்தை ரோட்டரி அறக்கட்டளை வழியாக நிதி பெற்று நடத்துங்கள்.

பென்சில்வேனியா மற்றும் பிரேசில் ரோட்டரி சங்கங்கள் இணைந்து பணியாற்றி, அறக்கட்டளையின் பன்னாட்டு நல்கை ஆதரவுடன், ரியோ கிளாரா நகரில் உள்ள குப்பை பொறுக்குவோர் கூட்டுறவு அமைப்புக்குப் பிளாஸ்டிக் செயல்முறைப்படுத்தல் கருவியை வழங்கின. குப்பைத் தொட்டி களில் இருந்து மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைத் திரட்டும் இந்த ஊழியர்கள் இதன்மூலம் தங்கள் வருவாயை 50% பெருக்கிக்கொண்டார்கள், கூட்டுறவை விரிவாக்கினார்கள், இன்னும் தூய சுற்றுச்சூழலுக்குப் பங்களித்தார்கள்.

அறக்கட்டளையின் பெரிய அளவுத் திட்டங்களுக்குப் பின்னால் உள்ள முதன்மை யோசனைகளில் ஒன்று, பெரிதாகச் செயல்படுதல். இங்கு திட்டங்கள் 3 முதல் 5 ஆண்டுகளில் நடைபெறுகின்றன. இவற்றுக்கு வழங்கப்படும் $2 மில்லியன் நல்கை களப்பணியை ஊக்குவித்து, நெடுங்காலம் வளங் குன்றா மாற்றத்துக்கான சாத்தியத்தை நிறைவுசெய்கிறது. 2021–22 பெரிய அளவுத் திட்ட நல்கையைப் பெற்றுள்ள “நைஜீரியாவில் நலமான குடும்பங்களுக்காக இணைந்து உழைத்தல்”, நைஜீரியாவில் தாய், புதிதாகப் பிறந்த குழந்தை இறப்பு விகிதங்களைக் குறைக்கும் இலக்குடன் தீர்வுகளை நாடிக் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறது.

பெரிய அளவுத் திட்ட நல்கைகள் உங்களுடைய அறக்கட்டளை நல்கைத் திட்டங்களிலிருந்து எதையும் குறைத்து விடுவதில்லை; ஒப்பீட்டளவில், இங்கு முதலீடு செய்யப்படும் தொகை அறக்கட்டளையின் மொத்தத் தொகையில் ஒரு சிறு பகுதிதான். அத்துடன், பெரிய அளவுத் திட்டங்கள் இன்னும் சிறந்த கூட்டுப்பணிகளை வளர்க்கும்படி ரோட்டரி அறக்கட்டளை அவற்றை வடிவமைத்துள்ளது. இதனால், முன்னெடுப்புகளுக்கு இணைந்து நிதியளித்தலும் சாத்தியமாகலாம். அதனால், இந்த மாதம் பெரிய அளவில் சிந்தியுங்கள், சுற்றுச்சூழலைப்பற்றி, பன்னாட்டு நல்கைகளைப்பற்றி, பெரிய அளவுத் திட்டங்களைப்பற்றி...

**இயன் ரிஸ்லி**

TRF அறங்காவலர் தலைவர்



# சிறந்த துணை நிகழ்ச்சிகள்

**ரோஸ் ஷில்லிங்**



2022 ஹூஸ்டனில் நடைப்பெற்ற RI கன்வென்ஷனில் ஒரு துணை நிகழ்ச்சி.

ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில், பெரிய யோசனைகளும் ஊக்கங்களும் முதன்மை மேடையைத் தாண்டியும் கிடைக்கும். மெல்பர்னில் நடைபெறவுள்ள பல்வேறு துணை நிகழ்ச்சிகளில் சக ரோட்டரி உறுப்பினர்கள் வழங்கும் வல்லுனர் அறிவுரைகளை நீங்கள் உங்கள் சங்கங்களுக்குக் கொண்டுசென்று அவற்றின் தாக்கத்தை மேம்படுத்தலாம், உங்கள் சொந்த ரோட்டரி அனுபவத்தை இன்னும் சிறப்பாக்கலாம்.

மே 27 முதல் 31வரை நடைபெறும் இந்த மாநாட்டின் போது, இந்தத் துணை நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துக் கலந்துகொள்ளுங்கள், ஒரு தலைவராக உங்களுடைய கேட்டல் “சிறப்புத்திறனை” எப்படிப் பயன்படுத்துவது என்பதில் தொடங்கி, ஓர் உள்ளூர்ப் பொருளா தாரத்தைத் திரும்பக் கட்டமைப்பதற்கு நீங்கள் எப்படி உதவலாம் என்பதற்கான வழிகள்வரை கற்றுக்கொள்ளுங்கள். ரோட்டரி உறுப்பினர்களும் வல்லுனர்களும் ரோட்டரி செயல் திட்டத்தை வாழ்வது, உலகின் மிகப் பெரிய சவால்களைச் சமாளிக்க உங்களால் இயன்றதைச் செய்வது, உங்கள் தலைமைத் திறன்களை மேம் படுத்துவது, குழுவில் பன்முகத்தன்மையை வளர்ப்பது, புதியவர்களுக்கு ஆர்வம் ஊட்டுவது ஆகியவற்றுக்கான உதவிக் குறிப்புகளை வழங்குவார்கள்.

நீங்கள் கலந்துகொள்ள விரும்பும் பயிலகங்களைத் திட்டமிட, மாநாட்டு இணையத் தளத்தில் நிகழ்வு களின் முழுமையான தொடக்கப் பட்டியலைப் பாருங்கள். இந்த நிகழ்ச்சிகள் மே 29லிருந்து 31வரை நடைபெறும். முன்பதிவு தேவையில்லை, முதலில் வருவோருக்கு இருக்கைகள் வழங்கப்படும்.

மேலும் அறிய, பதிவு செய்ய: **convention.rotary.org.**

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on March 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,407 | 7.32 | 71 | 462 | 55 | 243 |
| 2982 | 82 | 3,731 | 6.92 | 30 | 760 | 114 | 76 |
| 3000 | 132 | 5,485 | 10.19 | 103 | 1,623 | 325 | 215 |
| 3011 | 123 | 4,719 | 28.42 | 82 | 2,607 | 144 | 37 |
| 3012 | 151 | 3,767 | 23.17 | 73 | 1,278 | 94 | 61 |
| 3020 | 84 | 4,903 | 7.20 | 41 | 1,160 | 168 | 350 |
| 3030 | 101 | 5,448 | 14.94 | 126 | 2,171 | 371 | 383 |
| 3040 | 115 | 2,622 | 15.75 | 59 | 784 | 94 | 190 |
| 3053 | 66 | 2,853 | 16.37 | 35 | 566 | 55 | 128 |
| 3054 | 169 | 6,958 | 19.80 | 107 | 1,536 | 209 | 575 |
| 3060 | 102 | 4,988 | 14.86 | 66 | 2,371 | 81 | 149 |
| 3070 | 127 | 3,443 | 16.47 | 47 | 557 | 64 | 59 |
| 3080 | 107 | 4,331 | 12.86 | 120 | 2,234 | 215 | 116 |
| 3090 | 104 | 2,421 | 5.33 | 46 | 636 | 120 | 164 |
| 3100 | 106 | 2,257 | 13.65 | 14 | 125 | 39 | 151 |
| 3110 | 143 | 3,953 | 12.42 | 16 | 126 | 33 | 106 |
| 3120 | 89 | 3,684 | 15.74 | 35 | 398 | 36 | 55 |
| 3131 | 142 | 5,725 | 24.80 | 136 | 3,013 | 265 | 144 |
| 3132 | 91 | 3,648 | 12.88 | 37 | 514 | 127 | 168 |
| 3141 | 111 | 6,200 | 26.79 | 149 | 6,579 | 231 | 170 |
| 3142 | 103 | 3,906 | 21.25 | 90 | 3,040 | 149 | 88 |
| 3150 | 112 | 4,401 | 13.02 | 151 | 2,034 | 160 | 127 |
| 3160 | 78 | 2,771 | 9.17 | 32 | 233 | 20 | 82 |
| 3170 | 145 | 6,755 | 15.97 | 104 | 1,825 | 272 | 177 |
| 3181 | 87 | 3,650 | 10.19 | 37 | 423 | 224 | 117 |
| 3182 | 88 | 3,653 | 10.13 | 44 | 192 | 132 | 106 |
| 3190 | 168 | 6,967 | 20.11 | 219 | 5,242 | 288 | 74 |
| 3201 | 169 | 6,591 | 9.92 | 131 | 1,921 | 115 | 91 |
| 3203 | 94 | 4,956 | 7.77 | 75 | 972 | 244 | 39 |
| 3204 | 75 | 2,544 | 7.27 | 23 | 194 | 33 | 13 |
| 3211 | 156 | 5,128 | 8.54 | 8 | 108 | 32 | 133 |
| 3212 | 127 | 4,787 | 11.45 | 85 | 3,527 | 303 | 153 |
| 3231 | 96 | 3,467 | 8.34 | 37 | 411 | 99 | 417 |
| 3232 | 171 | 6,846 | 20.01 | 136 | 7,543 | 246 | 101 |
| 3240 | 109 | 3,675 | 16.79 | 71 | 1,438 | 206 | 226 |
| 3250 | 103 | 3,909 | 21.18 | 68 | 1,050 | 85 | 188 |
| 3261 | 90 | 3,274 | 19.95 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 125 | 3,860 | 14.61 | 75 | 756 | 662 | 277 |
| 3291 | 152 | 3,993 | 25.04 | 138 | 2,034 | 111 | 696 |
| **India Total** | **4,529** | **172,676** | | **2,934** | **62,493** | **6,247** | **6,689** |
| 3220 | 72 | 2,147 | 16.21 | 98 | 5,042 | 145 | 77 |
| 3271 | 167 | 3,357 | 18.05 | 166 | 2,546 | 270 | 28 |
| 3272 | 162 | 2,323 | 14.94 | 70 | 938 | 22 | 47 |
| 3281 | 311 | 7,329 | 18.27 | 281 | 2,268 | 157 | 207 |
| 3282 | 184 | 3,642 | 10.21 | 202 | 1,717 | 50 | 47 |
| 3292 | 154 | 5,802 | 18.80 | 184 | 4,928 | 148 | 133 |
| **S Asia Total** | **5,579** | **197,276** | | **3,935** | **79,932** | **7,039** | **7,228** |

*Source: RI South Asia Office*

## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,947 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,207 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 19,053 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,745 |
| ரோட்டரியினர் | : | 1,192,270 |
| ரோட்டராக்டர்கள் | : | 174,895 |
| இன்டராக்டர்கள் | : | 438,219 |

As on March 15, 2023

# பெண்களுக்கு தன்னம்பிக்கை வளர்க்கும் ரோட்டரி திட்டம்

ரஷீதா பகத்

“17 வயது விவேகமான, புத்தி சாலியான பெண், ஒளிரும் கருந்தோலுடன், அழகான கருமையான, நீளமான, சுருள் முடி கொண்டவர், எழுந்து நின்று தன் கருமையான நிறத்தின் காரணமாக தன் வகுப்புத் தோழிகளால் ஒதுக்கப் பட்டதாகவும், யாரும் அவருடன் நண்பராக இருக்க விரும்பவில்லை என்றும் கூறியதை கேட்கும்போது என் நெஞ்சம் வலித்தது என்கிறார் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், ஒரு



சிறந்த கல்வியாளர் மற்றும் ஊக்கமளிக்கும் பேச்சாளர்.

DG V R முத்துவின் சிந்தனையில் உருவான யாதுமானவள் என்ற தலைப்பில் RI மாவட்ட 3212 இன் முதல் பெண்களுக்கான அதிகாரமளிக்கும் திட்டத்தில் முதன்மைப் பேச்சாளராக இருக்கிறார்

இத்திட்டத்தின் கீழ், திட்டத் தலைவர், RC விருதுநகர் உறுப்பினரான K விஜயகுமாரியுடன், முக்கியமாக RID 3212 உள்ள கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அவர் பேசுகிறார்.

“சிவகாசியைச் சேர்ந்த அழகான, திறமையான, புத்திசாலியான 17 வயது சிறுமி” சவிதாவிடம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) திரும்புவோம். அமர்வின் கேள்வி-பதில் பகுதியின் போது எழுந்து நின்று, அவரது கருமையான நிறத்தின் காரணமாக அவரது பள்ளித் தோழர்களால் அவள் நிராகரிக்கப்பட்டதால், தன் சுயநம்பிக்கை மிகவும் மோசமாகி விட்டதைக் குறித்து வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

என் வாழ்நாளில் இதுவரை நான் சந்தித்திராத, ஒளிரும் நிறமுள்ள இளைஞர்களில் நீங்களும் ஒருவர், வேறொருவரின் அளவுகோல்களை வைத்து உங்களை ஏன் அளவிடுகிறீர்கள் என்று பதிலுக்கு நான் கேட்டபோது, நான் சொல்வதை புரிந்து கொள்ளவும் ஜீரணிக்கவும்



அவர் சிறிது நேரம் எடுத்து கொண்டார்'' என கோயம்புத்தூரில் உள்ள PSG கல்லூரியின் ஆங்கிலத் துறையின் முன்னாள் தலைமை அதிகாரியான ஜெயந்தஸ்ரீ கூறுகிறார், மேலும் தனது தோற்றம் அல்லது நிறம் குறித்து யாரோ ஒருவர் தன்னைப் பாராட்டுவது இதுவே முதல் முறை என்பதால் ''அவரால் அதை ஒரு பாராட்டு என்று கூட அடையாளம் காண முடியவில்லை... நான் அவளை கிண்டல் செய்வது போல் அவள் முகத்தில் ஒரு சந்தேகம் நீடித்தது. நான் என்ன சொல்கிறேன் என்பதை உணர அவளுக்கு சிறிது நேரம் பிடித்தது, பின்னர் அவள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, அழ ஆரம்பித்தார்.

இந்த அமர்வுகள் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு ஜெயந்தஸ்ரீ உடன் எப்போதும் செல்லும் விஜயகுமாரி இருவருக்கும் இந்த காட்சி, பல இளம்பெண்கள் தங்கள் உடல் தோற்றத்தால் நம் சமூகத்தில் எவ்வளவு கீழ்த்தரமான மதிப்பைப் பெறுகிறார்கள் என்பதற்கு ஒரு கண்ணாடி. ''பெண்களுக்கு அதிகாரமளிக்கும் இந்த மாவட்டத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டின் கிராமப்புற பெண் குழந்தைகளின் வீட்டு வாசலில் யாதுமானவள் அமர்வுகளை கொண்டு சென்று, அவர்கள் நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் வெளியே வர உதவுகிறோம்.'' என விஜயகுமாரி கூறுகிறார்.

ஜெயந்தஸ்ரீ உலகப் புகழ்பெற்ற ஊக்கமளிக்கும் பேச்சாளர் என்பதாலும், இளைஞர்களை பேச வைக்கும் மற்றும் அவர்களின் கனவுகளை அடைய அவர்களைத் தூண்டும் திறமையும் அவரிடம் இருப்பதால், இந்த அமர்வுகளில் உரையாற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அவர் மேலும் கூறுகிறார். ''அவர் மாணவர்களின் மனத் தடையிலிருந்து வெளியே வர உதவுவதற்காக அவர்களுடன் ஈடுபடுகிறார், மேலும் அமர்வுகள் நடக்க, மாணவர்கள் அவருடன் தொடர்பை உணரத் தொடங்கி அவர்களின் நீண்டகால சந்தேகங்களைத் தெளிவுபடுத்தி



கொள்கிறார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால், அவர்கள் தங்கள் சொந்த தாய்களிடம் கூட கேட்காத கேள்விகளை அவரிடம் கேட்கிறார்கள்! சிறுமிகளின் இந்த உளவியல் மாற்றம் அவர்களின் சுதந்திரம், வளர்ச்சி மற்றும் வாழ்க்கையில் வெற்றிக்கான முதல் படி என்று நாங்கள் நம்புகிறோம்.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கிய இத்திட்டம், முத்து ஆளுநராக வருவதற்கு முன்பே அவரது சொந்த நிறுவனமான இதயம் எடிபிள் ஆயில்ஸ் மற்றும் அருண் ஐஸ்கிரீம்ஸ் மூலம் நிதியுதவி செய்யப்பட்டு, தென் தமிழகத்தின் உள்பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் 45க்கும் மேற்பட்ட அமர்வுகளை நடத்திய பிறகு, கிராமப்புற பெண்கள் கவலை மற்றும் மனச்சோர்வு போன்ற பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை பெண்கள் இருவரும் உணர்ந்தனர், அவர்கள் மீது தொடர்ந்து வீசப்படும் கருத்துக்கள் மற்றும் துஷ்பிரயோகங்களால் ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு, குறைந்த தன்னம்பிக்கையுடன் போராடுகிறார்கள்.

ஒரு உட்பகுதியில் நடைபெற்ற அமர்வுகளில் ஒன்றில் இருந்து திரும்பி வரும் இந்த இரு பெண்களுடனும் நான் உரையாடினேன், அந்த அமர்வு மாதவிடாய் மற்றும் MHM பற்றியது என்று ஜெயந்தஸ்ரீ விளக்குகிறார், மேலும் ஹாலில் பல சிறுவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் விவாதத்தில் தீவிரமாக ஈடுபட்டு, மிகுந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.






*ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் மாணவிகளுடன்.*

சானிட்டரி பேட்களின் மேல் தண்ணீர் ஊற்றப்பட்ட வீடியோக்கள் அல்லது காட்சிகள் காட்டப்பட்ட போது நீங்கள் வழக்கமாகக் காணும் கூச்சல் அல்லது விசில் எதுவும் அங்கே இல்லை. பெண்களின் உடல் ரீதியான பிரச்சனைகள் குறித்தும், அவர்களிடமிருந்து நமக்கு எப்படிக் கவனம் மற்றும் ஆதரவு தேவை என்பதைப் பற்றியும் ஆண்களுக்கு உணர்த்த வேண்டும்.

நம் சமூகங்களில் இளம் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கும் போது மிகவும் உண்மையாக இருப்பதையும் மற்றும் நேரடியாக விஷயத்திற்கு வருவதை அவர் தவறாமல் செய்கிறார். ''எங்கள் அமர்வுகளில் பாலின பிரச்சனைகளை பூசி மொழுகுவதில்லை. இந்த பிரச் சனைகளை பற்றி நாங்கள் மிகவும் உண்மையான தொனியில் பேசு கிறோம். பெண்கள் இரக்கத்திற் காகவோ அனுதாபத்திற்காகவோ பிச்சை எடுக்கவில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்; அவர்களுக்குத் தேவையானது புரிதலும் பச்சாதாபமும் மட்டுமே.'' ஆண் மாணவர்களைச் இதில் சேர்ப்பது மிகவும் முக்கியமானது, அவர்கள் வளர்ந்து ஒரு குடும்பத்தைத் தொடங்கும்போது, அரைகுறையாக இல்லாமல் வளர்ந்த மற்றும் முதிர்ந்த மனிதர்களாக தங்கள் குடும்பப் பொறுப்பை ஏற்கத் தயாராக இருப்பார்கள்.''



கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த பெண் மாணவர்களால் எழுப்பப்படும்/கேட்கப்படும் பொதுவான பிரச்சினைகள்/கேள்விகள் குறித்து வினா எழுப்ப, ஜெயந்தஸ்ரீ, அவை பெரும்பாலும் தாழ்வு மனப்பான்மையை எவ்வாறு சமாளிப்பது என்பதோடு தொடர்புடை யவை என்கிறார். ''பெரும்பாலான இளம்பெண்களைப் போலவே, அவர்கள் தங்கள் உடல் தோற்றத்தைப் பற்றி மிகவும் நிச்சயமற்றவர்களாக இருக்கிறார்கள், துரதிர்ஷ்டவசமாக, அழகு பராமரிப்புத் துறையின் அழுத்தத்தினால் இது அவர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சமாக உள்ளது. அதைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். எனவே தான் சவிதாவின் உதாரணம், அவள் அழகான பளபளப்பான தோலும் நிறமும் கொண்டிருந்தாலும் அவளது கருமையான நிறத்தை சமாளிக்க முடியாத நிலை.

மற்றொரு பொதுவாக எழுப்பப் படும் கேள்வி, மேடை பயத்தை எவ்வாறு சமாளிப்பது என்பது. இந்த பெண்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்த ஆசிரியர்களுடனான அமர்வுகளின் போது கூட பேச பயப்படுகிறார்கள். எனவே பல நிறுவனங்களில் பெண்கள் மனம் திறந்து பல நேர்மையான மற்றும் வழக்கத்திற்கு மாறான கேள்விகளைக் கேட்க ஆர்வமாக இருக்கும்போது, ஜெயந்தஸ்ரீ சிறுமிகளை வெளிப்படையாக பேச

வைப்பதை கண்டு பல ஆசிரியர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். மேடை பயத்தைப் போக்குவது பற்றிய கேள்விகள் வரும்போது, சில சமயங்களில் நான் கேள்வியைக் கேட்காதது போல் பாசாங்கு செய்து, அந்த பெண்ணை மேடைக்கு வந்து கேட்கச் சொல்வேன். அவள் அதைச் செய்யும்போது: 'பாருங்கள்; இப்போது நீங்கள் மேடையில் இருந்து பேசி விட்டீர்கள், இனி மேடையில் பயப்படத் தேவையில்லை! என்று அவர்களிடம் சொல்வேன்.




பெண்கள் சாலைகளில் நடக்கும் போது அல்லது பேருந்துகளில் செல்லும்போது கிண்டல் மற்றும் ஈவ் டீசிங்கை எவ்வாறு கையாள்வது என்பது மற்ற பொதுவான கேள்விகள். அதிர்ஷ்டவசமாக, ஒரு இடத்தில் பார்வையாளர்களின் மத்தியில் சில பெண் காவலர்கள் இருந்தனர், மேலும் அவர்கள் சிறுமிகளிடம் நீங்கள் செய்ய வேண்டியது முதல்வரிடம் புகார் செய்வது தான், அவர் உங்கள் புகாரை எங்களுக்கு அனுப்புவார், அந்த குற்றவாளிகளை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று கூறினார்கள்.

இளம் பெண்களுடனான இது போன்ற உரையாடல்களுக்குப் பிறகு மிகவும் தெளிவாகத் தெரியும் ஒரு அம்சம் என்னவென்றால், அவர்கள் விரும்புவது அவர்களின் பெற்றோர்கள் அவர்களிடமிருந்து விரும்புவதை விட மிகவும் வித்தியாசமானது என்பது. உதாரணமாக, இரு பெண்கள் பாதுகாப்புப் படைகளில் சேர மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும் ஆனால் அவர்களது பெற்றோர்கள் இந்த யோசனைக்கு எதிராக இருப்பதாகவும் சொன்னார்கள். "ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவி என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார், அவர் தன் பெற்றோரை எப்படி நம்பவைப்பது என்று தெரிந்து கொள்ள விரும்பினார்... நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் தங்கள் பெற்றோரைப் பற்றி புகார் செய்யவில்லை... அவர்களை 'நம்ப வைப்பது' என்பதுதான் பயன்படுத்தப்பட்டது. எனவே, நகர்ப்புறங்களில் உள்ள இளம் வயதினர் எதிர்ப்பது போலல்லாமல், இந்தச் சிறுமிகளின் அணுகுமுறை மிகவும் வித்தியாசமாகவே உள்ளது, என்று அவர் கூறுகிறார்.

விஜயகுமாரி மற்றும் ஜெயந்தஸ்ரீ இருவரும் சுட்டிக் காட்டுகையில், பல பெண்கள் தங்களை திருமணம் செய்ய கூறும் பெற்றோருடன் போராடுகிறார்கள், அதே நேரத்தில் பெண்கள் தங்கள் கல்வியைத் தொடரவும், பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க வேலை தேடவும் ஆர்வமாக உள்ளனர். "அவர்களில் பலர் என்ன செய்ய






வேண்டும் என்று என்னிடம் கேட்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது... கோபப்படாதீர்கள், அழாதீர்கள் அல்லது உங்கள் அறையில் உங்களைப் பூட்டிக் கொள்வது அல்லது உங்கள் உணவை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது போன்ற அழுத்தத் தந்திரங்களைப் பயன்படுத்தாதீர்கள். சாதாரணமாக நடந்து கொள்ளுங்கள், அவர்களை நம்ப வைக்க முயற்சி செய்யுங்கள்... உயர்கல்விதான் உங்களுக்குச் சிறந்த விஷயம் என்ற உங்கள் பார்வைக்கு அவர்களைக் கொண்டு வர முயற்சிக்கவும். ஒவ்வொரு நாளும் தவறாமல் செய்யுங்கள், உங்கள் கனவை ஆதரிக்க வேண்டும் என்பதை அவர்கள் மெதுவாகப் புரிந்துகொண்டு அதைச் செய்வார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், என்கிறார் ஜெயந்தஸ்ரீ. அவர்களின் கண்களைப் பார்த்து, நான் பிறந்ததில் இருந்தே என்னை உங்களுக்குத் தெரியும் என்று அவர்களிடம் சொல்லுங்கள், நான் விரும்புவதை நீங்கள் புரிந்துகொண்டு ஆதரிக்கவில்லை என்றால், வேறு யார் செய்வார்கள்? என கேளுங்கள்.

அரசு உதவி பெறும் பள்ளியின் ஓய்வுபெற்ற தலைமையாசிரியை விஜயகுமாரி, தனது சங்கத்தின் முன்னாள் தலைவி, திருமணத்திற்குப் பிறகும் தங்கள் கணவர்களின் ஆதரவுடன் கல்வியைத் தொடரும் பல பெண்களின் உதாரணங்களையும் சிறுமிகளுக்கு வழங்குவதாக கூறுகிறார், இது ஆராய்ச்சியாளர் மாணவர்கள் மத்தியில் அதிகமாக காணப்படுகிறது. “எனவே, உங்களுக்கு திருமணம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றால், உங்கள் கல்வியைத் தொடர உங்கள் கணவர்கள் மற்றும் மாமியார்களின் ஆதரவைப் பெற முயற்சிக்கவும் என நாங்கள் அவர்களிடம் சொல்கிறோம்.”

காதல் அல்லது பாலுறவு பற்றிய கேள்விகளைப் பற்றி நான் ஜெயந்தஸ்ரீயிடம் கேட்க. “எதுவும் இல்லை,” என அவர் உறுதியாக சொல்கிறார். நாங்கள் 45 சந்திப்புகள் மூலம் 60,000க்கும் மேற்பட்ட இளம்பெண்களை சந்தித்துள்ளோம், மேலும் எந்தவொரு குழந்தையும் காதல் அல்லது சினிமாவால் ஊட்டப்பட்ட கலாச்சாரத்துடன் தொடர்புடைய எதை பற்றியும் பேசுவதை நாங்கள் கண்டதில்லை. பேச்சு அவர்களின் எதிர்காலத்தைப் பற்றியதாக இருக்கும்போது, நீங்கள் மிகவும் நேர்மறையான விஷயங்களில் கவனம் செலுத்தும் போது, அவர்களே மிகவும் தீவிரமான மற்றும் முதிர்ந்த கேள்விகளைக் கேட்கிறார்கள், இது அவர்களின் ஆசிரியர்களுக்கு, ஏன் எங்களிடம் இப்படி வெளிப்படையாக இல்லை என்று ஆச்சரியப்பட வைக்கிறது!

அவர் மேலும் கூறுகிறார்: இன்று எங்களின் 45வது அமர்வு, இந்தச் சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் தேவைப்படுவது ஒரு ஜோடி காதுகளும், கேட்கும் இதயமும் மட்டுமே என்பதை நான் மீண்டும் மீண்டும் உணர்ந்து கொண்டிருக்கிறன். நீங்கள் அவர்கள் சொல்வதை கேட்கத் தயாராக இருந்தால்; நீங்கள் நேர்மையானவர் மற்றும் அவர்களுக்கு உதவ விரும்புகிறீர்கள் என்று நீங்கள் அவர்களை நம்பவைத்தால்... இரண்டு நிமிடங்களில் உங்கள் துடிப்பை அவர்களால் உணர முடியும்..., அவர்கள் தங்கள் இதயங்களை திறந்து உங்களிடம் கொட்டுவார்கள். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய ரோட்டரிக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். நம் போலி ஞானத்தில், இந்த குழந்தைகளைப் பற்றி நமக்கு எல்லாம் தெரியும் என்று நாம் நினைக்கிறோம், ஆனால் நாம் அவர்களுக்கு முன்னால் நிற்கும் போது, அவர்கள் இதுபோன்ற ஆழமான மற்றும் முதிர்ந்த கேள்விகளைக் கேட்பதைக் கண்டால் அது உங்களை முற்றிலும் தேவையற்றதாக உணர வைக்கும். இது எனக்கு ஒரு மறுகற்றல் அனுபவமாக உள்ளது. ஒரு சில பெண்களையாவது தங்கள் தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபட என்னால் உதவ முடிந்தால், அது எனக்கு அர்த்தமுள்ளதாக இருக்கும்.

14 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களுடனான அமர்வுகளின் மைய நோக்கம், “வாழ்க்கை ஒரு சவால் அல்ல, ஒரு பெரிய வாய்ப்பு என்பதை அவர்களை நம்ப வைப்பதாகும். தோல்வி என்பது வாழ்க்கையின் இன்றியமையாத அங்கம் என்பதை இந்தப் பெண்களுக்கு உணர்த்தவும், அடுத்து என்ன? என்று கேட்கும் தைரியத்தை வளர்க்கவும் நாங்கள் முயற்சி செய்கிறோம் என்று விஜயகுமாரி மேலும் கூறுகிறார்.

இத்திட்டத்தின் மூளையாக செயல்பட்ட DG முத்து, மகாகவி பாரதியாரின் கவிதைகளில் இருந்து தான் பெண் குழந்தைகளை மேம்படுத்தும் எண்ணத்தை பெற்றதாக கூறுகிறார். இந்தியாவின் பெரும்பாலான இடங்களில், குறிப்பாக தமிழ்நாட்டில், ஆண்கள் எப்போதும் முன்னணியில் இருக்கிறார்கள், எனவே பெண்கள் மேல் கவனத்தை ஈர்க்கும் ஒரு திட்டத்தை நான் தேடினேன், குறிப்பாக கிராமப்புறங்களில், சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எங்கள் ஆதரவு மிகவும் தேவைப் பட்டது. யாதுமானவள் அதற்கு சரியான பதில் என்று நான் நம்புகிறேன்.

ஒருவேளை, அவருக்கு மூன்று பேத்திகள் இருப்பதும், திட்ட யோசனை அவருக்கு தோன்றுவதற்கு பங்களித்திருக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறுகிறார். “இதன் வெற்றியைக் கண்டு, தமிழகம் முழுவதும் உள்ள எந்தவொரு ரோட்டரி சங்கத்துடனும் இணைந்து இந்த திட்டத்தின் பலன்களை மாநிலம் முழுவதும் அடைய செய்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவோம்.” ■




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


# District Wise TRF Contributions as on January 2023

Interim Results (in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | **India** | | |
| 2981 | 19,151 | 512 | 0 | 1,125 | 20,788 |
| 2982 | 10,196 | 2,238 | 4,061 | 33,116 | 49,611 |
| 3000 | 23,610 | 3,169 | 0 | 0 | 26,779 |
| 3011 | 38,119 | 8,063 | 25,127 | 238,088 | 309,396 |
| 3012 | 13,280 | 752 | 65,235 | 140,713 | 219,980 |
| 3020 | 106,894 | 7,902 | 40,000 | 400 | 155,196 |
| 3030 | 51,772 | 290 | 0 | 1,275 | 53,337 |
| 3040 | 18,660 | 2,006 | 0 | 22,156 | 42,822 |
| 3053 | 41,122 | 136 | 0 | 0 | 41,258 |
| 3054 | 9,130 | 826 | 0 | 31,500 | 41,456 |
| 3060 | 71,305 | 1,500 | 0 | 64,635 | 137,440 |
| 3070 | 47,956 | 2,570 | 50,233 | 11,296 | 112,055 |
| 3080 | 27,492 | 7,482 | 0 | 38,163 | 73,137 |
| 3090 | 8,368 | 0 | 5,651 | 0 | 14,019 |
| 3100 | 52,929 | 400 | 25,012 | 0 | 78,341 |
| 3110 | 21,034 | 454 | 24,304 | 631,051 | 676,843 |
| 3120 | 23,823 | 411 | 0 | 0 | 24,234 |
| 3131 | 305,668 | 8,789 | 36,315 | 302,254 | 653,026 |
| 3132 | 40,636 | 2,391 | 50,000 | 2,012 | 95,039 |
| 3141 | 681,895 | 32,756 | 102,003 | 1,451,865 | 2,268,519 |
| 3142 | 195,175 | 3,721 | 24,866 | 77,045 | 300,807 |
| 3150 | 76,936 | 27,423 | 43,012 | 417 | 147,788 |
| 3160 | 3,749 | 2,363 | 0 | 3,675 | 9,786 |
| 3170 | 80,673 | 33,854 | 15,506 | 862 | 130,895 |
| 3181 | 77,084 | 622 | 25 | 912 | 78,644 |
| 3182 | 36,769 | 2,789 | 0 | 0 | 39,559 |
| 3190 | 63,921 | 7,350 | 38,170 | 36,593 | 146,034 |
| 3201 | 95,560 | 23,874 | 12,295 | 414,030 | 545,760 |
| 3203 | 7,124 | 12,833 | 1,000 | 30,054 | 51,011 |
| 3204 | 5,645 | 806 | 0 | 152 | 6,603 |
| 3211 | 73,343 | 5,065 | 10,000 | 1,049 | 89,458 |
| 3212 | 178,860 | 37,834 | 305 | 52,146 | 269,145 |
| 3231 | 60,394 | 23,432 | 32,278 | 11,569 | 127,672 |
| 3232 | 60,503 | 58,338 | 19,358 | 201,544 | 339,743 |
| 3240 | 80,731 | 14,913 | 1,000 | 3,622 | 100,266 |
| 3250 | 13,030 | 290 | 0 | 13,605 | 26,925 |
| 3261 | 16,616 | 917 | 0 | 5,277 | 22,809 |
| 3262 | 46,043 | 463 | 700 | 34,012 | 81,218 |
| 3291 | 50,452 | 1,172 | 40,533 | 8,190 | 100,348 |
| **India Total** | **2,835,646** | **340,708** | **666,989** | **3,864,404** | **7,707,747** |
| 3220 **Sri Lanka** | 48,474 | 8,333 | 4,000 | 226 | 61,033 |
| 3271 **Pakistan** | 25 | 22,125 | 0 | 250 | 22,400 |
| 3272 **Pakistan** | 455 | 12,687 | 0 | 5,000 | 18,142 |
| 3281 **Bangladesh** | 58,696 | 3,546 | 22,125 | 154,245 | 238,612 |
| 3282 **Bangladesh** | 46,640 | 6,701 | 2,000 | 10,320 | 65,662 |
| 3292 **Nepal** | 165,773 | 20,236 | 49,167 | 29,830 | 265,006 |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office


ADVT.
Saaral
YOURS NATURALLY
NATURAL NATIVE NUTRITION
Amla with Honey
Amla VITA-CANDY SIMPLY SWEET
Amla VITA-CANDY DESI MASALA
Vita-C for Immunity
ULTIMATE ATTA
MULTI-MILLET COOKIES
GULKAND
NATIVE SOUPS
NATIVE RICES
NATIVE MILLETS
www.saaralstore.com | info@saaralfoods.com

Rotary PEOPLE OF ACTION

# தொலைநோக்கியை உருவாக்கிய பஞ்சாயத்து பள்ளி மாணவர்கள்

ஜெய்ஸ்ரீ

சமீபத்தில் மாலை வானத்தில் சுக்கிரன் - வியாழன் இணைவதை நம்மில் பெரும்பாலோர் வெறும் கண்களால் பார்த்தபோது, கோயம்புத்தூர் அருகே உள்ள துடியலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள் தாங்கள் உருவாக்கிய சொந்த தொலைநோக்கி மூலம் வான நிகழ்வை ரசித்தார்கள்.

20 மாணவர்கள் சேர்ந்து ஒரு தொலைநோக்கியை உருவாக்கி அதை தங்கள் பள்ளிக்கு அர்ப்பணித்தது ஒரு சிலிர்ப்பான தருணம். கோயம்புத்தூர் புறநகர்ப் பகுதியான துடியலூரில் உள்ள அரசுப் பள்ளியில் ப்ராஜெக்ட் வின்வேலியின் கீழ், மெட்ரோ டைனமிக்ஸ் RID 3201 இன் RC இ-கிளப் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட சிறப்புப் பட்டறை மூலம் இந்த தனித்துவமான சாதனை நிகழ்த்தப்பட்டது. ஓபன் ஸ்பேஸ் ஃபவுண்டேஷனின் (OSF) தொழில்நுட்ப வல்லுநர்கள் 6–8 வகுப்புகளின் இளம் குழுவை தொலைநோக்கியை உருவாக்குவதில் வழிகாட்டினர்கள்.

இந்தக் குழந்தைகள் வானியலுக்கு புதியவர்கள் அல்ல என்கிறார் திட்டத்தலைவர் வித்யா தத்தமங்கலம். அவர்களின் ஆர்வத்தைத் தூண்டியது அவர்களின் ஆங்கில ஆசிரியை சித்ரா. 2019இல், சோலார் ஃபில்டர் மூலம் சூரியனைப் பார்க்க அவர்களுக்கு உதவினார். இந்த இளம் மனங்களில் ஒரு விஞ்ஞான தீப்பொறியை பற்ற வைக்க OSF மூலம் இதை ஏற்பாடு செய்திருந்தார். “அது அவர்களின் பள்ளி வாழ்க்கையில் அற்புதமான செயல் ஒன்றின் ஆரம்பம். மேலும் கடந்த ஆண்டு செப்டம்பரில் சர்வதேச சிறுகோள் தேடல் பிரச்சாரத்தில் சில குழந்தைகள் பங்கு பெற்றனர், என்கிறார் வித்யா.



*கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் M ப்ரதாப் துடியலூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் மாணவர் ஒருவருக்கு தொலைநோக்கியில் வானை ஆராய உதவுகிறார்.*



*மாணவி ஒருவர் தொலைநோக்கியை உருவாக்கும் பணியில்.*

OSF, பள்ளி வளாகத்தில் தொலைநோக்கி அமைக்க அணுகியபோது, சித்ரா திட்டத்திற்கு நிதியுதவி செய்ய எங்களை அணுகினார். இந்தப் பயிற்சிப் பட்டறை குழந்தைகளுக்கு எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதை உணர்ச்சிப்பூர்வமாக விளக்கினார். நாங்கள் உடனடியாக உதவ ஒப்புக்கொண்டோம், என்று அவர் கூறுகிறார்.

ஒரு இரவு நேர வான் கண்காணிப்புடன் நடைபெற்ற தொலைநோக்கி திறப்பு விழாவில், மாநகராட்சி ஆணையர் பிரதாப் முருகன், மாவட்ட சமூக சேவைத் தலைவர் RS மாருதி மற்றும் மாவட்ட கல்வித் துறை அதிகாரிகள் பங்கேற்றனர். “உலகெங்கிலும் உள்ள எங்கள் உறுப்பினர்கள் இணையதளம் வாயிலாக நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.” ஆஸ்ட்ரோமெட்ரிகா மென்பொருள் மூலம் சிறுகோள்களைக் கண்டறிவது குறித்து மாணவர்கள் பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை வழங்கினர். அவர்களின் ஆர்வத்தால் கவரப்பட்ட ஆணையர் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகளை அனுமதித்து, நகரத்தில் உள்ள மண்டல அறிவியல் மையத்தைப் பார்வையிட அவர்களை அனுப்புவதாக உறுதியளித்தார்.

சங்கம் சமீபத்தில் சித்ராவிற்கு தொழில் அர்ப்பணிப்பிற்காக தனது தொழில்சார் சேவை விருதை வழங்கி கவுரவித்தது. “பயிலரங்கம் ஒரு பெரிய வெற்றியைப் பெற்றது, மேலும் மாணவர்கள் மீது நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அதிசயங்களை தொடர்ந்து ஆராய அவர்களை ஊக்குவிக்கும்” என்று ஆசிரியர் கூறுகிறார்.

செப்டம்பரில், சங்கம் பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறையை நிறுவியது. தனியார் பள்ளிகளில் படிக்கும் சக மாணவர்களுக்கு இணையாக அரசு பள்ளி மாணவர்களிடையே சம வாய்ப்புகளை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம், என்கிறார் சங்கத் தலைவர் ஆயுஷ் அகர்வால்.

RC கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் நிதியுதவி செய்யப்பட்ட இந்த சங்கம், 2020-இல் 31 உறுப்பினர்களுடன் பட்டயப்படுத்தப்பட்டது, “எங்களில் பெரும்பாலோர் ரோட்டேரியர்களின் குழந்தைகள் என்பதால் ரோட்டரிக்கு எங்களுக்கு அந்நியம் அல்ல” என்று கனடாவின் டொராண்டோவில் வசிக்கும் வித்யா கூறுகிறார். சங்கத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், நெதர்லாந்து மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 38 உறுப்பினர்கள் உள்ளனர்.

### ப்ராஜெக்ட் எபிலிட்டி

குழந்தைகளின் கற்றல் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, சங்கம் அதன் ப்ராஜெக்ட் எபிலிட்டியின் கீழ், $950 மதிப்பிலான மூன்று சி-பென் ரீடர்கள் மற்றும் பிற கருவிகளான பென்சில் கிரிப்ஸ், ரீடிங் ஸ்ட்ரிப்ஸ் மற்றும் ஃபிங்கர் ஃபோகஸ் கருவிகள் என அனைத்தும் கனடாவில் இருந்து குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவும் மகிழ்வி அறக்கட்டளைக்கு அனுப்பப்பட்டது “இந்த சாதனங்கள் கற்றல் குறைபாடுள்ள 80 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஏழு பள்ளிகளில் தீர்வுக்காணல் கல்வித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்” என்கிறார் வித்யா.





PDG V *ராஜ்குமார், இதயங்கள் அறக்கட்டளை அறங்காவலர்* Dr *கிருஷ்ணன் சுவாமிநாதன்,* R S *மாருதி மற்றும் சங்கத்தினர் மினி குளிர்சாதனப் பெட்டி ஒன்றை ஒரு குடும்பத்திற்கு அளிக்கின்றனர்.*

சி-பென் என்பது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் படிக்கும் மற்றும் எழுதும் குறை பாடுகள் உள்ள மாணவர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு உதவிக் கருவியாகும், என்று அவர் விளக்குகிறார். இது உரையை ஸ்கேன் செய்து அதை ஆடியோவாக மாற்றுகிறது, அதை பயனர் எளிதாகப் பின்தொடர முடியும். ஊராட்சி பள்ளிகளில் வாசிப்பு முகாம் நடத்த கோவை மாநகராட்சி மற்றும் மத்திய நூலகத்துடன் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. ஒவ்வொரு முகாமிலும் சுமார் 40 மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள் மற்றும் தன்னார்வலர்கள் C-Pen-ஐப் பயன்படுத்துவதற்கு வழிகாட்டுகிறார்கள் மற்றும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறார்கள் என்று அவர் மேலும் கூறுகிறார்.

**இளைஞர்களின் நீரிழிவு நோயை நிவர்த்தி செய்தல்**

காம்பாட் டியாபெடீஸ், டாக்டர் கிருஷ்ணன் சுவாமிநாதனால் நிர்வகிக்கப்படும் இதயங்கள் அறக்கட்டளையுடன் இணைந்து குழந்தைகளின் வகை 1 நீரிழிவு நோயை நிவர்த்தி செய்யும் சங்கத்தின் கூட்டு முயற்சியாகும். “இந்த திட்டத்திற்காக எங்கள் உறுப்பினர்கள் இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் பங்களித்துள்ளனர்” என்று சங்கத் தலைவர் கூறுகிறார். இன்சுலின் பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்காக 50 கிராம குழந்தைகளுக்கு ரூ.8,000 விலையிலான மினி குளிர்சாதன பெட்டிகள் விநியோகிக்கப்பட்டது. பண்ணாரி அம்மன் ஸ்பின்னிங் மில்ஸ் மூலம் 5 லட்சம் ரூபாய் நிதியுதவியுடன் 14 தொடர்ச்சியான குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனங்களும் (CGM), சர்க்கரை நோயை சரியான நேரத்தில் கண்டறிவதற்காக ஒரு எலக்ட்ரோலைட் அனலைசர் மற்றும் மைக்ரோஸ்கோப் டாக்டர் சுவாமிநாதனின் மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது. “நாள் முழுவதும் இரத்த சர்க்கரையை கண்காணிக்க வேண்டிய குழந்தைகளுக்கு CGM குறிப்பாக உதவியாக இருக்கும் என்கிறார் அகர்வால்.




AG *சசிகுமார்,* Dr *சுவாமிநாதன், திட்ட இயக்குனர் ரேஷ்மா ரமேஷ் மற்றும் சங்க செயலர் இஷிதா பன்சாலி* CGM *குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனங்களுடன்.*

இரத்த குளுக்கோஸ் அளவு, HBA1C, தைராய்டு, சிறுநீரகம், கண், ECG மற்றும் நீரிழிவு பாதம்ஆகியவற்றை கண்காணிக்க கருவிகள் பொருத்தப்பட்ட ஒரு வேன் தொலைதூர கிராமப் புறங்களில் முகாம்களை நடத்த அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. திட்ட இயக்குனர் ரேஷ்மா ரமேஷ் இந்த திட்டத்திற்காக ராசி சீட்ஸ் இடமிருந்து ரூ.35 லட்சம் CSR நிதியைப் பெறுவதில் முக்கிய பங்கு வகித்தார்.■

ADVT.

# BLOOD BANK EQUIPMENT



# Precision

## that ensures you don't have to use a microscope to view the happiness



- 4.3" Colour HMI with touch screen
- 200000 data storage capacity
- Configurable maintenance reminder
- 7 days circular chart recorder
- Caster wheels for ease of mobility
- Self-diagnostic system with error messages
- Email, SMS and call alert up to 15 users
- Connectivity to central monitoring software
- Multilevel password protected HMI
- High speed ethernet connectivity
- Multi-level password protected HMI
- Micro controller based programs
- Frost free refrigeration system
- Micro controller based programs

- Blood Collection Monitor
- Blood Donor Couch
- Blood bag tube sealer
- Cryofreeze (-80.0°C )
- Plasma Freezer (-40.0°C )
- Laboratory Centrifuge
- Cryoprecipitate bath
- Plasma Thawing bath
- Platelet Incubator and agitator
- Blood Bank Scale
- Centrifuge Equaliser
- Walk in Blood Bank Refrigerator
- Laboratory refrigerators
- Plasma expressor
- Laminar air flow



Refrigerated Centrifuge



Lab refrigerator



Blood Bank Refrigerator



Platelet incubator



Ultra Plasma freezer

**Labtop Instruments Pvt. Ltd.**

ISO 13485 : 2012

Labtop House, Plot No. 59, Waliv Phata, Sativali Road, Vasai (E),
Dist - Palghar - 401208, Maharashtra, India. Tel.:+918446053761 to 70 (10 lines)
Email: info@labtopinstruments.com
Web: www.labtopinstruments.com

LABTOP®
Quality Lab Equipment

# சென்னையில் பெண்களுக்கு ஓட்டுநர் பயிற்சி

**கிரண் ஜெஹரா**



கிரண் ஜெஹரா

கார் நிறுத்துமிடத்திலிருந்து காரை நகர்த்தி, பிரதான சாலையில் இடது புறம் திரும்பி, ஒரு கிலோமீட்டர் தூரம் ஓட்டி, ஒரு சுமூகமான யு-டர்ன் எடுத்து சென்னையிலுள்ள மாருதி சுஸுகி டிரைவிங் ஸ்கூலுக்கு திரும்பி வருகிறார். அங்கு நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கான வகுப்பை அவர் நிறைவு செய்கிறார். இது அவரது மூன்றாவது நடைமுறை வகுப்பு. சரோஜா தேவி (29) "ஒரு தடையும் இல்லாமல், அதுவும் பின் இருக்கையில் பயணிகளுடன் தன்னால் காரை ஓட்ட முடியும் என்பதில் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறேன்" என கூறுகிறார். RID 3232-இன் பெண்கள் அதிகாரமளிக்கும் குழுவின் முயற்சியான ப்ராஜெக்ட் வாஹினியின் பயனாளியான அவர் கூறுகையில், ரோட்டரிக்கு என் மனமார்ந்த நன்றி, இதன் மூலம் கூடுதலாக சம்பாதித்து எனது குடும்பத்தை சிறந்த முறையில் என்னால் ஆதரிக்க முடியும்".

இந்த முயற்சியின் கீழ், 250 பெண்கள் தொழில்முறை கார் ஓட்டுநர் பயிற்சி பெறுவார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் முயற்சிப்போம் என மாவட்ட பெண்கள் அதிகாரமளிக்கும் குழுவின் தலைவர் சாரதா சுந்தரம் கூறுகிறார்.

18–35 வயதுக்குட்பட்ட பெண்களே இத்திட்டத்தின் பயனாளிகள், அவர்கள் இத்திட்டத்தின் நிலைத்தன்மை பங்காளர் DORAI அறக்கட்டளையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். "அவர்கள் தங்கள் பயிற்சியை தீவிரமாக எடுத்துக் கொள்வதையும், அதை நிறுத்தாமல் இருப்பதையும்

உறுதிப்படுத்த விரும்புகிறோம். அறக்கட்டளை அவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது, என்று அவர் கூறுகிறார்.

அதன் நிறுவனர் Dr சுமித்ரா பிரசாத் கூறுகையில், இந்தப் பெண்களில் பெரும்பாலோர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள், வீட்டு வேலை அல்லது தினசரி கூலி வேலை செய்பவர்கள் மற்றும் குடும்ப துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்கள். அவர்கள் வாழ்கையை மேம்படுத்துவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

சென்னையைச் சேர்ந்த 10 ரோட்டரி சங்கங்கள், 20 பயனாளி களைக் கொண்ட முதல் குழு பயிற்சி க்கு ஒரு நபருக்கு ரூ.10,000 நிதியுதவி அளித்துள்ளன. CARS இந்தியா மற்றும் மாருதி சுஸுகி டிரைவிங் ஸ்கூல் ஆகியவை இந்த முயற்சியில் பயிற்சி பங்குதாரர்களாக உள்ளன. “ரோட்டரியுடன் கூட்டு சேர்வது எங்கள் பொது உருவத்தை மேம்படுத்துவதோடு, நமது சமூகத்தை மேம்படுத்தும் ஒரு முக்கியமான காரணத்தின் ஒரு பகுதியாக இருக்க உதவும்” என்கிறார் CARS இந்தியாவின் நிர்வாக இயக்குநர் சையத் ஃபஹிம்.

பயிற்சியானது ஒரு மாதத்தில் 14 கடுமையான தொகுதிகளை உள்ளடக்கியது மற்றும் தனிப்பட்ட சீர்படுத்தல் மற்றும் தகவல் தொடர்பு திறன் பயிற்சியையும் உள்ளடக்கியது. முதல் 21 நாட்கள் பயிற்சியின் முடிவில், அவர்கள் அடிப்படை போக்குவரத்து விதிகளை அறிந்திருப்பார்கள். சிமுலேட்டர்கள் மற்றும் ஆன்-ரோட் டிரைவிங் மூலம் ஓட்டுநர் அனுபவத்தைப் பெறுவார்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற RTO-வில் ஓட்டுநர் தேர்வெழுத நம்பிக்கையும் பெறுவார்கள், என்று ஆறு பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் மாருதி ஓட்டுநர் பள்ளியின் மூத்த மேலாளர் T R ரெஜித் கூறுகிறார்.

ப்ராஜெக்ட் வாஹினியின் பயனாளியான திருநங்கை சஞ்சனா, எனக்கு டிரைவிங் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்த ரோட்டரிக்கு நன்றி. LGBTQ சமூகத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்த இது ஒரு வரவேற்கத் தக்க நடவடிக்கையாகும். இந்த ஸ்பான்சர்ஷிப் என்னைப் போன்ற திருநங்கைகளுக்கு எங்களால் வாங்க முடியாத ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.

சஞ்சனாவை ஓட்டுநர் சேவைக்கு அமர்த்துமாறு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து தனக்கு கோரிக்கைகள் வந்துள்ளதாக சாரதா கூறுகிறார். இது ப்ராஜெக்ட் வாஹினிக்கு கிடைத்த வெற்றி. ரோட்டரி, திருநங்கைகளை மக்கள் பார்க்கும் விதத்தை மட்டும் மாற்றியமைக்கவில்லை, திருநங்கை சமுகத்தை சேர்ந்தவர்களை கண்ணியமான வேலைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும்.

RID 3232-இன் மாவட்ட மாநாட்டில் முதல் தொகுதி பயனாளிகள் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்றனர். மாநாட்டின் தலைமை விருந்தினராகப் பங்கேற்ற RIPR எலிசபெத் உசோவிச், பயனாளி களுக்கு உரிமங்களை ஒப்படைத்ததில் மகிழ்ச்சியடைந்தார். பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பணிக்குழுவின் தலைவராக, (இது PRIP சேகர் மேத்தாவின் முன்முயற்சியின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டது) இது போன்ற திட்டங்களின் தாக்கத்தை நான் அறிவேன். இந்த முயற்சி இந்த பெண்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, அவர்களது குடும்பத் தையும் மேம்படுத்தும் என்றார். RID 3232-இல் உள்ள ரோட்டரி சங்கங்கள் “பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடல்நலம், கல்வி, பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் சேவைத் திட்டங்களில் பங்கேற்கவும் ஊக்குவிக்கவும் ஒரு கட்டமைப்பையும் வளங்களையும் உருவாக்க வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

உமா மகேஸ்வரி V (33), மற்றொரு பயனாளி தனது உரிமத்தைப் பெற்ற மகிழ்ச்சியில் இருந்தார். “காரில் உட்காருவதை கூட நான் யோசித்ததில்லை, ஆனால் ரோட்டரி என்னை ஓட்டுநர் இருக்கையில் அமர வைத்தது, இப்போது நான் என் வாழ்க்கையை வெற்றியுடன் ஓட்டி செல்வேன்.” ■




V முத்துகுமரன்

*திருநங்கை சஞ்சனாவிற்கு RIPR எலிசபெத் உசோவிச் DG N நந்தகுமார், RC மெட்ராஸ் சவுத் தலைவர் ஜவஹர் நிச்சானி மற்றும் திட்டத்தலைவர் சாரதா சுந்தரம் முன்னிலையில் சான்றிதழ் வழங்குகிறார்.*

*இந்த ஸ்பான்சர்ஷிப் என்னைப் போன்ற திருநங்கைகளுக்கு எங்களால் வாங்க முடியாத ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.*

— திருநங்கை சஞ்சனா



ரோட்டரி இளைஞர்
பரிமாற்றத் திட்ட மாணவி
இரோஹா ஸ்வாய்
மேகாலய பாரம்பரிய
உடையில்.

ஷோபா நஹர்

# இளைஞர்கள் பரிமாற்ற திட்டத்தால் வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்த வடகிழக்கு மாநிலங்கள்

ரஷீதா பகத்

ரோட்டரியின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 6 நாடுகளைச் சேர்ந்த 12 இளைஞர்களர்கள் கொண்ட குழுவை ரோட்டரி மாவட்டம் 3131 வரவேற்ற போது, இந்த மாணவர்கள் வடகிழக்கில் குறிப்பாக அஸ்ஸாம் மற்றும் ஷில்லாங்கில் பத்துநாட்கள் தங்கியிருந்து நமது கலாசாரம், வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்பியதாக நினைவுகூர்ந்தார் RID 3240-இன் DGE நிலேஷ் அகர்வால். RID 3131-இன் இளைஞர் பரிமாற்றத் திட்டத் (RYE) தலைவர் ஷோபா நஹர், RID 3240-உடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள முயன்ற போதும், அகர்வால், வெளிநாட்டு மாணவர்கள் குழுவினர் புனேயில் ஒரு வருட இளைஞர் பரிமாற்றத் திட்டத்திற்காக வந்திருப்பதையும் அவர்கள் மாவட்டத்தில் கூட்டாளர்களைத் தேடிவருவதையும் அறிந்து கொண்டார். 3240 மாவட்டத்தின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் தலைவர் என்ற முறையில் அகர்வால் ஷோபாவுடன் தொடர்பு கொண்டு RID 3131-இன் கூட்டாளியாக சேர முன்வந்து மாணவர்களை அஸ்ஸாம் மற்றும் மேகாலயாவுக்கு அழைத்து வந்து வடகிழக்கு மாநிலங்களின் இயற்கை எழில் மற்றும் பன்முகத் தன்மையை அவர்களுக்கு வெளிப்படுத்த தயாரானார்.

அவர் இதற்காக உள்வரும் மாவட்ட இளைஞர் பரிமாற்றத் திட்டத் தலைவர் ப்ரியமா கோஸ்வாமியுடன் இணைந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி ஷோபா தலைமை யில் 12 மாணவர்கள் கௌஹாத்தி விமான நிலையத்தில் தரையிறங்கினர். அவர்களை DGE அகர்வால், கௌஹாத்தி சௌத் ரோட்டரி சங்க உறுப்பினர் ப்ரியமா, சங்கத்தின் தலைவர் ராஜேஷ் பாத்ரா மற்றும் துணை ஆளுநர் வீபூதி தத்தா ஆகியோருடன் இணைந்து வரவேற்றார்.

ரோட்டரி இளைஞர் பரிமாற்ற திட்டம் என்பது சர்வேதச அளவிலான மாணவர்கள் பரிமாற்ற திட்டமாகும். 1929-ஆம் ஆண்டு முதல் ரோட்டரி இன்டர்நேஷனல், இத்திட்டத்தின்



*RC கௌஹாத்தி சவுத் தலைவர் ராஜேஷ் பாட்ராவுடன் RYE மாணவர்கள்.*

கீழ் இளைஞர்களை உலகம் முழுவதும் அனுப்பி புதிய கலாசாரங்களையும், புதிய அனுபவங்களையும் பெற்று அவர்கள் நல்ல குடிமக்களாக உருவாக்கி வருகிறது. ப்ரியமா 60 சதவீத பெண் உறுப்பினர்களுடன் 76 உறுப்பினர்கள் கொண்ட சங்கத்தின் மகளிர்க்கு அதிகாரம் அளிக்கும் குழுவுக்கு தலைவராக இருக்கிறார். மேலும் சங்கத்தின் செயலராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். ஸ்பெயின், ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் பிரேசில் நாடுகளைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கான 10 நாட்கள் திட்டம் தொடர்பாக பேசுவதற்காக DGE அகர்வால் தம்மிடம் தொடர்புகொண்டதை நினைவுகூர்ந்தார். இளைஞர்கள் குழுவை காஸிரங்கா, மஜூலி தீவு, சிரபுஞ்சி மற்றும் மேகலாய மாநிலத்தின் தலைநர் ஷில்லாங் உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணியை நாங்கள் மேற்கொண்டோம். கௌஹாத்தியில் நடைபெற்ற துர்கா பூஜையில் பங்கேற்கவும் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தசரா கொண்டாட்டங்களிலும் அவர்கள் பங்கேற்றனர் என்றார்.

இளைஞர்கள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் வெளிநாடு களிலிருந்து வந்துள்ள மாணவர் களுக்கு ஆங்காங்கே உள்ள ரோட்டரி குடும்பத்தினர் விருந்தளிப்பதையும்



















1. *மஜுலி தீவில் ஒரு பட்டறையில் முகக்கவசங்கள்.*

2. *காசிரங்கா பூங்காவில் RYE குழுவுடன் (வலதிலிருந்து) DGE நிலேஷ் அகர்வால், ப்ரியமா கோஸ்வாமி மற்றும் ஷோபா நஹர்.*

3. *RAC டிப்ருகர் ரோட்டராக்டர்களுடன் RYE குழு மற்றும் DGE அகர்வால், PDG கல்பனா கௌண்ட் மற்றும் ஷோபா.*

4. *அஸ்ஸாம் முதலமைச்சர் ஹேமந்தா பிஸ்வா சர்மாவுடன் DGE அகர்வால், ப்ரியமா, ஷோபா மற்றும் RYE குழுவினர்.*

5. *நேரு ஸ்டேடியத்தில் தசரா நிகழ்வில் பங்கேற்கும் RYE மாணவர்கள்.*



ரோட்டரி இன்டர்நேஷனல் ஊக்குவித்தது. கௌஹாத்தி மற்றும் ஷில்லாங்கில் உள்ள ரோட்டரி சங்கங்கள் மாணவர்களை வரவேற்று விருந்து அளித்ததுடன் அவர்களுக்கு அந்தப் பகுதியின் கலாசார நடைமுறைகளை விரிவாக எடுத்துக் கூறினர். துர்கா பூஜை மற்றும் தசாரா கொண்டாட்டங்களில் பங்கேற்றது மாணவர்களுக்கு புதுமையான அனுபவமாக இருந்தது. மேலும் வடகிழக்கு பிராந்தியத்தில் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்துக்களின் முக்கியமான பண்டிகைகள் பற்றி அவர்கள் அறிந்து கொண்டனர். தெய்வங்களுக்கு நடைபெற்ற புஷ்பாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்று, மலர்களால் அர்ச்சனை செய்து பிரசாதத்தையும் விரும்பி சாப்பிட்டனர் என்றார் ஷோபா.

மாணவர்களின் அஸ்ஸாம் விஜயத்தின் சிறப்பம்சம் என்னவெனில் கௌஹாத்தியில் அவர்கள் முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மாவை சந்தித்து பேசியதுதான். இந்த சந்திப்பு மிக குறுகியகால சந்திப்புதான். முதல்வரை சந்திக்க நேரம் கிடைத்ததே பெரிய விஷயம் தான் என்றாலும், DG அகர்வால், எப்படியோ அதற்கான ஒப்புதலை பெற்றுவிட்டார். முதல்வரும் மாணவர்களை சந்தித்து சிறிது நேரம் உரையாடினார். ஒவ்வொரு வரின் நாட்டைப் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டார். பிரேசில் மாணவர்களுடன் கால்பந்து தொடர்பான விஷயங்களை பேசு வதில் முதல்வர் ஆர்வம் காட்டினார் என்றார் ப்ரியமா. இந்தியாவின் வடகிழக்கு பிராந்திய மக்களின் கலாசாரம், பழக்க வழக்கங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன என்று மாணவர்களிடம் கேட்டார். ரோட்டரியின் இளைஞர் பரிமாற்றத் திட்டம் குறித்து முதல்வருக்கு ரோட்டேரியன்கள் விளக்கினர். பின்னர் அதற்கான சின்னத்தை அவருக்கு அணிவித்தனர். இவை பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாக வெளிவந்தது. இதன் மூலம் ரோட்டரி மீதான நன்மதிப்பு உயர்ந்ததாக ஷோபா குறிப்பிட்டார். பின்னர் மாணவர்கள் ஆளுநர்

மாளிகைக்கு (ராஜ்பவன்) அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அஸ்ஸாம் ஆளுநர் ஜெகதீஷ் முகி அவர்களுக்கு பகல் விருந்து அளித்தார். அவருடன் மாணவர்கள் வடகிழக்கு மாநில கலாசாரங்கள் குறித்து உரையாடி மகிழ்ந்தனர்.

ஆனால், அவர்களுக்கு மஜுலி பயணம்தான் உற்சாகம் அளிப்பதாக இருந்தது. உலகின் மிகப்பெரிய நதித் தீவானது உலகம் முழுவதிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இந்த இடத்தை அஸ்ஸாமின் கலாசார தலைநகரமாக குறிப் பிடுகின்றனர். யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களில் இடம் பெற மஜுலியும் ஒரு வலுவான போட்டியாளர் என்பதை அறிந்ததும் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இங்கு வாழ்பவர்களில் பெரும் பாலானவர்கள் பழங்குடியினர். மஜுலியின் கலாசாரம் தனித்துவ மானது. ஜோர்ஹட் ரோட்டரி சங்கத்தினர் மஜுலி செல்லும் வழியில் மாணவர்களுக்கு காலை விருந்து அளித்தனர் என்றார் பிரியாமா. நாகோன் ரோட்டரி சங்கம் அவர்களுக்கு மஜுலியில் மதிய விருந்து அளித்தது.




இந்த தீவில் மாணவர்கள் முகக்கவசம் தயாரிக்கும் முறையை அதிசயத்துடன் பார்வையிட்டனர். தங்களுக்கு கிடைத்த குறைந்த நேரத்தில் அவர்களுடன் உரை யாடினர். முகக்கவசங்கள் தயாரிப் பதற்கான அடிப்படை விஷயங்களை கேட்டுத் தெரிந்து கொண்டதுடன், சிலவற்றை நினைவுகளாக வீட்டுக்கு எடுத்துச் செல்ல வாங்கிக்கொண்டனர் என்றார் ப்ரியமா.

இந்த இளைஞர்கள், அதாவது 16 முதல் 19 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் பழங்குடியினருடன் உரையாடுவது இதுவே முதல் முறையாகும். அந்த தீவை அவர்கள் நேசித்ததுடன், உணவு வகைகளையும் ருசித்து மகிழ்ந்தனர். நமது பாரம்பரிய நாட்டிய நாடகமான மஹாபாரதம், ராமாயணம் ஆகியவற்றை கண்டு ரசித்ததுடன் முகக்கவசம் தயாரிக்கும் முறையையும் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

ப்ரியமா இரண்டு மாணவர்களை தன்னுடன் தங்க வைத்தனர். இது அவரது குடும்பத்துக்கு புதுமையான அனுபவமாக இருந்ததாகவும் கூறினார். நாங்கள் கொடுத்த உணவை அவர்கள் விரும்பி சாப்பிட்டார்கள். முதல் இரண்டு நாள், நாங்கள் அரிசியால் தயாரிக்கப்பட்ட காலை உணவை வழங்கினோம். லியோ என்ற மாணவர் சமையலறை வரை வந்து காலை உணவு தயாரிக்கும் முறையை ஆர்வத்துடன் பார்வையிட்டார். என்னிடம் பல சந்தேகங்களை எழுப்பி அதற்கு பதில் கேட்டு தெரிந்து கொண்டார். காய்கறி வியாபாரிகள் வந்தபோது அவர்களை புகைப்படம் எடுத்ததுடன் அவர்களிடம் காய்கறிகள் குறித்து கேள்வி எழுப்பினார். காய்கறி வாங்கும் போது நடைபெறும் பேரத்தையும் ஆர்வத்துடன் பார்த்தார் என்று ப்ரியமா புன்சிரிப்புடன் கூறினார்.

காஸிரங்கா பூங்கா அவர்களுக்கு மற்றொரு விருப்பமான அனுபவமாக இருந்தது. 20-வது நூற்றாண்டின் இறுதியில் அழியும் நிலையில் இருந்த ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தை காப்பாற்றுவதில் இந்த பூங்காவின் பங்களிப்பை அவர்கள் வியப்புடன் கேட்டறிந்தனர். இந்த வகை காண்டாமிருகத்தை பராமரிக்கும் இடத்தை அவர்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர் என்றார் ஷோபா. வனவிலங்கு பூங்காவை சுற்றிப்பார்த்த போது ஒற்றை கொம்புடைய காண்டாமிருகத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் மூங்கில்களால் தயாரிக்கப்படும் பொருள்களை வியப்புடன் பார்த்ததுடன் அவற்றை கைநிறைய விரும்பி வாங்கிச் சென்றனர்.

மேகாலய மாநிலத்தில் சிறந்த விடுமுறை வாசஸ்தலமான ஷில்லாங்கில், அங்கிருந்த மூன்று ரோட்டரி சங்கங்கள் வெளிநாட்டு மாணவர்களை வரவேற்றதுடன் ஒருங்கிணைந்து கலாசார நிகழ்ச்சிகளையும் நடத்திக்காட்டினர். வெளிநாட்டு மாணவர்களும் கலாசார நிகழ்ச்சி களில் பங்கேற்று அவர்களைப்



போலவே உடையணிந்து நாட்டுபுற நடனங்களை ஆடியது ரம்மியமாக இருந்தது.

மேகாலயத்தில் சிரபுஞ்சிக்கு சென்று அவர்கள் இயற்கை எழிலை ரசித்ததுதான் சிறப்பு அம்சமாகும். பசுமையான புல்வெளிகள், நீர்வீழ்ச்சிகள், மலையேறுதல், இயற்கையான காற்று மற்றும் உலக புகழ்பெற்ற இரட்டை அடுக்கு பாலம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேகாலயத்தில் உயர்ந்த இடத்தில் அமைந்துள்ளது சோஹ்ரா. இங்கு வருடம் முழுவதும் மழைபெய்து கொண்டே இருக்கும். மேகாலயத்தில் உள்ள நீர்வீழ்ச்சியை ரோட்டரி இளைஞர் பரிமாற்ற திட்ட மாணவர்கள் விரும்பி பார்த்து ரசித்தனர். பின்னர் அருங்காட்சியகத்துக்கும் சென்றனர். உள்ளூர் சந்தையை பார்வையிட்ட அவர்கள், அங்கு கிடைத்த உணவுகளை வாங்கி சுவைத்தனர். அந்த உணவின் பெயர் என்ன? எப்படி தயாரிக்கப் பட்டது என்ற விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டனர் என்றார் ஷோபா.

தேஜ்பூர் பல்கலைக்கழகத்துக்கும் வெளிநாட்டு மாணவர்கள் சென்று உள்ளூர் மாணவர்களுடன் கலந்துரையாடினர். ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னோடித் திட்டமான ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டம் இளைஞர்களுக்கு வெளிஉலகத்தை அறியவைக்கும் திட்டம், பல்வேறு பகுதிகளின் கலாசார, வாழ்க்கை நடைமுறைகளை தெரிந்துகொள்ளும் திட்டமாகும் என்று ஷோபாவும், DGE அகர்வாலும் குறிப்பிட்டனர். இளைஞர் பரிமாற்ற திட்ட மாணவர்களின் வடகிழக்கு மாநில பயணம் ஊடகங்கள், பத்திரிகைகளின் கவனத்தையும் ஈர்த்தது. அவர்களின் பயணம் குறித்த செய்திகளும் விரிவாக வெளியிடப்பட்டன என்றார் அகர்வால்.

இளைஞர்கள் பரிமாற்றத் திட்ட தலைவர்கள் இருவரும் RID 3131-இன் மாவட்ட ஆளுநர் அனில் பார்மர் மற்றும் குஷானவா பாபி, RID 3240-இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் பிரபாத் கெடியா, கல்பனா கௌண்ட், தேவஷிஸ் தாஸ், மனஸ் சௌதுரி, சுனில் சராப் மற்றும் உதவி ஆளுநர்கள், கௌஹாத்தி, கௌஹாத்தி சௌத், கௌஹாத்தி வெஸ்ட், கௌஹாத்தி லுயிட், கௌஹாத்தி ஜகான், கௌஹாத்தி மெட்ரோ, கௌஹாத்தி எலைட், திஸ்பூர், கௌஹாத்தி ஸ்மார்ட் சிட்டி, கௌஹாத்தி சிட்டி, ஷில்லாங், ஷில்லாங் ஹெரிடேஜ், ஆர்சிட் சிட்டி ஷில்லாங், ஜோர்ஹட், நாகோன், தேஜ்பூர், கிரேட்டர் தேஜ்பூர், ரோட்ராக்ட் சங்கங்கங்கள் மற்றும் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். முதல் மூன்று நாட்கள் வெளிநாட்டு மாணவர்களை ரோட்டேரியன்கள் வரவேற்று விருந்து வைத்தனர். அதன்பிறகு அவர்கள் ஒரு ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டனர் என்று ஷோபா கூறினார்.

நான் தசரா பண்டிகை காலத்தை தேர்ந்தெடுத்ததற்கு காரணம் வடகிழக்கு மாநிலங்களில் இந்த விழா இந்தியாவின் மற்றபகுதிகளிலிருந்து வித்தியாசமான முறையில் கொண்டாடப்படும் என்பதுதான். அசாமிலும், மேகலாயத்திலும் தங்களுக்கு கிடைத்த வரவேற்பைக் கண்டு மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் புதுமையான அனுபவங்களைப் பெற்றனர். அவர்கள் இந்த மாநிலங்களை நேசித்தனர். இங்குள்ள மக்களுடன் அன்பு பாராட்டினர். இதன் மூலம் அவர்கள் வருங்காலத்தில் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். கிட்டதட்ட இந்த இடம் அவர்களுக்கு இரண்டாவது வீடுபோல் அமைந்துவிட்டது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்றுவந்த பிறகும், புனேயில் வந்து தங்கிய பிறகும் வெளி நாட்டு மாணவர்கள் இந்தியர்கள் மிகவும் அன்புமிக்கவர்கள், அடுத்தவர்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் என்பதை புரிந்துகொண்டுள்ளனர் என்பது அவர்களிடம் உரையாடிய போது தெரியவந்ததாக ஷோபா கூறினார். RID 2790-ஐச் சேர்ந்த ஜப்பானியப் பெண் இராஹோ ஸ்வாய், சில மராத்திய வார்த்தைகளை புரிந்து கொண்டதுடன், மராத்தி பாடல்களையும் பாட கற்றுக் கொண்டார். மற்ற சிலரும் ஒரு ஆசிரியரிடம் மராத்தி மொழியை விரும்பி கற்று வருகின்றனர்.

இந்த மாணவர்கள் எதிர் காலத்தில் ரோட்டரியில் இணைவார்களா என்று ஷோபாவிடம் நான் கேட்டேன். இந்த மாணவர்கள் ரோட்டரி பற்றி ஓரளவு நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள். இனி அந்தந்த நாடுகளில் உள்ள ரோட்டேரியன்கள் இவர்களை ஊக்குவித்து ரோட்டேரியன்களாக உருவாக்க வேண்டும். ரோட்டரியில் சேர வேண்டும் என்ற எண்ணத்தை நாங்கள் அவர்களிடம் ஏற்படுத்திவிட்டோம். ரோட்டரி மட்டுமல்ல, இந்திய உணவு மற்றும் கலாசாரத்திலும் அவர்கள் அதிக ஈடுபாடு காட்டினர். ஜெர்மனியைச் சேர்ந்த வின்சென்ட் பாவ் பாஜி, பாணி பூரியை விரும்பி சாப்பிட்டார். அதை தயாரிப்பதற்கான ரெடிமேடு கலவையையும் தனது நாட்டுக்கு எடுத்துச் செல்ல அவர் தயாராகி விட்டார் என்றார் ஷோபா.■



ஸ்நேஹபந்த் விவாக மேலாவில் RC புனே மெட்ரோ மட்டும் மானவ்யா குழுவினர்.

Rotary PEOPLE OF ACTION

# எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் துணைகளை சந்திக்கின்றனர்

**கிரண் ஜெஹரா**

மருத்துவ முன்னேற்றங்கள் எச்.ஐ.வி-பாசிட்டிவ் நபர்கள் நீண்ட காலம் வாழவும், வைரஸ் பரவாமல் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெறவும் உதவினாலும், நண்பர்களையோ அல்லது துணையையோ கண்டு பிடிப்பது அவர்களுக்கு கடினமாக இருக்கும் என RC புனே மெட்ரோ, RID 3131ன் முன்னாள் தலைவர் ஷிரிஷ் லாவடே கூறுகிறார். எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்ட அனாதை குழந்தைகளின் மறுவாழ்வுக்கு உதவும் மானவ்யா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் லாவடே பணியாற்றுகிறார். கடந்த 13 ஆண்டுகளுக்கும் மேலாக, RC புனே மெட்ரோ மற்றும் மானவ்யா இணைந்து எச்ஐவி பாசிட்டிவ் மக்களுக்காக "ஸ்நேஹ்பந்த் — எச்ஐவி விவாஹா மேளா" என்ற சிறப்பு ஜோடி பொருத்தம் முகாமை நடத்தி வருகின்றனர். "இந்த முகாம் எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களிடையே 350க்கும் மேற்பட்ட மகிழ்ச்சியான திருமணங்களை விளைவித்துள்ளது, இந்தத் திட்டத்திற்கு மூன்று மாவட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறுகிறார்.

இந்த ஆண்டு இந்த திட்டம் மானவ்யாவின் முன்னாள் உறுப்பினர்களால் செயல்படுத்தப்பட்டது. "எங்கள் இளம், தொழில்நுட்ப திறம்பெற்ற குழு ஆர்வமுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பதிவு செய்து பொருத்தமான ஜோடியை தேடக்கூடிய பாதுகாப்பான வலைத்தளத்தை உருவாக்கியது. பதிவு செய்தவர்களின் அடையாளத்தை பாதுகாக்க சிறப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன," என்று லாவடே கூறுகிறார். இந்தத் ஜோடி பொருத்தம் சந்திப்பிற்காக 110க்கும் மேற்பட்ட ஆன்லைன் பதிவுகளைப் பெற உதவியது.

கூட்டத்தில், மானவ்யா தன்னார்வலர்கள் பங்கேற்பாளர்களுக்கு விளையாட்டுகளை ஏற்பாடு செய்தனர், இது அவர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு தொடர்பு கொள்ள உதவியது. "இன்றைய வேகமான உலகில் சரியான துணையை கண்டுபிடிப்பது ஒரு



*HIV-யால் பாதிக்கப்பட்டவர்களின் திருமண விழாவை சங்கம் நடத்தி வைத்தது.*



கடினமான பணியாகும், இது சமூக இழிவு மற்றும் பாகுபாடு காரணமாக எச்.ஐ.வி நோயாளிகளுக்கு இன்னும் சிக்கலானது. ஆனால் மண்டபத்தில் சூழ்நிலை நிதானமாகவும் இனிமை யாகவும் இருந்தது, மேலும் திருமண விதிமுறைகளைப் பற்றி பேசுவதை நாங்கள் பாதுகாப்பாக உணர்ந்தோம், என்கிறார் மேளாவில் பங்கேற்ற ரேகா (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

கூடுதல் நடவடிக்கையாக, பதிவு செய்தவர்களின் பெற்றோரை வேறு அறையில் உட்கார வைத்து, அங்கு அவர்களுக்கு ஒரு ஆலோசகர் தங்கள் மகன்கள் மற்றும் மகள்களுக்கு சரியான பொருத்தத்தைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்கள் சாதி மற்றும் மதத்தைப் பற்றி சிந்திக்கக்கூடாது என புரியவைத்தார்.

மேளாவில் இரண்டு திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டது மற்றும் பல பங்கேற்பாளர்கள் ஒருவரை யொருவர் நட்பாக்கிக்கொண்டனர் என RC மெட்ரோவின் தலைவர் விவேக் குல்கர்னி உற்சாகத்துடன் கூறினார்.

பங்கேற்பாளர்களின் முகத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப் பட்டது மனதிற்கு இதமாக இருந்தது. இது போன்ற திட்டங்கள் ரோட்டரியின் உண்மையான ஆற்றலைக் காட்டுகின்றன என ஜோடி பொருத்தம் சந்திப்பில் கலந்து கொண்ட DGN ஷீத்தல் ஷா கூறினார்.■

# தூத்துக்குடியில் சக்கர நாற்காலிப் பேரணி

ரோட்டரி செய்திக் குழு

RID 3212ன் பெண் குழந்தையை ஆதரிப்போம் முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக, RC தூத்துக்குடி டிரெயில்பிளேசர்ஸ் மாற்றுத் திறனாளி களுக்கான சக்கர நாற்காலிப் பேரணி ஒன்றை நடத்தினார்கள். இதில் பல பெண்கள் பங்கேற்று, பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் ரோட்டரி கருப்பொருளுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். Rtn ஜாஸ்மின் திலக் பேரணியைக் கொடி அசைத்துத் தொடங்கிவைத்தார், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் சிவசங்கரன் உடனிருந்தார். அவர் வெற்றி பெற்றோருக்குக் கோப்பைகள், பரிசுகளை வழங்கினார்.

மாவட்ட கருப்பொருள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க, தூத்துக்குடி வ உ சிதம்பரம் கல்லூரியிலிருந்து, புகழ் பெற்ற உணவகம் ஒன்றுக்கு 15 கிலோமீட்டர் தொலைவு சைக்ளத்தான் ஒன்றும் நடத்தப்பட்டது. சங்கத் தலைவர் T மலர்விழி, செயலாளர் A பிரதிமா இரு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றனர்.■

*சக்கர நாற்காலிப் பேரணி, சைக்ளத்தான் பங்கேற்பாளர்கள்.*



# RID 3150-இல் உள்ள கிராமங்களை ரோட்டரி ஆதரிக்கிறது

ஜெய்ஸ்ரீ

நம் உதவி மற்றும் ஆதரவுடன், கிராம மக்கள் நகரங்களுக்கு இடம்பெயர்வதை காலபோக்கில் தடுக்க முடியும் என்று நம்புகிறோம். நம் கிராமங்களில் பல அழிந்து வருகின்றன, நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையை நாங்கள் மேம்படுத்த விரும்புகிறோம், என்கிறார் DG தல்லா ராஜசேகர் ரெட்டி, RID3150. மாவட்டத்தில் உள்ள 113 ரோட்டரி சங்கங்களில், 64 சங்கங்கள் மாவட்டத்தின் முதன்மை திட்டமான கிராம விகாஸ் – கிராமத்தை தத்தெடுக்கும் திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அத்திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தொடரும். நூலகங்கள் மற்றும் தடுப்பு அணைகள் அமைத்தல், பள்ளிகள், பொது சுகாதார மையங்கள் மற்றும் அங்கன்வாடிகளை புதுப்பித்தல், மேலும் மருத்துவ மற்றும் கால்நடை மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்தல் ஆகியவை ரோட்டரி சங்கங்களால் தங்கள் அதிகார எல்லைக்கு அருகில் உள்ள கிராமங்களில் செயல்படுத்தப்படும் சில சேவைத் திட்டங்களாகும்.

RC தாடேபள்ளி ஆதரவளிக்கும் மல்லேம்பூடி கிராமத்திற்கு தனது பயணத்தை நினைவுகூர்ந்த DG, “ஒரு குடும்பம் என்னையும் எனது குழுவையும் வாழைப்பழங்கள், புளி, மஞ்சள் மற்றும் வீட்டில் வளர்க்கப் பட்ட பல காய்கறிகள் மற்றும் தானியங்களுடன் வரவேற்ற போது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அவர்கள் எங்களுக்கு தெரிவித்த நன்றியை கண்டு வார்த்தைகளின்றி நின்றேன். சங்கம், கிராமப் பள்ளியில் நூலகம் அமைத்துள்ளது, ஆழ்துளை கிணறு தோண்டி, தடுப்பணை கட்டியுள்ளது. இந்த கிராமத்தில் 20 கிராம மக்கள் கொண்ட RCC ஒன்றை நிறுவியுள்ளது.

RID 3150-இல் உள்ள ரோட்டரி சங்கங்கள் உறுப்பினர் பங்களிப்பு மூலம் மட்டுமே இந்த கிராமங்களில் ரூ.50,000 முதல் 10 லட்சம் வரையிலான சேவைத் திட்டங்களைச் செய்துள்ளன என்று ஆளுநர் கூறுகிறார். “இந்த ரோட்டரி திட்டங்கள் கிராமங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்கியுள்ளன, எனவே கிராம மக்கள் தங்கள் தேவைகளுக்காக அரசியல்வாதிகளிடம் செல்வதை விட ரோட்டேரியர்களுடன் தொடர்புகொள்வதை வசதியாக கருதுகின்றனர்.” RC பாபட்லாவால் தத்தெடுக்கப்பட்ட கிராமமான ஆதர்ஷ்நகரில் உள்ள தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு திருமண விழா நடத்தியது அவருக்குப் பிடித்த திட்டங்களில் ஒன்றாகும். “இது ஒரு தன்னிச்சையான சைகையாகும், அங்கு அனைத்து ரோட்டேரியர்

*DG தல்லா ராஜசேகர் ரெட்டி மற்றும் அவர் மனைவி உமாதேவி, RC குன்டூர் ஆதர்ஷ் தலைவர் துர்கா வாணி மற்றும் சங்கத்தினர் சங்கம் ஒரு கிராமத்தில் வழங்கிய ஆர்கானிக் காய்கறி செடிகளுடன்.*



களும் சேர்ந்து ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள பரிசுகளை வழங்கினர். சங்கத்தின் கிராம விகாஸ் தலைவர் மாங்கல்யத்திற்கு நிதியுதவி செய்தார், மற்றொரு ரோட்டேரியர் திருமண புடவையை வழங்கினார், ஒரு சங்க உறுப்பினர் உணவு விருந்தை கவனித்துக்கொண்டார் மற்றும் மற்றவர்கள் தம்பதியருக்கு புதிய வாழ்க்கையைத் தொடங்க தேவையான அடிப்படை பொருட்களை பரிசளித்தனர். கிராமக் கூட்டங்களை நடத்துவதற்காக ரூ.2 லட்சம் செலவில் ரச்சபந்தா என்ற அகலமான கிரானைட் மேடையையும் சங்கம் கட்டியது. கிராம மக்களுக்கு பல்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரத்திற்காக தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டன. கிராமத்தில், ஒரு RO ஆலை, பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள்கள் மற்றும் ஒரு தொழிற்பயிற்சி மையம் கட்டுதல் ஆகியவை திட்டநிலையில் உள்ளன.

மாவட்டம், இரண்டு புற்றுநோய் பரிசோதனை பேருந்துகள் மற்றும் ஒரு நடமாடும் கண் மருத்துவ மனையை கிராமங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்துள்ளது மற்றும் நோயாளிகள் மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள நகர மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ''மரக்கன்றுகள் நடுதல், பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு எதிரான பிரச்சாரங்கள், மற்றும் பள்ளிகள் மற்றும் சுடுகாடுகளை புதுப்பித்தல் ஆகியவை இந்த கிராமங்கள் பலவற்றில் செய்யப்படுகின்றன'' என்று DG கூறுகிறார்.




RC *பாபட்லா தலைவர்* M *சுதிர் குமார் மற்றும் சங்கத்தினர் ஒரு கிராம பெண்ணிற்கு திருமண பரிசுகள் வழங்குகின்றனர்.*



DG *ரெட்டி தண்ணீர் கொண்டு செல்லும் உருளை* (water wheels) *ஒன்றை ஒரு கிராம பெண்ணிடம் அளிக்கிறார்.*



ரமணி ராவ் தலைமையிலான RC செகந்திராபாத் கன்டோன்மென்ட் திம்மாஜிபள்ளி கிராமத்தில் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்க ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை அமைத்தது. ஒரு குழு பெண்களுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேட்களை உருவாக்க கற்றுக்கொடுக்கப்படும், மேலும் நாங்கள் அவர்களுக்கு மூலப்பொருட்களை வழங்கி, பேட்களை சந்தைப்படுத்த உதவுவோம்'' என்கிறார் ரமணி. இது RC ஸ்மார்ட் ஹைதராபாத் உடன் ஒரு கூட்டு திட்டமாக இருக்கும். சங்கம், கிராமப் பள்ளியில் வாஷ் ஸ்டேஷன்கள் மற்றும் கழிப்பறைகளை புதுப்பித்துள்ளது மற்றும் துணை ஊழியர்களுக்கு கூடுதல் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. எங்களில் 11 பேர், எங்கள் ரோட்டராக்டர்களுடன் சேர்ந்து கிராமத்திற்குச் சென்றபோது அது ஒரு வேடிக்கை நிறைந்த நாளாக இருந்தது. நாங்கள் பெண்களுக்கு ரங்கோலி போட்டியை நடத்தினோம்,




*பண்ணை உபகரணங்கள் ஒரு கிராமத்தில் வழங்கப்படுகிறது.*

மேலும் பள்ளி வளாகத்தில் ஒரு பெரிய மரக்கன்றுகள் நடும் திட்டத்தில் கிராம மக்கள் மற்றும் மாணவர்களை ஈடுபடுத்தினோம், என்று அவர் மேலும் கூறுகிறார். கிராமத்தில் பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றவும் மண் பரிசோதனை உபகரணம் மற்றும் உரங்களை வழங்க சங்கம் திட்டமிட்டுள்ளது.

RC ஸ்மார்ட் ஹைதராபாத் தத்தெடுத்த ஒரு கிராமத்தைச் சேர்ந்த 11 இளைஞர்கள் சங்கம் ஏற்பாடு செய்த தொழிற்கல்வி பயிற்சித்திட்டத்தில் கலந்து கொண்டு வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

“எங்கள் உறுப்பினர்கள் அவர்களை தங்கள் நிறுவனங்களில் கணக்கு நிர்வாகிகள், கணினி ஆபரேட்டர்கள் மற்றும் சேகரிப்பு முகவர்களாக நியமித்துள்ளனர்” என்று சங்கத்தின் முன்னாள் தலைவர் அனிதா ரெட்டி கூறுகிறார்.

RC நிஜாமாபாத், லிங்கசமுத்திரத்தில் 500 லிட்டர் RO பிளாண்ட்டை நிறுவி, ஒரு பள்ளியில் கழிப்பறைத் தொகுதிகளை புதுப்பித்து, புத்தகங்கள் மற்றும் பள்ளிப் பைகளை வழங்கியுள்ளது. RC ஓங்கோல் சென்ட்ரல் மூலம் திமணபாலம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 1,000 லிட்டர் RO ஆலையை DG ரெட்டி திறந்து வைத்தார். கிராமத்தில் விவசாய உபகரணங்கள், உரங்கள் மற்றும் கால்நடை தீவனங்களுக்கு சங்கம் நிதியுதவி செய்தது.



RC *பண்டரிபுரம் தான் தத்தெடுத்துள்ள கிராமத்தில் அமைத்துள்ள உரம் உற்பத்தி அமைப்பு.*

RC பார்ச்சூர் சென்ட்ரல் ஒரு RCC நிறுவி, அதன் தத்தெடுக்கப்பட்ட கிராமமான நாகுலபாலத்தில் தடுப்பு அணையை கட்டியது, மேலும் RCC உறுப்பினர்கள் தலா ரூ.2,000 கொடுத்து அங்குள்ள சாலைகளை சீரமைத்தனர். RC குண்டூர் விகாஸ், ஆனந்தவரப்பாடு கிராமத்தில் 10 சிமெண்ட் பெஞ்சுகளை அமைத்தனர்.

அரசாங்க திட்டங்களுடன் மோதலைத் தவிர்க்க கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்பு சங்கங்கள் உள்ளூர் பஞ்சாயத்துக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றன என்கிறார் அனிதா. இப்போது ரோட்டரியின் பெயர் மாவட்டம் முழுவதும் உள்ள கிராம மக்களுக்கு பரிச்சயமாகியுள்ளது. ஒவ்வொரு முறையும் நாங்கள் கிராமத்திற்குச் செல்லும்போது அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று, குடும்பத்தில் ஒருவர் போல நடத்தும்போது எங்கள் இதயங்கள் மகிழ்ச்சியில் நிரம்புகிறது, என்று புன்னகைத்து மகாத்மா காந்தியின் வார்த்தைகளை மேற்கோள் காட்டிகிறார் – இந்தியா தனது கிராமங்களில் வாழ்கிறாள்.■

# WWS15
IT ALL STARTS WITH WASH

**JOIN US IN MELBOURNE Friday, May 26, 2023**



## Join People of Action at World Water Summit 15

Rotarians are playing a critical role addressing WASH—water, sanitation, and hygiene—necessary for community health, economic growth, food security, education, well-being, and the alleviation of poverty.

Join us right before the international convention. Keynote speakers include Past RI President Barry Rassin, and “the Toilet Warrior” Mark Balla. Breakout sessions encourage knowledge sharing and networking.

WASH-RAG thanks the sponsors of WWS15:

SATO A BETTER LIFE. EVERY DAY.
Aquatabs water purification tablets
unicef for every child
AQUA
Business Connect
Innovation for Good. BY KOHLER
Sawyer
World Vision water

Rotary | WASH Rotary Action Group WATER - SANITATION - HYGIENE

For more information go to WASH-RAG.org or scan the QR code to register.

# அகமதாபாதில் குடிசைவாசி பெண்களுக்கான MHM திட்டம்

**ரஷீதா பகத்**

கிரேட்டர் அகமதாபாத் ரோட்டரி சங்கம், RID 3054, ஒரு ரோட்டரி சங்கம், தனது ஆதரவு பெற்ற RCC ஜீவன்தீர்த், RID 3132 மகாராஷ்டிராவில் அகமதுநகர் இளஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் E-சங்கத்துக்கு இடையே MHM திட்டத்தை செயல் படுத்த ஒத்துழைப்பு அளித்து முன்னுதாரணமாக திகழ்கிறது. நன்கு கட்டமைக்கப்பட்ட, ஒருங்கிணைக்கப் பட்ட இத்திட்டம் அகமதாபாதில் குடிசைப் பகுதியில் வசிக்கும் 2,000 குப்பை பொறுக்கும் பெண்களுக்கு வாழ்வளிப்பதாக உள்ளது.

கிரேட்டர் அகமதாபாத் ரோட்டரி சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அருப் சின்ஹா திட்டத்தை விவரிக்கையில், அகமது நகர் இ-கிளப்பின் கௌரவ உறுப்பினரும் கண்மருத்துவ இயல் நிபுணருமான டாக்டர் பிந்து ஸ்ரீஸாத் இந்த திட்டத்துக்கு உந்துதலாக இருப்பதாகத் தெரிவித்தார். இந்த சங்கம் ஜீவன் தீர்த் RCC உடன் கலப்பு அமர்வை நடத்தியது. சுற்றுச்சூழல் இயக்கத்தின் துணைத் தலைவர் மற்றும் ஜீவன்தீர்த் RCC-யின் ஆலோசகர் என்ற முறையில் இதை ஒருங்கிணைத்தார்.

குஜராத்தில் உள்ள ஒரு தொண்டு நிறுவனமான ஜூவன்தீர்த் அறக் கட்டளை சமூக பணியாற்றுவதில் சிறப்பான சாதனை படைத்துள்ளது. இதன் நிறுவன உறுப்பினர்களில் ஒருவர் ராஜேந்திர புரோஹித் (செல்லமாக அவரை ராஜுபாய் என்று அழைப்பார்கள்). சங்கத்தின் கௌரவ உறுப்பினராக உள்ளார். அந்த தொண்டு நிறுவனம் கல்வி, வாழ்வாதாரங்களை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் செயல்பட்டு வருகிறது. அவர் ஒரு வெற்றிகரமான பேராசிரியர். அவரும், வங்கித் துறையில் பணியாற்றிய அவரது மனைவி தீப்தியும் தங்கள் வேலையை விட்டுவிட்டு ஜீவன் தீர்த் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகின்றனர். PRIP கல்யாண் பானர்ஜி இயக்குநராக இருக்கும் யுனைடெட் பாஸ்பரஸ் என்ற நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் கார்ப்பொரேட்

*குடிசைவாழ் பெண்கள் துணி சானிடரி பேட் செய்யும் முறையை கற்றுக்கொள்கின்றனர். Dr பிந்து ஷிர்சத் (வலது) அவர்களும் உள்ளார்.*





நிறுவனங்களின் சமூக பொறுப் புணர்வு திட்ட நிதி இதற்கு கிடைக்கிறது என்கிறார் சின்ஹா.

இந்த திட்டத்தின்கீழ் குஜராத்தின் அகமதாபாதில் உள்ள மிகப்பெரி சேரிப்பகுதிகளான ராமபிர்னோ, டெக்ரோ, ஜுனா வடாஜ் ஆகிய இடங்களில் வசிக்கும் 2000-த்துக்கும் மேலான குப்பை பொறுக்கும் பெண்கள் ஜீவன்தீர்த் மூலம் பலனடைந்துள்ளனர். இப்போது அவர்கள் மறுசுழற்சி செய்யப்பட்ட துணிகளிலிருந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிடரி பேடுகளை தயாரித்து விற்பனை செய்து தங்களது வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொண்டுள்ளனர்.

MHM திட்டத்தை மையமாக வைத்து சமீபத்தில் அகமதாபாதில் நடைபெற்ற பயிலிரங்கத்துக்கு விமான போக்குவரத்து பிரச்னையால் நேரில் வரமுடியாத Dr பிந்து, மெய்நிகர் சந்திப்பு மூலம் மாதவிடாய் சுகாதாரத்தை பேணுவதன் அவசியத்தை விரிவாக எடுத்துக்கூறினார். மாதவிடாய் சுகாதாரம் தொடர்பாக பெண்களிடம் கேள்விகள் எழுப்பிய அவர், அது தொடர்பான கட்டுக்கதைகளுக்கு பதில் அளித்தார். மாதவிடாய் சுகாதார பராமரிப்பு, முறையான ஊட்டச் சத்து, பணச் செலவு இல்லாத, நிலைத்தன்மை கொண்ட சானிடரி பேடுகளை பயன்படுத்து மாறு அவர் கேட்டுக் கொண்டார். பிளாஸ்டிக் மற்றும் இரசாயனம் கலந்த ஒருமுறை பயன்படுத்தி விட்டு தூக்கி எறியும் பேடுகளினால் ஏற்படும் நச்சு அபாயங்களிலிருந்து உடலியல் சுகாதாரத்தையும், சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மறுசுழற்சி செய்யப்பட்ட துணிகளை தைத்து தயாரிக்கப்பட்ட சானிடரி பேடுகள் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர் விரிவாக எடுத்துக் கூறினார் என்கிறார் சின்ஹா.

பயிலரங்கின் இரண்டாவது கட்டமாக மறுமுறை பயன்படுத்தும் மலிவுவிலை சானிட்டரி நாப்கின்கள் தயாரிப்பது குறித்தும் அவர் விளக்கினார். இதற்கான செயல்முறை விளக்கம் அகமதுநகரிலிருந்து நேரலையாக ஒளிபரப்பானது. ராஜுபாய் தன்னார்வ தொண்டு நிறவனம் வழங்கிய ஏழு தையல் இயந்திரங்கள் மூலம் சேரி பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் சானிடரி பேடுகளை தைத்தனர்.

இது 2,000 பெண்களைக் கொண்ட இந்த குழுவிற்கும் சமூகத்தினருக்கும் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவும் வருமானம் ஈட்டவும் வழிவகுக்கும் என்று உற்சாகத்துடன் கூறினார் சி ன்ஹா. குப்பை பொறுக்கும் பெண்கள் என்ற நிலையிலிருந்து மாறி, நிலையான வருமானத்தை பெறும் வகையில் சமூகத்தில் மதிக்கத்தக்க நபர்களாக அவர்கள் உருவாக முடியும் என்றார்.

இதுபோன்ற 6 சானிடரி பேடுகள் கொண்ட ஒரு பேக்கை எளிதில் ரூ.300 முதல் ரூ.350 வரை விற்கமுடியும் என்று மதிப்பிடுகிறார் டாக்டர் பிந்து. மூலப்பொருள்கள், பேக்கிங் உள்ளிட்ட தயாரிப்புச் செலவுகள் ரூ.150-க்கு மேல்



ஆகாது என்கிறார் அவர். இந்த சானிடரி பேடுகள் தயாரிப்பதற்கு பாலியுரிதேன் லாமினேட் (Poliurethane laminate) என்கிற பொருள் பயன்படுத்தப்படுகிறது. டயப்பர்கள், உணவுப் பொருள்கள் பேக்கிங் செய்ய இவை பயன் படுத்தப்படுகின்றன தூய்மையான பழைய பெட்ஷீட்டுகள், வெல்க்ரோ மற்றும் பட்டன்கள் தேவை என்றார் அவர்.

கிரேட்டர் அகமதாபாத் ரோட்டரி சங்கத்தின் தற்போதைய தலைவர் பிரதீப் கமல் சதுர்வேதி, இந்த திட்டத்தால் ஈர்க்கப்பட்டு, இதை தங்கள் சங்கத்தின் நிரந்தர திட்டமாக செயல்படுத்தமுடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்ன வென்றால் உப்ராந்த் அறக்கட்டளை (ஜூவன்தீர்த் வழிகாட்டுதலில் உருவானது). இதில் சேர்ந்து கொண்டதுதான். இதன் நிறுவனர் ரித்திகா பண்டாரி. அவரும் அவரது குழுவினரும் NIFT மற்றும் NID-யைச் சேர்ந்த இளம் பட்டதாரிகளும் பேக்கேஜிங் மற்றும் விளம்பரப்படுத்துதலில் புதுப்புது ஆலோசனைகளை வழங்கி உறுதுணையாக செயல்படுகிறார்கள். அவரது அறக்கட்டளை பெண்கள் சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து மறுசுழற்சி செய்து தட்டு மற்றும் கவர்ச்சிகரமான வீட்டு உபயோகப் பொருள்களை தயாரிக்கிறது. NIFT மற்றும் NID மாணவர்கள் கூறும் யோசனைகளை கேட்டு அதற்கேற்ப வடிவமைத்து செயல்படு கிறார்கள். மதிப்புகூட்டல் மற்றும் அளவிடுதல் குறித்தும் அவர்கள் யோசனை கேட்கிறார்கள்.

RC கிரேட்டர் அகமதாபாத் சங்கத் தலைவர் சதுர்வேதி கூறுகையில், செலவின் அடிப்படையில் இத்திட்டம் பெரியதாக இல்லாவிட்டாலும் மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றார்.■

# கண் பார்வையைக் காக்கும் கண் புரை அறுவைச் சிகிச்சை முகாம்கள்

ரோட்டரி செய்திக் குழு



*RC மும்பை பண்டப் தலைவர் உதய் ஷெட்டி (இடமிருந்து 3வது), நாராயண ஷாக்ரிதயா மற்றும் சங்கத்தினர் பக்திவேதாந்தா மருத்துவமனையில்.*

RC மும்பை பண்டப், RID 3141, நலிந்தோருக்குக் கண் பராமரிப்பை வழங்குவதற்கென, பக்திவேதாந்தா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, பில்லாவர் கழகத்துடன் இணைந்து, கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து கண் புரை இல்லாத பண்டப் என்ற திட்டத்தை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று, இந்த மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் நல்ல வசதிகளுடன் கூடிய நடமாடும் மருந்தகத்தில் இந்தப் பகுதிக்கு வருகிறார்கள், நோயாளிகளுக்குக் கண் நோய்கள் உள்ளனவா என்று பரிசோதிக் கிறார்கள்.

இந்தத் திட்டம் மும்பையில் உள்ள பண்டப் பகுதியில் வசிப்போரை இலக்காகக் கொண்டிருந்தாலும், ''நகரின் மற்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இதனால் பலன் பெறுகிறார்கள் என்றார் சங்கத்தலைவர் உதய்ஷெட்டி. கண்புரை உள்ளதாகக் கண்டறியப்படுகிறவர்கள் இரண்டு நாட்களுக்குப்பின் திரும்ப வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அங்கிருந்து அவர்கள் மீரா சாலையில் உள்ள மருத்துவமனைக்கு அறுவைச் சிகிச்சைக்கென அழைத்துச் செல்லப் படுகிறார்கள், சிகிச்சைக்குப் பிறகு அவர்களுடைய பகுதிக்குத் திரும்ப அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இதுவரை 8 முகாம்கள் நடை பெற்றுள்ளன, இதில் 470க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள், 148 பேர் இந்த மருத்துவமனையில் வெற்றிகரமாகக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். மருந்து, மருத்துவமனையில் தங்குதல், உணவு, போக்குவரத்து உள்ளிட்ட அறுவைச் சிகிச்சைச் செலவுகளை இந்த மருத்துவமனை செலுத்துகிறது. மாதாந்திர முகாம்களின் ஏற்பாடு, மற்ற பணிகளை இந்தச் சங்கம் கவனித்துக் கொள்கிறது.■

# துடிப்பான RID 3000 மாவட்ட மாநாடு

ரோட்டரி செய்திக் குழு



RIPR PDG *ஆஷெஸ் கங்குலி மற்றும் அவர் மனைவி நந்திதா.*



DG I *ஜெரால்டு மற்றும்* PDG M *முருகானந்தம் முன்னாள் துணை குடியரசு தலைவர் வெங்கையா நாயுடுவை கௌரவிக்கின்றனர். உடன் மார்கரெட் ஜெரால்டு மற்றும் சுமதி முருகானந்தம் ஆகியோரும் உள்ளனர்.*

RID 3000ன் முதல் பெண் ஆளுநராகப் போகும் DGE ஆனந்த ஜோதி, கார்னிவல் என்ற இரண்டு நாள் மாவட்டக் கருத்தரங்கில் தன் மையக் குழுவை அறிமுகப்படுத்தினார்.

கோவை PSG மாநாட்டு மையத்தில் இந்தக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்த இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு சமூகத்துக்குப் பலவிதமான திட்டங்களை நிறைவேற்றும் ரோட்டரியைப் பாராட்டினார். பேச்சாளர் சுகி சிவம் “தனக்குமேல் சேவை” புரிகிற ரோட்டரி மற்றும் ரோட்டரியன் களுக்கு நன்றி தெரிவித்தார். PDGக்கள் M முருகானந்தம் மற்றும் டாக்டர் ஜமீர் பாஷா இருவருக்கும் புகழ் பெற்ற சேவை விருதுகளை DG I ஜெரால்ட் வழங்கினார். 10 உறுப்பினர்களுக்குச் சேவை வழி விருதுகள் வழங்கப் பட்டன.

விஜய் TV நிகழ்ச்சி தொகுப்பாளர் கோபிநாத், தொழில்துறை வல்லுனர் M பொன்னுசுவாமி, திருநபர் கல்கி ஆகியோர் பார்வையாளர்களை ஊக்குவிக்கும் சொற்பொழிவுகளை வழங்கினார்கள். ரோட்டரியின் புதிய பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதல் கொள்கைபற்றிய குழு விவாதம் ஒன்றில் கல்கி, PDG ஜமீர் பாஷா, மாலா பாலசுப்ரமணியம் பங்கேற்றனர்.

இரண்டாவது நாளிலும், மக்களவை MP S வெங்கடேசன், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர் G சுந்தர்ராஜ், திரைப்பட இயக்குநர் S A சந்திரசேகர் உள்ளிட்ட புகழ் பெற்ற ஆளுமைகள் பலவிதமான தலைப்புகளில் சொற்பொழிவுகளை வழங்கினார்கள்.

மெட்ராஸ் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி K சந்துரு தன்னுடைய தனிப்பட்ட அனுபவங்களை நினைவுகூர்ந்து, “நம் சட்ட அமைப்பில் இந்தியாவின் பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் நீதி கிடைக்கும், ஆனால், அது தாமதமாகிறது” என்றார். தமிழ்த் திரைப்பட இயக்குநர் பார்த்திபன் அடுத்த தலைமுறைத் திரைக்கலைஞர்களுக்கு உருவாகி வரும் புதிய பாதையைப்பற்றிப் பேசினார். ஆன்கள் மற்றும் ஆனெட்களுக்குச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முன்னதாக நடைபெற்ற தொடக்க விழாவில், RI தலைவருடைய பிரதிநிதி PDG ஆஷெஸ் கங்குலி, RID 3142, அவருடைய மனைவி நந்திதாவுக்குக் கிராமியப் பண்பாட்டு நடனமாகிய ஒயிலாட்டம் மற்றும் கேரளத்தைச் சேர்ந்த தாளக் கருவியாகிய செண்டை மேளத்துடன் பெரிய வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்தத் தோழமைக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை ராமச்சந்திர பாபு தலைமையிலான கருத்தரங்கக் குழு செய்திருந்தது.■

விளம்பரம்

# District 3110

**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110





प्रतिबिंब
The Reflection
District Conference 2023




District 3110 organised its District Conference - प्रतिबिंब at Hotel Leela Ambience and Convention Center, Karkardooma, Delhi on 17th to 19th March. The chief guest was RI Director, Rtn A.S. Venkatesh and Mrs Vinita Venkatesh. PDG George Sundararaj was the RI President's Representative. A special session on Leadership was taken by Gaur Gopal Das. Another session on Team Building & Leadership was taken by Kapil Dev through a panel discussion. Other eminent speakers were Arun Gemini, Ira Trivedi, Ruma Devi, Sundeep Kochar and Dr Jitender Singh Shunty. DG Pawan Agarwal and 1st Lady Prachi Agarwal felicitated the members of College of Governors of the district.


Lighting the lamp with Chief Guest and RIPR


DG Family with Gaur Gopal Das


Address by Gaur Gopal Das


Felicitating Kapil Dev


Panel discussion with Kapil Dev


Panel discussion with RID AS Venkatesh


Felicitating Dr Jitender Singh Shunty


Chief Guest and RIPR


Address by George Sundararaj, RIPR


Ganesh Vandana


Organising Team


Lucky Draw by Ruma Devi

Do follow us: @Rotary3110

# District 3110 in ACTION





















**Rtn. Raj Mehrotra**
CDS (Admin)



***PDG Devender Kr. Agarwal***
ARRFC

*Congratulations*



***PDG Sharat Chandra***
DRFC

Congratulations Rtn Umesh Gupta of RC Agra
for winning the coveted bat autographed by Kapil Dev
during the District Conference by becoming Major Donor by contributing USD 10,000 to The Rotary Foundation.



Rotary PEOPLE OF ACTION

# பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக அமைந்த துருக்கி பயணம்!

**ரஷீதா பகத்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, RID 3000-த்துக்கு உட்பட்ட ரோட்டேரியன்கள் 125 பேர், அப்போதைய DGE I ஜெரால்டு தலைமையில் துருக்கிக்கு விடுமுறை பயணத்தை திட்டமிட்டனர். 2013 ஆண்டு 115 ரோட்டேரியன்களுக்கு தலைமை வகித்து சீனாவுக்கு நல்லெண்ண பயணம் மேற்கொண்டதைப் போலவே இந்த பயணத்தையும் திட்டமிட்டிருந்தேன். நாங்கள் அப்போது பெய்ஜிங் மற்றும் ஷாங்காய் நகரங்களுக்குச் சென்றிருந்தோம். முதலில் 2022ல் ரஷியா செல்ல நினைத்தோம். ஆனால், ரஷியா-உக்ரைன் போர் காரணமாக துருக்கிக்கு செல்ல முடிவு செய்தோம் என்றார் ஜெரால்டு.

மதுரை, திருச்சி, திண்டுக்கல், புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், தேனி, கொடைக்கானல் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் பயணத்துக்கு வர ஒப்புக்கொண்டனர். ஹோட்டல்களில் அறைகள் முன் பதிவு செய்யப்பட்டன. விசாவும் கிடைத்து விட்டது. ஆனால், பயணத்தை தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னால் துருக்கி மற்றும் சிரியாவில் கடும் பூகம்பம் ஏற்பட்டது. துருக்கிக்கு சுற்றுலா போக நினைத்தவர்கள் மனதில் கிலி ஏற்பட்டது. ஆனால், அதன் பிறகு மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் C R வெங்கடேஷ், துருக்கி பயணத்தை ரத்துச் செய்யவேண்டாம் என்றார். நாம் எல்லோரும் ரோட்டேரியன்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதுதான் நமது வேலை. எனவே துருக்கி சென்று பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்துவிட்டு வருவோம் என்றார். எனவே நான் அவரிடம், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் திட்டமிடுங்கள். நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம் என்று கூறினேன் என்று குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவரான DG ஜெரால்டு கூறினார்.

வெங்கடேஷை திட்ட ஒருங்கிணைப்பாளராக் கொண்டு RID 3000-க்கு உட்பட்ட துருக்கி




*RC மதுரை மெட்ரோ ஹெரிட்டேஜ் தலைவர் C R வெங்கடேஷ் (இடமிருந்து 2வது) மற்றும் குழுவினர் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவி பொருட்களுடன்.*




DG I *ஜெரால்டு காசோலையை* PDG *சுவாத்திடம் (அவரின் வலதில்) அளிக்கிறார். உடன் மார்கரட் ஜெரால்டு,* PDG *கரா,* PRID *சஃபக் ஆல்பே (வலதிலிருந்து 3வது), குட்வில் மிஷன் தலைவர் சித்ரா ரமேஷ், வெங்கடேஷ் மற்றும்* RC *இஸ்தான்புல் அனடோலியா தலைவர் அய்ஸ் (இடது) ஆகியோரும் உள்ளனர்.*

நிவாரணத்திற்காக பணியாற்றத் தொடங்கினர். அவர்களின் இலட்சியம் ரூ.10 லட்சம் திரட்டுவதாக இருந்தது. ஆனால், மூன்று நாட்களில் ரூ.15 லட்சம் நிதி திரட்டப்பட்டது என்றார் ஜெரால்டு.

ஒவ்வொரு சங்கமும் குறைந்தபட்சம் ரூ.5,000 தரவேண்டும் என்று கூறியிருந்தோம். ஆனால், சில சங்கங்கள் ரூ.25,000 வரை பங்களிப்பு செய்திருந்தன. மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் ரூ.2 லட்சமும், கரூர் ரோட்டரி சங்கம் ரூ.1.18 லட்சமும் பங்களிப்பு செய்திருந்தன என்று நினைவுகூர்ந்தார் வெங்கடேஷ்.

நிவாரண நிதிக்காக சேகரிக்கப் பட்ட பணத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அவச ரத் தேவைக்காக கூடாரங்கள், படுக்கைகள் வாங்குவதற்கு ரூ.2.38 லட்சம் செலவிட முடிவு செய்யப் பட்டது. ரோட்டேரியன்கள் அவற்றை இங்கேயே வாங்கினர். மேலும் நாங்கள் 125 பேர் சென்றதால், ஒவ்வொருவரும் இத்தனை கிலோ லக்கேஜ் எடுத்துச் செல்லலாம் என்று இருந்ததால் நிவாரணப் பொருள்களை நாங்கள் கையிலேயே எடுத்துச் சென்றோம் என்றார் ஜெரால்டு. இஸ்தான்புல் நகரை அடைந்ததும், பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஷெல்டர் பாக்ஸ் மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி வரும் அமெரிக்காவின் சான்டா கிளாரா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஹர்பிர் கௌர் பாட்டியாவிடம் இந்த நிவாரணப் பொருள்களை ஒப்படைத்தோம் என்று அவர் மேலும் கூறினார்.

மீதமுள்ள ரூ.14 லட்சம் (325,000 துருக்கி லிரா) காசோலையாக, RI முன்னாள் இயக்குநரும் துருக்கியைச் சேர்ந்தவருமான சஃபாக் ஆல்பே, PDG கரா, இஸ்தான்புல் அனடோலியா இன்டர்நேஷனல் ரோட்டரி சங்கத் தலைவர் அய்ஸ் மற்றும் இஸ்தான்புல் ரோட்டரி சங்கத்தினர் முன்னிலையில் RID 2420 ஆளுநர் சுவாத்திடம் வழங்கப்பட்டது. இந்த நிதி அவசரமாக தேவைப் படும் நடமாடும் மருத்துவ மனையை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் என்று DG சுவாத் கூறினார்.

துருக்கியில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியை வழங்கிய பின்னர் இந்திய ரோட்டேரியன்கள் விடுமுறையை கழிக்க இஸ்தான்புல், கப்பாடோசியா ஆகிய இடங்களுக்குச் சென்றனர். நாங்கள் விடுமுறையை மகிழ்ச்சியாக கழித்தோம். அதே நேரத்தில் ரோட்டேரியன்கள் என்ற வகையில் நாங்கள் செய்யவேண்டிய உதவிகளையும் செய்தோம் என்று ஜெரால்டு மேலும் கூறினார்.

அடுத்து என்ன என்று கேட்ட போது அவர் கூறுகையில், பூகம்பத்தால் ஏற்பட்ட பேரழிவு மிக மோசமாகவே இருந்தது. அந்த மக்களுக்கு நாம் செய்யும் உதவிகள் தொடர்ந்து தேவைப்படுகின்றன. இடிந்துபோன கட்டடங்களை புதுப்பிக்க பெரும் தொகை தேவைப் படுகிறது. எனவே இந்தியா முழுவதும் உள்ள ரோட்டேரியன்களிடம் துருக்கி நிவாரண நிதிக்கு முடிந்தவரை அதிக பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார் அவர்.■



# பசியை விரட்ட, ஒரு கைப்பிடி அரிசி

கிரண் ஜெஹரா



ஹைதராபாத் சம்ஸ்கார் – தி லைஃப் பள்ளியின் இன்டராக்ட் சங்கத் தலைவர் ஷைனாஸ் ஷேக் தன் கையில் ஒரு கைப்பிடி அரிசியை வைத்துக்கொண்டு சொன்னார், “பசி இறப்புகளை முடித்துவைக்கவும் நம் உள்ளூர்ச் சமூகங்களில் பசி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் தேவை, இதுமட்டும்தான்.” ஷைனாஸும் அவருடைய சங்க உறுப்பினர்களும் கைப்பிடி அரிசித் திட்டத்தின் வழியாக ஒரு கைப்பிடி அரிசியைக் கொடையளித்து நகரில் பசியை முடித்துவைக்க உதவும்படி ஹைதராபாதின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்கப் புள்ளி, இந்த இன்டராக்டர்கள் பள்ளிக்கு வரும் போது தங்கள் வீட்டிலிருந்து ஒரு கைப்பிடி அரிசியைக் கொண்டுவந்து, வாசலில் வைக்கப் பட்டுள்ள ஒரு பாத்திரத்தில் அதைப் போடும்படி இந்தச் சங்கத்தின் பெற்றோர் சங்கமாகிய RC ஹைதராபாத் லெஜென்ட்ஸ் கேட்டுக்கொண்டது தான். முதல் சுற்று நன்கொடைகளின் மூலம் 250 கிலோ அரிசி திரட்டப்பட்டது. அது, ஹைதராபாத் பேகம் பெட்டில் உள்ள தேவ்னார் கண் பார்வைக் குறைபாடுள்ளோர் பள்ளிக்கு வழங்கப்பட்டது.

“இன்டராக்டர்கள் வழங்கு தலின் மகிழ்ச்சியை நேரடியாகக் கண்டார்கள். இந்தத் திட்டத்தைத் தொடரும்படி நாங்கள் அவர்களை ஊக்குவித்தோம்” என்கிறார் RC ஹைதராபாத் லெஜென்ட்ஸ் தலைவர் மோகன வம்சி.

பின்னர், இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சில இன்டராக்டர்களும் சில ரோட்டரியன்களும் நகரம் முழுவதுமுள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று இந்தத் திட்டத்துக்கான ஆராய்ச்சியை நடத்தினார்கள். “30லிருந்து 40 குழந்தைகளைக் கொண்ட ஆதரவற்றோர் இல்லம் ஒன்றில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவு வழங்கக் கிட்டத்தட்ட 300 கிலோ அரிசி தேவைப்படுகிறது. அவர்களிடம் போதுமான அளவு அரிசி இல்லாவிட்டால், குழந்தைகள் பசியுடன் தூங்குகிறார்கள்” என்கிறார் வம்சி. “இந்தக் குழந்தைகள் சந்திக்கும் போராட்டங்களைப்பற்றிக் கேள்விப்பட்ட இன்டராக்டர்கள் மிகவும் நெகிழ்ந்தார்கள்”, பசியை எதிர்க்கும் பரப்புரை ஒன்றைச் சுறுசுறுப்புடன் தொடங்கினார்கள்.

இதற்கு ஆய்வு செய்தபோது, உணவுக் கொள்கை இதழ் வெளியிட்ட ஆய்வு ஒன்றைப்பற்றி இவர்கள் கேள்விப்பட்டார்கள். அதில், அரிசி நன்கொடை உள்ளிட்ட அனைத்து உணவு உதவித் திட்டங்களும் “இந்தியாவில் பசியைக் குறைப்பதில் குறிப்பிடக்கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கலாம். உணவு உதவி கிடைக்கும்போது, பெண்களும் குழந்தைகளும் கூடுதலாக உண்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த உணவு நன்கொடைகள் குழந்தைகளுடைய மேம்பட்ட நலனுக்கு வழிவகுக்கலாம், இரத்த சோகையைக் குறைக்கலாம், வளர்ச்சியை மேம்படுத்தலாம்.”

இன்டராக்டர்கள் தாங்கள் கொடையளிக்கும் அரிசியின் அளவைப் படிப்படியாக மிகுதியாக்கினார்கள். மற்ற மாணவர்களும் இதைப் பின்பற்றத் தொடங்கினார்கள். இதையடுத்து, இந்த முன்னெடுப்பு பெரிய அளவில் வளர்ந்து பள்ளியைத் தாண்டிச் சென்றது. ரோட்டரியன்களுடைய

தொடர்புகளின் வழியாகத் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிட மிருந்து பெரிய நன்கொடைகள் இந்தத் திட்டத்துக்குக் கிடைக்கத் தொடங்கின.

"உலகம்முழுவதும் போதுமான உணவு, உடை அல்லது உறைவிடம் இல்லாத குழந்தைகள் உள்ளார்கள். உக்ரைன், சிரியா, துருக்கி என எங்கும் குழந்தைகள் துன்பப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் செய்யக்கூடிய குறைந்தபட்ச உதவி, நம் சொந்தச் சமூகங்களுக்கு உதவுவதும் நம்மைச் சுற்றியுள்ள குழந்தைகளுடைய வாழ்க்கையை எளிதாக்குவதும் தான்'' என்கிறார் ஷைனாஜ். இன்டராக்டர் என்ற முறையில் இவர் "என்னிடம் இருப்பதற்கு நன்றி தெரிவிக்கக் கற்றுக்கொண்டுள்ளேன், சமூகத்துக்குச் சிறிய அளவிலாவது திரும்பக் கொடுக்க விரும்புகிறேன்.''


*இன்டராக்ட் சங்கத்தினர் முன்னிலையில் ஒரு மாணவி அரிசி வழங்குகிறார்.*

உணவைக் கொடையளிப்பதில் இன்னொரு பிரச்சனையை வம்சி சுட்டிக்காட்டுகிறார், "பொதுவாக, மற்ற நேரங்களைவிடத் திருவிழாக் களின் போது மக்கள் கூடுதல் தாராள மனப்பான்மையுடன் உள்ளார்கள். ஆனால், பசிப்பிரச்சனை நேரம் பார்த்து வருவதில்லை. அதை நாம் ஆண்டு முழுவதும் கையாள வேண்டியிருக்கிறது.'' சென்ற தீபாவளியின் போது, இன்டராக்டர்கள் மற்ற பள்ளிகளில் அரங்குகளை அமைத்து, பசி மற்றும் நலிந் தோரிடையில் அது உண்டாக்கக் கூடிய கடுமையான தாக்கங்களைப் பற்றிய நுண்ணுணர்வை மாணவர்கள் மற்றும் பெற்றோரிடையில் உண்டாக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.



சமீபத்தில், இந்த மாவட்டம் ஒரு PR நிகழ்ச்சியில் பாலிவுட் மற்றும் டோலிவுட் நடிகர்களுக் கிடையிலான ஒரு கிரிக்கெட் போட்டியை நடத்தியது. RC ஹைதராபாத் லெஜென்ட்ஸ் இந்தப் போட்டிக்கான 250 நுழைவுச் சீட்டுகளைத் தலா ரூ.250 விலையில் வாங்கி, அவற்றைச் சங்க உறுப்பினர்களுக்குத் தலா ரூ.599 விலையில் விற்றது; இன்டராக் டர்களும் 70 நுழைவுச் சீட்டுகளைத் தலா ரூ 400க்கு விற்றார்கள். இதன் மூலம் கிடைத்த பணம் "ஒரு கைப்பிடி அரிசி'' முன்னெடுப்புக்குக் கொடையளிக்கப்பட்டது.

ஜூன் 2023க்குள் 20,230 கிலோ அரிசியைத் திரட்டவேண்டும் என்று இச்சங்கம் இலக்கு அமைத்துள்ளது. "நாங்கள் ஒரு கைப்பிடி அரிசியுடன் தொடங்கினோம், ஏற்கெனவே 10,000 கிலோ அரிசிக்கு மேல் திரட்டியுள்ளோம், அவற்றை எங்கள் நகரத்தில் இருக்கும் ஆதரவற்றோர் இல்லங்களுக்குக் கொடையளித் துள்ளோம். எங்கள் அரிசிப் பாத்திரம் உண்மையில் ஓர் அமுத சுரபி ஆகிவிட்டது, நாங்கள் கொடுக்கக் கொடுக்க, அது நிரம்பிக் கொண்டே இருக்கிறது'' என்கிறார் இந்த 15 வயது இன்டராக்ட் தலைவர். ■

Rotary PEOPLE OF ACTION

# வையில் உள்ள பழங்குடியினரின் வீடுகளில் ப்ராஜெக்ட் சூர்யா விளக்கேற்றியது

V முத்துகுமரன்

மராத்தி நாளிதழை தினசரி வழக்கமாக படிக்கும், DGE ஸ்வாதி ஹெர்கல், RID 3132, மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள வை தாலுகாவின் ஏழு கிராமங்களில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் கட்காரி மற்றும் தங்கர் பழங்குடியினர் எதிர்கொள்ளும் கஷ்டங்களை அதில் படித்து அதிர்ச்சியடைந்தார். ஊர் எல்லையோரங்களில் வசிக்கும் பழங்குடி சமூகங்களில் மின்சாரம் இல்லாததால், இரவு நேரங்களில் வனவிலங்குகளால் அவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டனர். அவர்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல கிலோமீட்டர்கள் மலையேறி இறங்க வேண்டியிருந்தது. ஆனால், சிறுத்தைகள் நடமாடுவதால் அந்தி சாயும் முன்பே வீடு திரும்ப வேண்டும், என்கிறார் இந்த பழங்குடியினர் குடியிருப்புகளில் 148 சோலார் விளக்குகள் மற்றும் தெருவிளக்குகளை நிறுவிய ப்ராஜெக்ட் சூர்யாவின் தலைவர் ஸ்வாதி.

ஜனவரி முதல் வாரத்தில் RC வையின் போர்டு மீட்டிங்கில், சங்கத்தலைவர் ஜிதேந்திரா பதக், பழங்குடியினர் குடியிருப்புகளை நேரில் ஆய்வு செய்வதற்காக ஸ்வாதி தலைமையில் 10 பேர் கொண்ட குழுவை உருவாக்கினார். “பழங்குடியினர் காலனிகளில் இருள் அதிவிரைவில் சூழ்ந்திருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். சிறுத்தைகளின் தாக்குதலுக்கு பயந்து இரவு 7 மணிக்குப் பிறகு அவர்கள் வெளியே வர முடியாது, நிம்மதியாக தூங்கவும் முடியாது என்று சுவாதி நினைவு கூர்ந்தார். முதற்கட்ட கணக்கெடுப்பைத் தொடர்ந்து, ஐந்து பேர் கொண்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது, அவர்கள் இந்த தொலைதூர மலைப் பகுதிகளுக்கு பல பயணங்களைச் செய்து பணிகளைக் கண்காணிக்க வேண்டியிருந்தது.

முதற்கட்டமாக, 72 மண் வீடுகள் மற்றும் மூங்கில் குடிசை களுக்கு தலா இரண்டு சோலார் விளக்குகள் வழங்கப்பட்டன, மேலும் நான்கு காலனிகளில் ஒரு சோலார் தெரு விளக்கு நிறுவப்பட்டது. மொத்தம் ரூ.2.5 லட்சம் மதிப்பிலான 148 சோலார் சாதனங்கள் நிறுவப்பட்டன. இந்த திட்டத்திற்கு உறுப்பினர் பங்களிப்புகள் மற்றும் ஓஹியோவைச் சேர்ந்த PDG மீனா படேல் வழங்கிய $1,000 நன்கொடை மூலம் நிதியளிக்கப்பட்டது. “அடுத்த கட்டத்தில், நாங்கள் 238 பழங்குடியின வீடுகளில் சோலார் விளக்குகளை நிறுவுவோம். இதன் மூலம் இந்த ஏழு கிராமங்களில், சில செங்குத்தான மலைகளில் இருக்கும் குடியிருப்புகள் உட்பட அனைத்து குடியிருப்புகளையும் உள்ளடக்கியுள்ளோம்” என்று சுவாதி விளக்குகிறார். பழங்குடியினர் குழுக்கள் தோம், மலப்பூர், வைகான், போர்கான், கோலேஷ்வர், மட்கனி மூரா மற்றும் கோந்தவலே கிராமங்களில் அமைந்துள்ளன.



*DGE ஸ்வாதி ஹெரகல் மற்றும் திட்ட குழுவினர் கோலேஷ்வர் பழங்குடி குடியிருப்புக்கு செல்கின்றனர்.*

ஒவ்வொரு வீட்டிலும் சோலார் விளக்குகளை சார்ஜ் செய்ய வீட்டின் மேல் பேட்டரியுடன் கூடிய சோலார் பேனல் மற்றும் மொபைல் போன் சார்ஜர் இருக்கும்.

ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்கப்பட உள்ள அடுத்த கட்டத்தில், மீதமுள்ள குடும்பங்களுக்கு சோலார் விளக்குகள் மற்றும் விடப்பட்ட காலனிகளில் தெரு விளக்குகள் பொருத்தப்படும், என்று உறுதியளிக்கிறார் ஸ்வாதி.



*பழங்குடியினப் பெண்ணான லக்ஷ்மி பவாருக்கு ஸ்வாதி சோலார் விளக்கைப் பரிசளிக்கிறார்.*

### ஒரு முக்கியமான தேவை

பழங்குடியின கிராமங்களுக்கு சோலார் விளக்குகளின் தேவையை விளக்கி, சங்கத்தலைவர் பதக் கூறுகையில், இனி இருட்டிய பிறகு அவர்கள் வீட்டிற்குள் இருக்க வேண்டியதில்லை. தெருவிளக்குகள் அவர்களின் ஊர்களை பிரகாசமாகவும் வெளிச்சமாகவும் வைத்திருக்கின்றன 13 ஆண்டுகளுக்கு முன்பு கணவரை இழந்து தனிமையில் வாழும் கோந்தவலேயைச் சேர்ந்த ராதா வாட்கர் (70) ரோட்டரிக்கு தன் மனமார்ந்த நன்றியை தெரிவித்து “எனது வாழ்க்கையில் இப்போது சோலார் விளக்குகள் மூலம் ஒரு ஒளி கிடைத்துள்ளது. இப்போது நான் தனிமையாக உணரவில்லை” என கூறுகிறார்

கோலேஷ்வரில் வசிக்கும் மற்றொரு பயனாளியான பாபு குடேகர் (75), முன்பு தனது மொபைல் கைபேசியை ரீசார்ஜ் செய்ய இரண்டரை மணிநேரம் இந்த மலையின் கீழே உள்ள கிராமத்திற்கு நடக்க வேண்டியிருந்தது. இப்போது இந்த மொபைல் ரீசார்ஜர் மற்றும் பேட்டரி மூலம், நான் அந்த ஆபத்தான மலையேற்றத்தில் கீழே இறங்க வேண்டிய அவசியமில்லை’’ என்று கூறுகிறார். மேலும், அவர் திரி விளக்குகளுக்கு மாதம் 15 லிட்டர் எண்ணெய் வாங்க செலவழித்த பணத்தை இப்போது சேமிக்க முடிகிறது. “சோலார் விளக்குகள் என் வாழ்க்கையை சிறப்பாக மாற்றியுள்ளன,” என்று அவர் கூறுகிறார்.

15 பேர் கொண்ட குழு ஏழு பழங்குடியின குக்கிராமங்களில் பயனாளிகளிடம் சோலார் கருவிகளை ஒப்படைக்க கடினமான மலையேற்றத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.” இது எங்கள் அனைவருக்கும் ஒரு அனுபவமாக இருந்தது. ஆனால் கிராம மக்களுக்காக இன்னும் பலவற்றைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்கிறார் ஸ்வாதி.



DGE *ஸ்வாதி மற்றும்* Rtn *தீபக் பகடே தங்கர் பழங்குடியினருக்கு விளக்குகளை அளிக்கின்றனர். உடன்* RC *வை தலைவர் ஜிதேந்திர பதக் (வலது) மற்றும் ப்ரமோத் ஷிண்டே ஆகியோரும் உள்ளனர்.*

### பள்ளிக் கல்வி

திட்டக் குழுவினர் அடிக்கடி கிராமங்களுக்குச் செல்லும் போது, அங்கே குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்குப் பதிலாக மீன்பிடியில் ஈடுபட்டு, சந்தைகளில் விற்பனை செய்வதைக் கண்டறிந்தனர்.” அவர்கள் அதை பிழைப்புக்காக செய்கிறார்கள். இந்த கிராமங்களில் உள்ள பழங்குடியின குழந்தைகளுக்கு மூன்று வேளை உணவு வழங்குவது குறித்து உள்ளூர் பள்ளி நிர்வாகத்துடன் பேச உள்ளோம், இதனால் அவர்கள் வகுப்புகளுக்கு சென்று படிக்க முடியும். இப்போது வழங்கப்படுவது போல் மதிய உணவை மட்டும் வழங்குவது போதாது என்று DGE கூறுகிறார்.■

Rotary PEOPLE OF ACTION

# பெங்களூரு மருத்துவமனைக்கு ஸ்டெம் செல் செயலாக்க உபகரணங்கள் நன்கொடை

ரோட்டரி செய்திக் குழு

ப்ராஜெக்ட் Hope-ன் கீழ், RC பெங்களூர் லேக்சைடு, RID 3190, ஸ்டெம் செல் பாதுகாப்பு மற்றும் தன்னியக்க ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சைக்கான உபகரணங்களை நன்கொடையாக வழங்கியது. கிட்வாய் மெமோரியல் இன்ஸ்டிடியூட் ஆப் ஆன்காலஜி உடன் இணைந்து ரூ.1 கோடி திட்டம் மேற்கொள்ளப்பட்டது மற்றும் இரண்டு கார்ப்பரேட்டுகள், விர்சுசா கார்ப்பரேஷன் மற்றும் எம்பிடெல் டெக்னாலஜிஸ் ஆகியவற்றின் CSR நிதியுதவியுடன் இது சாத்தியமானது.

கிட்வாய் நிறுவனம் முன்னர் ஸ்டெம் செல் செயலாக்கத்தை அவுட்சோர்சிங் செய்தது, ஆனால் இப்போது நமது சங்கத்தின் ப்ராஜெக்ட் ஹோப் மருத்துவ மனையை தன்னிறைவு பெற செய்துள்ளது. நாங்கள் ஒரு அபெரெசிஸ் இயந்திரம் மற்றும் அதி-குறைந்த வெப்பநிலை உறைவிப்பான் ஆகியவற்றை மருத்துவமனைக்கு வழங்கி யுள்ளோம், என்கிறார் சங்கத்தலைவர் பிரசன்னா மரார்.




மருத்துவமனையின் குழந்தை புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் வசுந்தரா கைலாஸ்நாத், சங்கத்திற்கு நன்றி தெரிவித்து, புற்றுநோய், இரத்தம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டல கோளாறுகள் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை ஒரு முக்கிய முறையாகும் என்று விளக்கினார். மிக அதிக அளவு கீமோதெரபியைப் பெற்ற புற்றுநோய் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப்படுகிறது. ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை உடலில் ஆரோக்கியமான ஸ்டெம் செல்களை நிரப்புகிறது, இது நோயாளிகள் கீமோதெரபியில் இருந்து மீண்டு மேலும் சிகிச்சை யைப் பெற உதவுகிறது என்றார் வசுந்தரா.■

## மாண்ட்வியில் வேலை வாய்ப்புத் திருவிழா



RC மாண்ட்வி, RID 3054, ஃபிப்ரவரி 23 அன்று ரோட்டரியின் 118வது நிறுவல் நாளைக் கொண்டாடும் வகையில் இந்த நகரில் நடத்திய வேலை வாய்ப்புத் திருவிழாவில் சுமார் 500 பேர் பங்கேற்றனர். இவர்களில் 150 பேரை நிறுவனங்கள் அடுத்த சுற்றுக்குத் தேர்ந்தெடுத்தன என்றார் சங்கத்தலைவர் தேஜஸ் வாஸ்வானி, திட்டத்தலைவர் பவின் கனாத்ரா, அக்ஷய் மேத்தா, ஹரியோம் அபோதி ஆகியோரை பாராட்டினார்.

கட்ச் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், மாண்ட்வி தொழில் பயிற்சி அமைப்பு ஒத்துழைப்புடன் நடைபெற்ற, ரிலையன்ஸ் ரீடெய்ல், வோடஃபோன், ICICI வங்கி, பிரிட்டானியா இன்டஸ்ட்ரீஸ், டார்ஃப் கெடல் கெமிக்கல்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள், உள்ளூர்த் தொழில்முனைவோர், மருத்துவமனை அமைப்புகள் பங்கேற்ற இந்த வேலை வாய்ப்புத் திருவிழாவைத் தொழிலதிபர் ஷைலேஷ் சுரையா தொடங்கி வைத்தார்.■

# அரசு மருத்துவமனைக்கு டயாலிசிஸ் கருவிகள்

ரோட்டரி செய்திக் குழு




*அஸ்பின்வால் CFO T R ராதாகிருஷ்ணன் (இடது) அரசு மருத்துவமனை கண்காணிப் பாளர் Dr ஷாஹிர் ஷாவுடன் RC கொச்சின் பீச்ஸைட் செயலர் C அஜய்கிருஷ்ணன், DG ராஜ்மோகன் நாயர், சங்கத்தலைவர் சிஜோ ஜோஸ், ஷியாஸ் ஹஷிம் மற்றும் முரளி நாயர்.*

RC கொச்சின் பீச்-சைட், RID 3201 நிறைவுசெய்த CSR நல்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, எர்ணாகுளம் அரசு மருத்துவமனையின் கண்காணிப்பாளருக்கு ரூ.5 லட்சம் மதிப்புள்ள, டயாலிசிஸ் பிரிவுகளுக்கான 5 மல்ட்டிப்பாரா மானிட்டர்களை DG ராஜ்மோகன் நாயர் வழங்கினார்.

இந்தத் திட்டத்தை ஆதரித்த அஸ்பின்வால் நிறுவனத்தின் தலைமை நிதி அலுவலர் மற்றும் இயக்குநர் Rtn ராதாகிருஷ்ணனும் இந்த விழாவில் பங்கேற்றார். நலிந்த நோயாளிகளுக்கு இந்த மருத்துவமனையில் டயாலிசிஸ் வழங்க இந்தக் கருவி பயன்படும். சங்கத் தலைவர் சிஜோ ஜோஸ், செயலாளர் அஜய்கிருஷ்ணன், ஆளுநருடைய குழுப் பிரதிநிதி ஷியாஸ் ஹாஷிம், Rtn முரளி நாயர் ஆகியோரும் இந்த விழாவில் பங்கேற்றார்கள். மாவட்ட ஆளுநர் மற்றும் சங்கத்தின் முயற்சிகளுக்கும் அஸ்பின்வால் நிறுவனத்தின் CSR முன்னெடுப்புக்கும் மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் நன்றி தெரிவித்தார்.■

---

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**சங்க அங்கீகாரங்கள்**

ரோட்டரி அறக்கட்டளை தன்னுடைய நல்கைகள், திட்டங்களுக்குச் சங்கங்களின் ஆதரவுக்கு அங்கீகாரம் பெறுவதற்குப் பல வாய்ப்புகளை வழங்குகிறது. My Rotary மாவட்ட/சங்கத் தலைவர்களுக்குக் கிடைக்கும் சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கை, நடப்பு ரோட்டரி ஆண்டில் பல்வேறு சங்கப் பதாகைகளை நோக்கி (100% அறக்கட்டளைக்கு வழங்கும் சங்கம்; 100% ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும் சங்கம்; ஆண்டு நிதி வழங்கலில் தனி நபர் தொகையில் சிறந்த மூன்று; 100% பால் ஹாரிஸ் சமூகச் சங்கம்; 100% பால் ஹாரிஸ் தோழமைச் சங்கம் (ஒரு முறைமட்டும் வழங்கப்படும் பதாகை) மற்றும் 100% ரோட்டரியின் வாக்குறுதி சங்கம்) அந்தச் சங்கத்தின் முன்னேற்றத்தைக் காட்சிப்படுத்து கிறது. சங்கப் பதாகைகளைப்பற்றிய தகவல்களுக்கு: *https://www.rotary.org/en/donate/recognition*

உறுப்பினர் எண்ணிக்கை மாற்றங்கள், கூடுதல் அல்லது மறுபடி பகிர்ந்தளிக்கப்பட்ட பங்களிப்பால், சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கையில் பட்டியலிடப்படும் பதாகை பெறுவோர் ரோட்டரி ஆண்டுமுழுவதும் மாறலாம். ஜூன் 30ல் ரோட்டரி ஆண்டு நிறைவடைந்தவுடன் TRF நிறைவுப் பதாகைச் சான்றிதழைச் செயல்முறைப்படுத்தும். முந்தைய ஆண்டில் பெறப்பட்ட சங்கப்பதாகைகள் அக்டோபர் அல்லது நவம்பரில் இப்போதைய DGக்கு அனுப்பப்படுகின்றன. *rotarysupportcenter@rotary.org* என்ற மின்னஞ்சல் முகவரியில் மாவட்ட அறக்கட்டளைப் பதாகை அறிக்கையைக் கோரலாம், சங்க/மாவட்டத் தலைவர்களுடைய என் ரோட்டரி உள்நுழைவு வழியாகவும் இது கிடைக்கிறது.

**மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரம்**

தனி நபர்கள் அல்லது இணையருடைய மொத்த வழங்கல் $10,000ஐத் தொடும்போது, பரிசு வகை எதுவாக இருப்பினும், TRF அவர்களை அங்கீகரிக்கிறது. இந்த அங்கீகார நிலையைத் தனி நபர் பங்களிப்புகளின் வழியாகமட்டும்தான் எட்ட இயலும், அங்கீகாரப் புள்ளிகளை மாற்றுவதன்மூலம் எட்ட இயலாது. மிகப் பெரிய நன்கொடையாளர்கள் ஒவ்வொரு புதிய அங்கீகார நிலையிலும் பரிசை நினைவூட்டும் படிக அங்கீகாரப் பொருள், ஊசியை(ஊசிகளை)த் தேர்ந்தெடுக்கலாம். (நிலை வரம்புகள்: நிலை 1: $10,000-$24,999; நிலை 2: $25,000-$49,999; நிலை 3: $50,000-$99,999; மற்றும் நிலை 4: $100,000-$249,999.

இணையர் பங்களிப்பை மிகப் பெரிய நன்கொடை யாளர் அங்கீகாரத்துக்கு இணைக்கலாம். உங்கள் கணக்கை இணையர் கணக்குடன் இணைக்க, நன்கொடையாளர் சேவைகள் குழுவைத் (*Ashwini.Sharma@rotary.org* ) தொடர்பு கொள்ளுங்கள்.■

Rotary PEOPLE OF ACTION

# சென்னையில் ஒரு மாறுபட்ட இசை விழா

ஜெய்ஸ்ரீ

கடந்த 2002-ஆம் ஆண்டு டிசம்பரில், அப்போது குடியரசுத் தலைவராக இருந்த அப்துல்கலாம், சென்னையில் உள்ள மியூஸிக் அகாதெமியின் பிளாட்டினம் ஜுபிளி கொண்டாட்டத்துக்கு தலைமை வகித்து DRDO-வின் மாற்றுத் திறனாளிகள் குழுவை திடீரென மேடைக்கு அழைத்து, தில்லியில் தன்னுடைய அதிகாரபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனில் உள்ள மொகல் கார்டனில் உள்ள மலர்கள் குறித்து தாம் எழுதிய கவிதையை அவர்கள் மூலம் அரங்கேற்றினார்.

இந்த தனித்துவமான செய்கையால் ஈர்க்கப்பட்ட நாங்கள் மாற்றுத்திறனாளிகள் இசைக்கலைஞர்களுக்கு தளத்தை வழங்குவதற்கு அகாதெமியில் சிறப்பு இசைவிழாவை நடத்த எங்களைத் தூண்டியது என்கிறார் RC மெட்ராஸ் கோரமண்டல் தலைவர் ரமேஷ் ஆனந்த். பார்வையற்றோருக்கான பள்ளியான கர்ண வித்யாவைச் சேர்ந்த, இசையில் திறமையான மாணவர்களை அழைத்து வந்து 2005-ஆம் ஆண்டு இணையான மியூஸிக் திருவிழாவின் (Parallel Music Fest) முதல் பதிப்பை சங்கம் தொடங்கியது. இரண்டு தசாப்தங்களாக அந்த பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்காகவும், திறன் வளர்ப்புக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் அவர்களை நாங்கள் ஆதரித்து வருகிறோம். எங்கள் முதல் தொகுதி மாணவர்கள், முதன்மையான கலைஞர்களுக்கு இணையாக இசை நிகழ்ச்சிகளை நடத்தியது கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். அதன் பிறகு நாங்கள் திரும்பிப் பார்க்கவே இல்லை. இது எங்களின் 16-வது ஆண்டு இணையான இசைத் திருவிழாவாகும் என்றும் அவர் கூறினார். ஒவ்வொரு ஆண்டும் இந்த இசைவிழா டிசம்பர் மாதம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.

*பார்வையற்ற மிருதங்க வித்வான் K ஸ்ரீவத்சாவிற்கு மியூஸிக் அகாதெமி தலைவர் N முரளி மற்றும் கர்நாடக இசை பாடகர் நெய்வேலி சந்தானகோபாலன் PMF விருதினை வழங்குகின்றனர்.*



மாற்றுத்திறனாளிகளுக்கு நம்பிக்கையை ஊட்டுவதும், அவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து ஊக்குவிப்பதும் தான் எங்கள் நோக்கமாகும். அவர்கள் இதயபூர்வமாகவும், மனப் பூர்வமாகவும் முழுமையாக இதில் ஈடுபட்டால், சாதனைகளுக்கு ஊனம் தடையல்ல என்பதை அவர்கள் உணரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்றார் PMF திருவிழாவின் தலைவர் R ஸ்ரீதர்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் இசை விழா கொண்டாடப்படும் நேரத்தில் மியூஸிக் அகாதெமி, சிறந்த இசைக்கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சங்கீத கலாநிதி விருது வழங்கி கௌரவித்து வருகிறது. 2005-ஆம் ஆண்டு பார்வையற்ற வயலின் கலைஞர் Dr M சந்திரசேகரனுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. கர்ண வித்யா மாணவர்கள் அவரது சாதனையை பார்த்து வியந்தனர்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, 2010-ஆம் ஆண்டு சங்கம், மாற்றுத் திறனாளி இசைக் கலைஞர்களுக்காக PMF வருடாந்திர விருதை நிறுவியது. சங்கத்தின் சார்பில் முதல் PMF விருது Dr சந்திரசேகரனுக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு மியூஸிக் அகாதெமியில் நடைபெற்ற விழாவை வயலின் இசைக்கலைஞர் லால்குடி விஜயலெட்சுமி தொடங்கிவைத்தார். கோவிட் தொற்று காரணமாக இரண்டு ஆண்டு இடைவெளிக்குப்பிறகு இது ஏற்பாடு செய்யப்பட்டதால் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது. 2020-ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு களுக்கான PMF விருதுகள் அகாதெமியின் சங்கீத கலாநிதி விருதுடன், சிறந்த மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டது. அகாதெமி தலைவர் N முரளி சங்கீத கலாநிதி விருதுடன், மாற்றுத்




**இடமிருந்து:** PMF *விருதினை பெற்றோர் K ஸ்ரீவத்சா, J K பத்மநாபன், T சசிதர் மற்றும் நெற்குணம் S மணிகண்டன்.*

திறனாளி இசைக்கலைஞர்களுக்கும் விருது வழங்கி கௌரவித்ததன் மூலம் ஒரு கனவு நனவானது போல இருந்த்து என்றார் ஸ்ரீதர்.

இந்த நிகழ்ச்சியில் சங்கீத கலாநிதி விருதுபெற்ற வெற்றியாளர்கள் லால்குடி GJR கிருஷ்ணன் மற்றும் லால்குடி விஜயலெட்சுமி இருவரின் வயலின் இசை கச்சேரிக்கு PMF விருதுபெற்ற மாற்றுத்திறனாளியான ஈரோடு நாகராஜ் மிருதங்கம் வாசித்தது குறிப்பிடத்தக்கது. T K பத்மநாபனின் வயலின் இசைக்கு, T சசிதர் புல்லாங்குழல் வாசிக்க, K ஸ்ரீவத்சா மிருதங்கமும், நெற்குணம் S மணிகண்டன் மோர்சிங்கும் வாசித்தனர். பார்வையற்ற இவர்கள் அனைவரும் தங்களின் இசையால் பார்வையாளர்களை பிரமிக்க வைத்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் சங்கத்தின் PMF கமிட்டி சிறந்த இசைக் கலைஞர்களை அவர்கள் கர்நாடக இசைக்கலைஞர்களாக இருந்தாலும் சரி, ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்களாக இருந்தாலும் சரி அடையாளம் கண்டு அவர்களை முக்கிய இசைக்கலைஞர்களுடன் மேடையேற்றி வருகிறது. வோடாபோஃன், இந்தியா சிமெண்ட்ஸ் மற்றும் நிப்பான் பெயின்ட்ஸ் போன்ற கார்ப்பொரேட் நிறுவனங்கள் சங்கத்தின் வருடாந்திர நிகழ்வுகளுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றன. எங்களுடன் கணிசமான அளவு இசையில் ஈடுபாடு கொண்ட உறுப்பினர்கள் உள்ளனர். உதாரணமாக O S அருண் போன்றவர்கள் தங்களது இசை நிகழ்ச்சி மூலம் எங்களுக்கு நிதி திரட்டித் தருகிறார்கள் என்று தெரிவித்தார் ஸ்ரீதர்.■

# கொச்சியில் சிகிச்சை பெறும் இலங்கைக் குழந்தைகள்

## ரோட்டரி செய்திக் குழு



RC கொச்சின் வெஸ்ட், RID 3211 மற்றும் RC கொழும்பு வெஸ்ட், RID 3220, இலங்கை ஆகியோர் இணைந்து, பிறவி இதய நோயைக் கொண்ட 10 இலங்கைக் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சையை கொச்சி-யில் உள்ள அம்ரிதா மருத்துவ அறிவியல் கழகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் செய்தது. சென்ற ஆண்டு அக்டோபரில் DG ராஜ்மோகன் நாயர் இந்த மருத்துவமனையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கியபிறகு, அக்டோபர், நவம்பரில் இரண்டு தொகுதிகளாக இந்த அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன

இங்கு சிகிச்சை பெற்ற குழந்தைகள், 60 இலங்கைக் குழந்தைகளில் 10 பேர் ஆவர். 6 மாதங்களுக்குள் 60 குழந்தைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும் என்றார் உதவி ஆளுநர் அஜித் கோபிநாத். இத்திட்டம் இலங்கையில் குழந்தை அறுவைச் சிகிச்சை மற்றும் கரு மருத்துவத்தில் திறன் கட்டமைப்பையும் உறுதி செய்யும், அம்ரிதா கழகத்தில் 30 இலங்கைச் செவிலியருக்கு CHD நோயாளிகளைக் கையாளும் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.1.6 கோடி என்றார் கோபிநாத்.■

# அலிகரில் தொழில்முனைவோருக்கான கண்காட்சி

கிரண் ஜெஹரா

உத்தரப்பிரதேசத்தில் அலிகருக்கு அருகில் உள்ள சிறு நகரங்கள், கிராமங்களைச் சேர்ந்த தொழில்முனைவோரால் பல சிறுதொழில்கள் தொடங்கப் படவுள்ளன. RC அலிகார் ஐகான், RID 3110, அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் வணிகத் துறையுடன் இணைந்து நடத்திய ‘ஒரு படி முன்னேறுவோம்’ என்ற தொடக்க நிலை நிறுவனங்களுக்கான போட்டியில் இவர்கள் பங்கேற்றது தான். இந்தப் போட்டி, தேர்ந் தெடுக்கப்பட்ட 32 பேருக்குத் தொழில்முனைவு நுணுக்கங்கள், நிதி அறிவு, படைப்புணர்வு, இணைந்து உழைத்தல் மற்றும் வளர்ச்சி பற்றிப் பயிற்சி அளித்தது. பங்கேற்பாளர்களில் சிலர், ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப் பட்டு, AMU வணிகத் துறையில் பேராசிரியர் அசியா சௌத்ரி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 16 வார SURE (தொழில்முனைவின் வழியாக நகர்ப்புறப் புதுப்பித்தலைத் தூண்டுதல்) பயிலகத்தில் பங்கேற்றார்கள்.

பங்கேற்பாளர்கள் தங்கள் தொழில் யோசனைகள், தயாரிப்புகளை வழங்கியபின், நடுவர்களுடைய மதிப்பீட்டின் அடிப்படையில் 10 பேர் இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார்கள். தொடக்க நிலை நிறுவனங்களுக்கான ஒரு நிகழ்ச்சியில் தங்கள் யோசனைகளைக் காண்பிக்கவும், வங்கி அலுவலர்கள், தனிப்பட்ட வாடிக்கையாளர்களிடம் ஊடாடவும் இவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குத் தொழில்துறை வல்லுனர்கள், தொழில் வல்லுனர்கள், மற்றும் மக்களை ஈர்க்க ரோட்டரி வலைப்பின்னல் உதவியது. “திட்டத்தின் பலனைக் கண்டு” DG பவன் அகர்வால் ஈர்க்கப்பட்டார், “இதுபோன்ற திட்டங்கள் தொழில் முனைவுச் சூழமைப்பின் சிக்கல்களைப் புரிய வைப்பதன் மூலம், ஆர்வமுள்ள சிறு தொழில்கள் தங்கள் இலக்குகளை எட்டுவதற்கு உதவுகின்றன” என்றார்.

*DG பவன் அகர்வால் மற்றும் ராஜ் மெஹ்ரோத்ரா நிகழ்ச்சியில் ஒரு பங்கேற்பாளரின் காட்சிப் பொருள்களை பார்வையிடுகின்றனர்.*



தொடக்க நிலை நிறுவனங்களுக்கான போட்டியில் இரண்டு அம்சங்கள் இடம் பெற்றிருந்ததாக மாவட்ட CSR தலைவர் லாலேஷ் கூறினார். பொருட்களைக் காட்சிப் படுத்துவது மற்றும் யோசனைகளைப் பரிமாறிக் கொள்வது, மற்றும் ஒரு விடை பெறுதல் நிகழ்ச்சி. "இது ஒரு விளம்பர விழா என்பதால், பங்கேற்பாளர்கள் தங்கள் பொருட்களை விற்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அவர்கள் விரும்பினால், மாதிரிப் பொருட்களைக் கொடுக்கலாம்."

"ஆயிரக்கணக்கானோர் தொழில் முனைவோர் ஆக விரும்புகிறார்கள். ஆனால், மிகச் சிலர்தான் வெற்றி பெறுகிறார்கள். "ஒரு படி முன்னேறுவோம்' திட்டத்தில் பங்கேற்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. இந்தத் திட்டம் என்னைப் போன்றவர்கள் தொழில்முனைவை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள உதவியுள்ளது, என்னை என் கனவுக்கு இன்னும் அருகில் அழைத்துச் சென்றுள்ளது"

என்கிறார் இதில் பங்கேற்ற நஜ்ரீன் ஹசன். ரூ.5 லட்சத்துக்கான இவருடைய கடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க நிலை நிறுவனங்களுக்கான விழாவின் போது இவருடைய ஆடை ஒட்டுவேலைக் கலைக்குப் பல ஆர்டர்கள் கிடைத்தன. "ஆனால், மக்கள் என்னைக் 'கலைஞர்' என்று அழைத்தபோது எனக்குள் மகிழ்ச்சி நிரம்பியது. இதற்குமுன் யாரும் என்னை அப்படி அழைத்ததில்லை" என்று சிரிக்கிறார் இவர்.■

---

# டோம்பிவ்லி சங்கங்கள் நடத்திய 2 நாள் RYLA

ரோட்டரி செய்திக் குழு

மும்பையின் டோம்பிவ்லி பகுதியில் உள்ள 7 ரோட்டரி சங்கங்கள் சேர்ந்து, நகரில் இருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தாணே பத்லாபூர் பகுதியில் இயற்கை அழகு மிக்க ஒரு விடுதியில் 14 முதல் 30 வயதுள்ள இளைஞர்களுக்கு இரண்டு நாள் RYLAஐ நடத்தினார்கள். இந்தப் பகுதிச் சங்கங்கள் பகிர்ந்து கொள்கிற வாட்ஸாப் குழுவில் இதைப்பற்றி முதன்முதலாகப் பேசியவர், RC டோம்பிவ்லி ஈஸ்ட் தலைவர் விஜய் டும்ப்ரெ.

சான்று பெற்ற NLP பின்பற்றுபவர், வழிகாட்டியாகிய RC டோம்பிவ்லி ஈஸ்டைச் சேர்ந்த Rtn ஆஷிஷ் பத்லா CFL (இணையப் பாதுகாப்பு, நிதி அறிவு, தலைமைப் பண்புகள்) என்ற கருப்பொருளின்கீழ் இந்த RYLAஐ வடிவமைத்தார். தொடக்க நிகழ்ச்சியில் DG கைலாஷ் ஜெதானி ரோட்டரியின் இளைஞர் திட்டங்கள், தலைமைப் பண்புகளை வடிவமைப்பதில் RYLAன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பங்கேற்பாளர்களுக்கு விளக்கினார், டோம்பிவ்லி RYLAஐ இணைந்து நடத்தும் சங்கங்களைப் பாராட்டினார்.



RYLA *நிகழ்ச்சியில் ஒரு அமர்வு.*

நிதி அறிவு (Rtn ஜீவன் மகால்கர்), இணையப் பாதுகாப்பு (Rtn ஷிரிஷ் தேச்பாண்டெ, நெறிமுறைக் கொந்தர் அமர் தேஷ்பான்டெ), தலைமைப் பண்புகள் (Rtn சஞ்சய் குமார்) பற்றிய பல நிகழ்ச்சிகளும், Rtn பொபாடெ நடத்திய குழுக் கட்டமைப்புச் செயல்பாடுகளும் இதில் பங்கேற்ற 109 இளைஞர்களை ஈர்த்தன.

RYLA அரசர், அரசி, சிறந்த குழுவுக்கு விருதுகள் வழங்கப் பட்டன. பங்கேற்றோருக்கான போக்குவரத்தை RC டோம்பிவ்லி டௌன்-டவுன் தலைவர் ஆனி பிஜோய் ஏற்பாடு செய்தார்.

"அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன; மாவட்டம் முழுவதும் இந்த நிகழ்ச்சி பாராட்டப்பட்டது" என்றார் RC டோம்பிவ்லி மிட்-டவுன் தலைவர் அஜய் குல்கர்னி.■


# RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டியின் மருத்துவச் சேவை

ஜெய்ஸ்ரீ

கண்புரை மற்றும் ஓரக்கண் பார்வைக் கான அறுவைச்சிகிச்சைகள் மற்றும் அதிநவீன மருத்துவ கருவிகளை வழங்குவதை இந்த ஆண்டின் முக்கிய சேவைத்திட்டமாக கொண்டுள்ளது RID 3131-க்கு உட்பட்ட புனே ஸ்போர்ட்ஸ்சிட்டி ரோட்டரி சங்கம்.

சங்கம், கண்மருத்துவர் டாக்டர் ராஜேஷ்பவார் மற்றும் புனேயில் உள்ள ஹடாப்சரில் செயல்பட்டு வரும் சானே குருஜி ஆரோக்கிய கேந்திரத்தின் மருத்துவக் குழுவினர் மற்றும் சங்க உறுப்பினர்கள் உதவியுடன் மகாராஷ்டிரத்தில், சதாரா அருகே ரஹிமத்பூரில் கண் மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. முகாமில் மொத்தம் 500 பேர் பதிவு செய்திருந்தனர். 60 பேர் கண்புரை அறுவைச் சிகிச்சைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மூன்று பிரிவுகளாக அறுவைச்சிகிச்சை நடத்தப்பட்டது. புனே விஸ்டம் ரோட்டரி சங்கத்தின் மூலம், வல்கன் டெக்னாலஜிஸ் நிறுவனம், தன் CSR திட்டத்தின்கீழ் ஒவ்வொரு அறுவைச்சிகிச்சைக்கும் தேவையான ரூ.6,000 நிதியுதவியை வழங்கியது.

11 குழந்தைகளுக்கு ஓரக்கண் பார்வை குறைபாடு (மாறுகண்) இருப்பது கண்டறியப்பட்டது. அவர் களுக்கு சங்கத்தின் சார்பில் வரும் மே மாதம், பார்வை குறைபாட்டை சரி செய்யும் அறுவைச்சிகிச்சை நடத்தப்பட உள்ளது என்று சங்க உறுப்பினர் சந்தேஷ் சாவந்த் தெரிவித்தார். புனேயில் உள்ள மகேஷ் சஹாகரி வங்கி, நகரில்



*சஞ்சேட்டி மருத்துவமனையில் ரோபோ கையுறை அணிந்து ஒருவர் சிகிச்சை பெறுகிறார்.*



*RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி சங்கத்தினர் கேட்டராக்ட் சிகிச்சை பெற்றோருடன்.*

உள்ள தாராசந்த் மருத்துவமனையில் நடைபெறும் அறுவைச்சிகிச்சை களுக்கான செலவை ஏற்றுக் கொண்டுள்ளது.

எங்கள் சங்கம் இந்த சேவை திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தவும், தேவைப்படு பவர்களுக்கு கண்புரை நோய் மற்றும் மாறுகண் (பார்வைக் குறைபாடு) உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அறுவைச் சிகிச்சைகள் நடத்த முடிவு செய்துள்ளது. குறிப்பாக புனே நகரைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கு தேவையான நிதியை உறுப்பினர்கள் திரட்டுவார்கள் என்றார் அவர்.

மேலும், சங்கத்தின் உறுப்பினர்கள் முகாம் நடைபெறும் இடமான ரஹிமத்பூரில் உள்ள பஞ்சகுரோஷி சிக்ஷான் மண்டல் பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும், டிஜிட்டல் வகுப்பறை களுக்குத் தேவையான ஸ்மார்ட் டி.வி.க்களை வழங்கவுள்ளது.

**ரோபோ கையுறைகள்**

புனே நகரில் உள்ள சஞ்செட்டி எலும்பியல் மற்றும் மறுவாழ்வு மையத்துக்கு சங்கம் ஒரு ஜோடி ரோபோ கையுறைகள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் அல்டார சவுண்ட் தெரபி கருவிகளை வழங்கியுள்ளது. கை முடக்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், விரல்கள் மற்றும் கைகளில் நரம்பு மற்றும் தசைகளில் ஏற்பட்ட கோளாறு களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோபோ கையுறைகள் மூலம் தசைகள் மற்றும் நரம்புகளுக்கு வலுவேற்றி செயல்பட வைக்க முடியும். எலெக்டிரிக் உபகரணங்கள் மூலம் அல்ட்ராசவுண்ட் தெரபி சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயாளிகளுக்கு வலிநிவாரணம் அளித்து அவர்கள் அதிலிருந்து மீண்டுவர உதவ முடியும்.

**ஆராய்ச்சிக்கு ஆதரவு**

இந்த சங்கம் சமீபத்தில் புனேயில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு (IISER) தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் ஆராய்ச்சி கருவிகள் வாங்க ரூ.18 லட்சம் நிதியுதவி செய்துள்ளது. இந்த கருவிகள், SARS-CoV-2 மரபணு படியெடுத்தலுக்கு உதவும் என்று சாவந்த் விளக்கமளித்தார். இந்த நிறுவனத்திலுள்ள ஆராய்ச்சியாளர்கள் வைரஸ் எவ்வாறு பெருகுகிறது என்பதை ஆராய்ந்து சோதனைகள் நடத்தி அதன் வளர்ச்சியை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்வார்கள்.■

# மின் பழுதுபார்க்கும் சேவையில் இளைஞர்களுக்கு பயிற்சி

ரோட்டரி செய்திக் குழு




வேலையற்ற இளைஞர்களுக்கு நிலையான வருமானத்தை வழங்கும் நோக்கத்துடன் RC நாக்பூர், RID 3030, ICICI அறக்கட்டளையுடன் இணைந்து, மின் மற்றும் வீட்டு உபகரணங்கள் பழுதுபார்ப்பதற்கும் பயிற்சி அளிப்பதற்காக ரோட்டரி மையம் ஒன்றை அமைத்தது. அப்பயிற்சி 72 நாள் பாடநெறி மூலம் செயல்முறை அறிவை அவர்களுக்கு புகுத்தும்.

ரோட்டரி மையத்திற்காக 100 க்கும் மேற்பட்ட சங்க உறுப் பினர்கள் நன்கொடை அளித்தனர், இது பயிற்சித் திட்டத்திற்காக ICICI அகாடமி ஆஃப் ஸ்கில்ஸ், நாக்பூரில் இருந்து நிபுணத்துவம் பெறுகிறது. மேலும், ICICI அகாடமி தொழில் மையத்தில் திட்டத்தை முடித்த 100-க்கும் மேற்பட்ட பயனாளிகளை புகழ் பெற்ற நிறுவனங்களில் வேலையில் அமர்த்தியுள்ளது. 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இந்த திட்டத்திற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

ஏற்கனவே, ஒரு பெண் உட்பட 108 மாணவர்களை கொண்ட முதல் மூன்று குழ, மையத்தில் பயிற்சி வகுப்பை முடித்து – சிறந்த நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை மையங்களில் – IFB, Blue Star, Haier, Reliance Digital, Samsung and Tata Sky-யில் வேலை பெற்றுள்ளனர். “ICICI அறக்கட்டளையின் ஆதரவுடன் இந்த திறமை புகுத்தும் முயற்சியை மேற்கொள்வதில் நாங்கள் பெரு மிதம் கொள்கிறோம், ஏனெனில் இது பொருளாதார ரீதியாகக் கஷ்டப் படும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு ஒரு நிலையான வாழ்வாதாரத்தை வழங்கும்’’ என்று RC நாக்பூரின் தலைவர் நிலுஃபர் ராணா கூறினார்.■

# ரோட்டரி ஆளுநர்



**சஷாங்க் ரஸ்தோகி**
கல்வியாளர், RC பிலாய் கிரேட்டர், RID 3261

## மருத்துவ முகாம்களின் மூலம் பத்து லட்சம் பேருக்கு நன்மை

ரோட்டரியின் முதன்மைக் கொள்கையான “தனக்குமேல் சேவை” என்பது சஷாங்க் ரஸ்தோகியை ஈர்த்தது, 2001ல் இங்கு இணையச் செய்தது. இரண்டாம் தலைமுறை ரோட்டரியனான இவர், தன்னுடைய மறைந்த தந்தை Rtn Y P ரஸ்தோகி அவர்களால் ஊக்கம் பெற்றார். “இன்டராக்டராகவும் ரோட்டராக்டராகவும் இருந்தபின் ரோட்டரியில் இணைந்தது எனக்கு ஒரு நல்ல அடித்தளத்தை வழங்கியது” என்கிறார் இவர்.

இவர் DGஆகப் பணியாற்றிய ஆண்டில், சத்திஸ்கர்க் மாநிலத்தில் உள்ள துர்க்-இல் இருக்கும் அரசு மருத்துவ மனையில் ஓர் ICU வசதி (GG: 30,000) அமைக்கப்பட்டது. “CSR நல்கைகள், மாவட்ட நிதி, உறுப்பினர் பங்களிப்பின் மூலம் இதுவரை 50 மகிழ்ச்சிப் பள்ளிகள் உருவாக்கப் பட்டுள்ளன” என்கிறார் ரஸ்தோகி. 12 சிறப்பு முகாம்களில், ரூ.2.25 கோடி செலவில், கை, கால் நீக்கப்பட்ட 1,500 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்பட்டன. மத்தியப் பிரதேசத்தில் உள்ள நரசிங்பூரில் நடைபெற்ற நான்கு நாள் மருத்துவ முகாமில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு $100,000. இவர் 150 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இயலும் என்று நம்புகிறார். 5 புதிய சங்கங்கள் சேர்க்கப்பட்டு மொத்த எண்ணிக்கை 92ஆக மாறும். “PRIP சேகர் மேத்தா, PRIDகள் கமல் சங்வி, பரத் பான்ட்யா, இயக்குநர்கள் வெங்கடேஷ், மகேஷ் கோட்பாகி ஆகியோரின் தலைமை எனக்கு ஊக்கம் அளிக்கிறது. என்று தொடர்ந்து கூறுகிறார் இவர். இவருடைய தாய் இன்னர் வீல் உறுப்பினராகச் சேவையாற்றியவர்.■



**தினேஷ் குமார் சர்மா**
அச்சுத்துறை, RC புலந்த்ஷஹர், RID 3100

## இலங்கையுடன் ரோட்டரி நட்புப் பரிமாற்றம்

2008ல், “ரோட்டரியால் ஈர்க்கப்பட்டு, ஏழைகள் மற்றும் நலிந்தோருக்கு உதவ விரும்பி நான் இங்கு சேர்ந்தேன். இப்போது, ஆளுநர் என்றமுறையில் நான் புரட்சிகரமான முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளேன்” என்கிறார் தினேஷ் சர்மா. இவர் 60 ரோட்டரியன்களை இலங்கைக்கு ஆறு நாள் பயணத்துக்கு வழிநடத்தினார், கொழும்பில் DG புபுடு டெ ஜோய்சா, RID 3220 அவர்களுடன் ரோட்டரி நட்புப் பரிமாற்றத்துக்கான MoU ஒன்றில் கையொப்பமிட்டார். “நாங்கள் கொழும்பு, கண்டி மற்றும் நுவாரா எலியா பகுதிகளைச் சுற்றிப்பார்த்தது எங்களுக்கு மிகச் சிறந்த அனுபவமாக இருந்தது” என்று நினைவுகூர்கிறார் இவர்.

RID 3100ல் முதன்முறையாக, $25,000க்கு ஒரு நன்கொடை நிறுவல் நிதியை இவர் உருவாக்கினார், இதன் வட்டி சேவைத் திட்டங்களுக்கான DDFஆகத் திருப்பிவிடப்படும். “முதன்முறையாக, எங்களிடையில் ஐந்து மிகப் பெரிய நன்கொடையாளர்கள் உள்ளார்கள். இந்த மாவட்டத்தில் அனைவருக்கும் இது ஒரு பெருமையான கணம்.” இதுவரை இவர் 175 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார், ஜூன் மாத நிறைவுக்குள் மேலும் 75 ரோட்டரியன்களைச் சேர்க்க இயலும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 2,600க்கு மேல் கொண்டு செல்ல இயலும் என்று நம்புகிறார். ■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**S ராஜ்மோகன் நாயர்**
காப்பீட்டுத்துறை, RC கொச்சின் சென்ட்ரல், RID 3201

## 500 ஏழை குடும்பங்களுக்கு 500 வீடுகள்

வானவில் என்ற, அனைத்தையும் உள்ளடக்குகின்ற மாவட்டக் கருப்பொருளைக் கொண்டு ராஜ்மோகன் நாயர் VIBGYOR என்பதன்கீழ் தன்னுடைய மிகப் பெரிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்: கல்வி, பொறுப்புள்ள சமூகங்களைக் கட்டமைத்தல், பசுமைத் திட்டங்கள், இளைஞர்களுடன் உரையாடுதல், முதியவர்களுடன் உரையாடுதல், மறுவாழ்வுக்கும் மறு கட்டமைப்புக்கும் உதவுதல். ரோட்டரி பர்பீடம் என்ற திட்டம் வீடில்லாத, 500 குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டுகிறது, மாணவிகளுக்கு பயணத்தை எளிதாக்க 1,000 மிதிவண்டிகள் கொடையளிக்கப்பட்டன.

ஒவ்வொரு சங்கமும் 1.5 முதல் 2 கிலோமீட்டர் சாலை ஒன்றைத் தத்தெடுத்துள்ளது. “RC கோயம்பத்தூர் மிட்-டவுன் கடந்த 20 ஆண்டுகளில் 25,000க்கும் மேற்பட்ட செயற்கைக் கை, கால்களை வழங்கியுள்ளது. இந்தச் சேவைத் திட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு $125,000க்கான GG விண்ணப்பம் ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது” என்கிறார் நாயர். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $2 மில்லியன்.

1996 முதல் ரோட்டரியனாகச் சேவை யாற்றி வரும் நாயர், “PRIP சேகர் மேத்தா, அறங்காவலர் பரத் பாண்ட்யா, PRID கமல் சங்வி, RIDகள் வெங்கடேஷ், மகேஷ் கோட்பாகி போன்ற ரோட்டரி தலைவர்கள் எல்லாரும் என் சிந்தனைச் செயல்முறையை மேம்படுத்தியுள்ளார்கள், சமூகத்தின் மேம்பாட்டுக்காக மேலும் பாடுபட என்னை ஊக்குவித்துள்ளார்கள்” என்கிறார்.■

**ஜெயகௌரி ஹடிகல்**
குழந்தைகள் மருத்துவர், RC மணிப்பால், RID 3182

## “ரோட்டரியனாக இருப்பது ஒரு மிகச் சிறந்த அனுபவம்”

Dr ஜெயகௌரி ஹடிகல். குழந்தை மருத்துவராதலால் தாய், சேய் நலத்திட்டங்களை மிகவும் விரும்புகிறார். “4 வருவாய் மாவட்டங்களில் அமைந்துள்ள எங்கள் சங்கங்கள் குழந்தைகளுடைய கற்றல் குறைபாடுகளைப்பற்றிய விழிப்புணர்வு முகாம்கள், கருத்தரங்குகளை ஆண்டுமுழுவதும் நடத்தும்.” கிராமப்புறங்களில் வார, மாத மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன, இவை கிராமத்து மக்களுக்கு நன்கு உதவுகின்றன.

கர்நாடகத்தின் ஹாசன் மாவட்டத்தில் ரூ.40 லட்சம் பன்னாட்டு நல்கை ஒன்றின் நிதியுடன் மனிதத் தாய்ப்பால் வங்கி ஒன்று அமைக்கப்படும். “நாங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள பெண்களுக்கு 400 தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளோம், ஜூன் 30க்குள் மேலும் 150 இயந்திரங்கள் வழங்கப்படும்.” இந்த ரோட்டரி ஆண்டு நிறைவுக்குள் TRFக்கு $200,000 திரட்ட இயலும் என்று இவர் நம்புகிறார்.

88 சங்கங்களில் 3,700 ரோட்டரியன்களை வழிநடத்தும் இவர், “நிகர உறுப்பினர் வளர்ச்சிக்கு 10% இலக்கு அமைத்துள்ளேன். இந்த ஆண்டு நாங்கள் ஒரு புதிய சங்கத்தைத் தொடங்குவோம்.” இவர் 2002லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றி வருகிறார்.■

Rotary PEOPLE OF ACTION

# வெளிநாட்டினரை கவர்ந்த ரைடு ஃபார் ரோட்டரி பேரணி

V முத்துகுமரன்

பதினாறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு ரோட்டேரியன்கள் சென்னை அருகே உள்ள மகாபலிபுரம் பல்லவர்கால கடற்கரை ஓய்வுவிடுதியிலிருந்து கர்நாடக மாநிலம் மங்களூருக்கு நீலகிரி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை வழியாக 11 நாள் மோட்டார் பேரணி நடத்தினர். இந்திய ரோட்டரி சங்கங்கள் பற்றி அவர்கள் அறிந்திருந்ததால், வழியிலேயே அவர்களின் விருந்தோம்பலில் இந்திய கலாசார மரபுகள், பாரம்பரிய உணவுகள் பற்றி தெரிந்துகொண்டனர்.

ரைடு ஃபார் ரோட்டரி என்பது RID 3181-ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட TRF-க்கான மதிப்பு மிக்க நிதிதிரட்டும் நிகழ்ச்சி மட்டுமல்ல, வெளிநாட்டு ரோட்டேரியன்களை இந்திய ரோட்டரி சங்கத்தினருடன் தொடர்பு படுத்தும் நட்புறவை வளர்க்கும் பேரணியாகும். வெளிநாட்டினரை அந்தந்த பகுதியில் உள்ள ரோட்டரியினர் வரவேற்று தங்கவைத்து உபசரித்தனர் என்றார் RID 3203-க்கு உட்பட்ட உதக மண்டலம் ரோட்டரி சங்கத் தலைவர் கமலேஷ் கட்டாரியா. ஊட்டியில் நடைபெற்ற நட்புறவு சந்திப்பில் பேரணியில் பங்கேற்ற 5 பேர் தங்கள் சங்கங்களின் செயல்பாடுகளை விளக்கினார்கள். மற்றொருவர் தாங்கள் வரும் வழியில் கண்டு ரசித்த இயற்கை காட்சிகளை வர்ணித்துப் பேசினார் என்றார் அவர்.

கட்டாரியா அவர்களிடம் பேசும் போது தமது 51 வயதான சங்கத்தின் சேவைத் திட்டங்கள் பற்றி நீலகிரியில் முதன் முதலாக மேற் கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். விருந்தினர்கள் ரோட்டரி மாவட்டம் 3181-ல் ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் 10 பேர் வீதம் 20 ரோட்டேரியன்களுடன் கலந்துரையாடினர். TRF-ஐ மேம் படுத்துவதே எங்கள் குறிக்கோள் என்ற போதிலும், வெளிநாட்டினர் எங்களுடன் ஆழமான நட்புறவு கொள்ள இந்த மேடை உதவியது என்றார் அவர்.

கடந்த ஜனவரி 15ஆம் தேதி மகாபலிபுரத்தில் மோட்டார் பேரணியை DGs J K N பழனி (RID 3231), பிரகாஷ் கரந்த் (RID 3181) ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைக்க, திருக்கழுகுன்றம் நகர ஈகிள் ரோட்டரி சங்கத்தினர் உற்சாகமாக அவர்களை வழியனுப்பி வைத்தனர். அடுத்த 10 நாட்களுக்கு அவர்களை புதுச்சேரி, தஞ்சாவூர், மதுரை, திருப்பூர், கோயம்புத்தூர், ஊட்டி, மைசூரு மற்றும் மடிக்கேரி ரோட்டரி சங்கத்தினர் தங்கள் எல்லையில் அவர்களை வரவேற்று உபசரித்தனர். மோட்டார் பேரணியினர் ஜனவரி 25 மங்களூரைச் சென்றடைந்தனர்




RID 3181 DG *பிரகாஷ் கரந்த் (இடது)*, RID 3231 DG J K N *பழனி (வலது)*, RC *ஈகில் டவுன் திருகழுக்குன்றம் தலைவர்* T *பாலசுந்தரம், திட்டத்தலைவர் கிருஷ்ண நாராயண முல்லியா மற்றும்* Rtn *சுந்தர்ராஜ் ஃப்ரான்ஸ் நாட்டு பங்கேற்பாளர்களுடன்.*



என்று விளக்கினார் ரைடு ஃபார் ரோட்டரியின் துணைத் தலைவரும் மைசூரு ஐவரி சிட்டி ரோட்டரி சங்க பட்டயத் தலைவருமான R முத்துக்குமரன். இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியிலிருந்து மேற்கு கடற்கரை பகுதி வரையிலான 1,380 கி.மீ. தொலைவு மோட்டார் பயணம் தமிழகத்தின் மரபு, கலாசாரங்கள், பாரம்பரியங்கள், உணவு வகைகள், வரலாற்று சிறப்புகள், மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றிய செழுமையான பார்வையை அவர்களுக்கு வழங்கியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தஞ்சாவூரில் PDG C குணசேகரன் அவர்களை வரவேற்றார். அங்கு அவர்கள் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரகதீஸ்வரர் ஆலயத்தை பார்வையிட்டனர். மதுரையில் 20 ரோட்டரி சங்கங்கள் இணைந்து வெளிநாட்டு விருந்தினர்களுக்கு நாட்டுப்புற கலைகள், இசை, நடனம் என பாரம்பரிய கலைகளுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**மண்ணை காப்போம், தண்ணீரை சேமிப்போம்**

ஒவ்வொரு ஆண்டும் பேரணியின் கருபொருளில் மாற்றம் இருக்கும். இந்த ஏழாவது ஆண்டு பேரணியில் RID 3181 இயற்கையை பாதுகாக்கும் நோக்கில் மண்ணை காப்போம், தண்ணீரை சேமிப்போம் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், போலந்து, டென்மார்க், ஆஸ்திரியா, நார்வே மற்றும் ரோமானியாவைச் சேர்ந்த 42 பேரும் பேரணி கட்டணமாக தலா ரூ.2.5 லட்சம் செலுத்த வேண்டியிருந்தது. இதில் ஒரு பகுதி பயணம் மற்றும் தங்குவதற்காக செலவிடப்படும். மீதி தொகை TRF கணக்கில் நன்கொடையாக சேர்க்கப்படும்.

RID 2275-க்கு உட்பட்ட நார்வேயின் ஹிம்டால் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த டோர்ப்ஜோர்ன் விக் மூன்றாவது முறையாக இதில் பங்கேற்றுள்ளார். RID 1980-க்கு உட்பட்ட சுவிட்சர்லாந்தின் வெட்டிங்கன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் ராஜ் படோலி, எங்கள் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் இந்த தனித்துவமான பேரணியில் பங்கேற்றனர். நான் மூன்றாவது முறையாக இதில் பங்கேற்கிறேன். மோட்டார் பேரணிக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று பெருமையுடன் குறிப்பிட்டார். மங்களூரில் நடைபெற்ற நிறைவுநாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆளுநர் கரந்த் தலைமை வகித்தார். அப்போது வெளிநாட்டு ரோட்டேரியன்கள் கௌரவிக்கப்பட்டனர்.■



*RC உதகமண்டலம் தலைவர் கமலேஷ் கடாரியா (வலது) மற்றும் சங்கத்தினர் பேரணி பங்கேற்பாளர்களுடன்.*

# ஜெய்ப்பூரில் சிறுநீரகப் பராமரிப்பு மையம்

ரோட்டரி செய்திக் குழு




**இடமிருந்து:** *சங்கத்தலைவர் சுனீல் தத்கோயல், தேவேஷ் பன்சல், PDG S V S ராவ் (RID 3120), PDG ரமேஷ் அகர்வால் மற்றும் மனோஜ் பன்சல் ஜெய்ப்பூர் சிறுநீரக அறிவியல் மையத்தில்.*

RC ஜெய்ப்பூர் ரவுண்ட் டவுன், RID 3054, RC ராஜ்தானி, RID 3292, நேபாளம் இணைந்து, 288,000 டாலர் (ரூ.21.6 மில்லியன்) மதிப்புள்ள GG வழியாக ஜெய்ப்பூர் ராஜஸ்தான் மருத்துவமனையில் சிறுநீரக அறிவியல் மையத்தை அமைத்தார்கள். இங்கு, நலிந்த நோயாளிகளுக்குக் குறைந்த செலவில் டயாலிசிஸ், அதனுடன் தொடர்புடைய ரெடினோபதி மற்றும் நியூரோபதிக்கான சிகிச்சை போன்ற சேவைகள் வழங்கப்படும். இதன் மூலம் ஏற்கெனவே 5,500க்கும் மேற்பட்ட நோயாளிகள் பயன் பெற்றுள்ளதாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் PDG ரமேஷ் அகர்வால் சொன்னார்.

இந்தப் புதிய வளாகம் டயாலிசிஸில் தொடங்கிச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை வரையிலான முழுமையான பராமரிப்புச் சேவைகளையும், கண்புரை, லாபராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சைகளையும் பிற இணைந்த சிகிச்சைகளையும் தனியார் மருத்துவ மனைகளை விடக் குறைந்த செலவில் வழங்கும். 100க்கும் மேற்பட்ட துணை மருத்துவ ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் இங்கு வேலை வாய்ப்புகளும் உருவாக்கப் பட்டுள்ளன. ■


## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# சண்டிகரில் ஒரு சிறப்பு RYLA

கிரண் ஜெஹரா



RC சண்டிகர் மிட்டவுண் உறுப்பினர்களுடன் RYLA பங்கேற்பாளர்கள்.

உடலாலும் மனதாலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் தேவை. பயிற்சி இல்லாமல் அவர்களால் தியானம், கலை, நடனம், விளையாட்டு போன்ற பயிலரங்குகளில் பங்கேற்க முடியாது. அவர்கள் உற்சாகமாக இருப்பார்கள். ஆனால், அவர்களை இவற்றில் ஈடுபடுத்த வேண்டுமானால் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை தயார்படுத்த வேண்டும் என்கிறார் சண்டிகரில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களின் மறுவாழ்வுக்கான அமைப்பின் (SOREM-Society for Rehabilitation of Mentally Challenged) தலைவர் சங்கீதா ஜெயின். எனவே RID 3080-க்கு உட்பட்ட RC சண்டிகர் மிட்டவுன், மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தினத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறப்பு RYLA-வை 'விசேஷ்' என்ற பெயரில் நடத்த முன்வந்தபோது குழந்தைகளை வேடிக்கைகள் நிறைந்த நாள்களில் பங்கேற்கும் வகையில் அவர்களை தயார்பாடுத்த நாங்கள் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்திருக்கிறோம் என்று அந்த அமைப்பினர் உறுதியுடன் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு 15 முதல் 35 வயதுக்குப்பட்ட பிரதிநிதிகள் நிகழ்ச்சியில் பங்கேற்க பதிவு செய்து கொண்டனர். இவை SOREM நிறுவனத்திலேயே நடைபெற்றது. பார்வைக்குறைபாடு, காது கேளாதோர், திக்குவாய் பிரச்னை உள்ளவர்கள், மனநலம் குன்றியவர்கள் மற்றும் உடல் ரீதியான சவால்கள் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் உற்சாகமாக இணைத்துக் கொண்டதால் அந்த இடமே கலகலப்பானதாகவும் வேடிக்கை நிறைந்ததாகவும் இருந்தது என்றார் சங்கத்தின் தலைவர் சஞ்சய் கல்ரா.

இந்த குழந்தைகளுக்கு சரியான நபர்கள் மூலம் ஆதரவு அளித்தால் அவர்களாலும் சாதிக்க முடியும் என்றார் கல்ரா. அனைத்து குழந்தைகளுக்கும் RYLA சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பங்கேற்பாளர்கள் அனைவரும் ரசித்த ஒரு நிகழ்ச்சி நடனப் பயிலரங்கு. இந்த குழந்தைகள் எந்த தடையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் நடனமாடியது நெஞ்சை நெகிழவைத்தது என்று சங்கத்தின் தலைவர் கூறினார். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இந்த நிகழ்வை ஜீ தொலைக்காட்சி அலைவரிசை தலைவரும் ஆசிரியருமான தீபக் திமன் தொடங்கிவைத்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கும் சஹ்யோக் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை நினைவு கூரும் வகையில் வித்தியாசமான முறையில் ரோட்டரி நடைபயணத்திற்கும் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.■



# பாதுகாப்பான குடிநீருக்கு ஒரு தீர்வு

ப்ரீதி மேஹரா

*மாஜி ரியாக்டர் தொழில்நுட்பம், CSR முன்முயற்சிகள் மூலம் கிராமப்புற மக்களுக்கு நீரினால் பரவும் நோய்களை முற்றிலும் ஒழிப்பதற்கான வாக்குறுதியைக் கொண்டுள்ளது.*

நீங்கள் அதை யுரேகா தருணம் என்றுகூட சொல்லலாம். மரைன் என்ஜினீயர் அஞ்சன் முகர்ஜி, "நேச்சர்" இதழில் வெளியான கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தார். அதில், இறால் (அல்பிடே) தனது சக்தி முழுவதையும் திரட்டி இரையைத் தேடும் தொழில்நுட்பத்தை பயன் படுத்துகிறது. அதேபோன்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நுண்ணுயிரிகளிலிருந்து தண்ணீரை பிரித்து சுத்திகரிக்கலாம். அந்த நேரத்தில் ஈர்க்கப்பட்ட எண்ணங்கள் மூலம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உலகில் தண்ணீரினால் பரவும் நோய்களிலிருந்து விடுபடலாம் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

2001-ஆம் ஆண்டு முகர்ஜி, வர்த்தக கடற்படையில் இருந்தபோது, காலியான கப்பலில் சரக்குகளை ஏற்றும் வரையில் அதை நிலை நிறுத்துவதற்காக தொட்டிகளில் எடுத்துச் செல்லப்பட்ட தண்ணீரை சுத்திகரிப்பதற்கான ஒரு தீர்வை யோசித்தார். சரக்குகள் ஏற்றப்படு வதற்கு முன்னர் தொட்டிகளில் இருந்த தண்ணீர் காலிசெய்யப் பட்டது. சுத்திகரிக்கப்படாத தண்ணீர் கடலில் கலந்தது. இது சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும்.

அந்த கட்டுரையை படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தபோது, வெளியேறும் தண்ணீரை பார்க்கச் சென்ற மூத்த விஞ்ஞானி ஒருவரின் அலுவலகத்தில் காத்திருந்தேன். அப்போது இரை தேடும் இறால்களின் அதாவது, உயிரினையாக்கம்



(பயோமிமிக்ரி) தொழில்நுட்பம் எனது நினைவுக்கு வந்தது. அந்த விஞ்ஞானி என்னை சரியான நபர்களுடன் சேர்ந்து பணியாற்றி தீர்வுகாண உதவினார் என்று முகர்ஜி நினைவுகூர்ந்தார்.

2016-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் பயணம் செய்த முகர்ஜி, தற்செயலாக இந்தியாவில் வயிற்றுப்போக்கினால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு சென்றார். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் சுகாதாரம் இல்லாமல், பாதுகாப்பற்ற குடிநீரை பயன்படுத்துவதால் வயிற்றுப்போக்கு நோயினால் இறக்கின்றனர் என்கிற உண்மையை தெரிந்து கொண்டார். மேலும் அசுத்தமான குடிநீரினால் வயிற்றுப்போக்கு நோய் மட்டுமல்ல, காலரா, டைஃபாய்டு போன்ற நோய்களும் பரவுகின்றன என்பதையும் புரிந்து கொண்டார். மேலும் ஆராய்ச்சி செய்ததில் 6,50,000 கிராமங்களில் 85 சதவீத தண்ணீர் ஆழ்துளை கிணறுகளிலிருந்து குழாய்கள் மற்றும் கைப்பம்புகள் மூலம் எடுக்கப்படுகின்றன. இவை நிலத்தடி நீர் அல்லது நீர்நிலைகளிலிருந்து எடுக்கப்படுகின்றன. இவை மாசுபடிந்ததாகவும், நோய்களை உண்டாக்கும் கிருமிகள் கலந்ததாகவும் இருக்கின்றன. மக்கள் அதிகம் பயன்படுத்தும் கைப்பம்புகளிலிருந்து கிடைக்கும் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. மேலும் இந்தியாவில் 11 மில்லியன் கைப்பம்புகள் இருந்தால், அவற்றில் 8 மில்லியன் கைப்பம்புகளே சரிவர வேலை செய்கின்றன.

இந்தியாவில் பொதுவாக பயன்படுத்தப்படும் கைப்பம்பு எதுவென்றால் மார்க்-II மாடலாகும். இறால் இரைதேடும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் முகர்ஜி 2017-ஆம் ஆண்டு ஒரு கருவியை கண்டுபிடித்தார். இந்த கருவியை யார் வேண்டுமானாலும் 30 நிமிடங்களுக்குள் கைப்பம்பில் பொருத்திவிடலாம். இதற்கு தனி திறமை ஏதும் தேவையில்லை. அவர், தமது கண்டுபிடிப்பான மாஜி-உலைக்கு காப்புரிமை பெற்றார். இந்த உலை விரைவில் ஆப்பிரிக்காவில் அறிமுகப்படுத்தப்படும்.



கண்டுபிடிப்பு எவ்வாறு செயல்படுகிறது என்று முகர்ஜி விளக்குகிறார். இறால் இரை தேடும்போது தண்ணீரை மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் கிழிக்கிறது. இதனால் குறைந்த அழுத்தம் ஏற்பட்டு நீர்க்குமிழிகள் உண்டாகின்றன. பின்னர் நீர்க்குமிழிகள் சரிந்ததும், ராக்கெட் அல்லது ஜெட் எஞ்சின் வேகத்தில் ஒலி எழுகிறது. ஒரு விநாடியின் சிறிய பகுதிக்குள் நீர்க்குமிழியின் வெப்பநிலை 4,426 டிகிரி சென்டிரகிரேடு அல்லது 8,000 டிகிரி பாரன்ஹீட்டாக அதிகரிக்கிறது. அதன் மூலம் இரையை அழிக்கிறது. இதனால் ஏற்படும் ஓலியில், ஒரு விநாடியில் பில்லியனில் ஒரு பங்கு ஒளியை உருவாக்குகிறது.

இறால் இரைதேடும் தொழில் நுட்பத்தை போலவே மாஜி ரியாக்டர் கருவியும் திரவத்தின் இயக்க ஆற்றலை மில்லியன் கணக்கான சிறு குமிழிகளாக மாற்றுகிறது. ஒவ்வொன்றும் உள்ளுக்குள் கிரியா ஊக்கிகளாக செயல்படுகிறது. இந்த குமிழிகள் வெடித்துச் சிதறும்போது பெருமளவு சக்தி வெளியாகிறது. இவை அதிர்வலைகளாக மாறி நுண்ணுயிரிகளை அழிக்கிறது. இதன் மூலம் முன்பைவிட 99 சதவீதம் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறது. தற்செயலாக இந்த சாதனம், கை பம்பில் கையை வைத்து இயக்கும்போது, தண்ணீர் எடுக்கும்போது எதிர்வினையாற்றுகிறது.

முகர்ஜி, தமது கண்டுபிடிப்புடன் சந்தையில் நுழைவதற்காக Taraltec Solutions என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். இது செயல்பாட்டுக்கு வந்தால் நல்ல பலனை கொடுக்கும் என்கிறார்.

மாஜி ரியாக்டர் முகர்ஜிக்கு பெரிய வரவேற்பை கொடுத்துள்ளது. இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை மற்றும் லாக்ஹீட் மார்டின் மற்றும் டாடா அறக்கட்டளைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சித் திட்ட விருது (2017) உள்ளிட்ட பல விருதுகளை அவர் வென்றுள்ளார். 2019-ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான விருது, 2020-இல் மகாராஷ்டிரத்தின் நிலைத்தன்மைக்கான விருது, அதே



Taraltec *நிறுவனர் அஞ்சன் முக்கர்ஜி மாஜி ரியாக்டர் பற்றி இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இஸ்ரைல் பிரதமர் பெஞ்சமின் நேடன்யாஹு அவர்களிடம் விளக்குகிறார்.*

ஆண்டில் நீர் மற்றும் நீர் தொடர்பான பணிகளுக்காக தேசிய அளவிலான தொடக்க நிலை விருது ஆகிவற்றை வென்றுள்ளார்.

2021-ஆம் ஆண்டில் ஜெர்மனியின் நியூரம்பர்கில் உள்ள டச்சஸ் அருங்காட்சியகத்தில் எதிர்காலத்திற்கான புதிய கண்டுபிடிப்புகள் வரிசையில் மாஜி ரியாக்டர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தனை அங்கீகாரம் இருந்த போதிலும், முகர்ஜியின் எண்ணமெல்லாம், தமது கண்டுபிடிப்பு மனித குலத்துக்கு அதிக அளவில் பயன்பட வேண்டும் என்பதுதான். கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் மாஜி ரியாக்டர்களை வழங்க, கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட வழியை பயன்படுத்தும் நிறுவனங்களை அவர் தேடி வருகிறார். ரிலையன்ஸ், கோத்ரெஜ், ஜூபிளியன்ட், லுபின் மற்றும் டாடா அறக் கட்டளைகள், வாட்டர் எய்டு மற்றும் நாளந்தா பவுண்டேஷன் போன்ற அமைப்புகள் தங்களது CSR நடவடிக்கைகள் மூலம் Taraltec நிறுவனத்தின் மாஜி ரியாக்டர்களை வழங்க தேர்வுசெய்யப்பட்டுள்ளன. தற்போது மகாராஷ்டிரம், பிகார், ஒடிஸா, உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்கத்தில் பாதுகாப்பான குடிநீர் பாக்கெட்டுகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்திலான நிதிப் பங்களிப்பு மூலம் நாங்கள் 10 லட்சம் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று கூறும் முகர்ஜி, தமது கண்டுபிடிப்பு கருவியை பாதுகாப்பான குடிநீர் கிடைக்காத ஒவ்வொரு கிராமத்திலும் நிறுவுவதற்கு அதை முன்னெடுத்துச் செல்வதற்கான நிறுவனங்களை தேடிவருவதாக குறிப்பிட்டார்.

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், மத்திய நிதி ஆணையத்தின் மானியங்களை இதற்காக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அனைத்து மாநிலங்களுக்கும் கடிதம் எழுதியுள்ளது. சோதனையின் போது நல்ல பலனை கொடுத்த இந்த கருவிகளை நாடு முழுவதும், உலகம் முழுவதும் உள்ள மக்கள் பயன்படுத்துவதன் மூலம் நீர் மூலம் ஏற்படும் நோய்களை முற்றிலும் ஒழிக்க முடியும் என்று முகர்ஜி நம்புகிறார்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## திண்டுக்கல் மருத்துவமனைக்கு டயாலிசிஸ் இயந்திரங்கள்



DGE *ஆனந்த ஜோதி மற்றும் சங்கத்தினர் டயாலிசிஸ் கருவி வழங்கும் நிகழ்ச்சியில்.*

RC சாய்டமா ஷின்டோஷின், RID 2770 (ஜப்பான்), TRF உடன் இணைந்து RC திண்டுக்கல், RID 3000, ஒட்டன்சத்திரத்தில் இருக்கும் கிறிஸ்துவத் தோழமை மருத்துவமனைக்கு 10 டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்கியது. DGE அனந்த ஜோதி இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.■

## பைல்ஹோங்கலில் ரோட்டரி கூடம்



PDG *கௌரீஷ் தோண்ட்,* DG *வெங்கடேஷ் தேஷ்பாண்டே மற்றும் சங்கத்தினர் புதிதாக கட்டிய ரோட்டரி ஹால் முன்.*

RC பைல்ஹோங்கல், RID 3170, 2,500 sqft நிலப்பரப்பில் ரோட்டரி கூடத்தை ரூ.90 லட்சம் செலவில் நிறுவியுள்ளது. இங்கு பல சேவைத் திட்டங்களை இச்சங்கம் செய்ய உள்ளது.■

## சூரத்தில் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துதல்



DGE *ஸ்ரீகாந்த் இந்தானி மற்றும் சங்கத்தினர் சிலை திறப்பு விழாவில்.*

RC சூரத் ஈஸ்ட், RID 3060, சூரத்தில் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துவதற்கு, RC எமோரி டுருய்ட் ஹில்ஸ், RID 6900, அட்லான்டா, USA உடன் இணைந்து, சூரத்தின் முக்கியமான போக்குவரத்துச் சந்திப்பு ஒன்றில் INR 8,57,000 செலவில் சர்தார் வல்லபாய் படேல் அவர்களுடைய சிலையை நிறுவியது. இந்தச் சிலையை PDG ஸ்ரீகாந்த் இந்தானி திறந்துவைத்தார்.■

## நீரைச் சேமிக்க ஒரு நினைவூட்டல்

உலகக் காட்டு உயிர் நாளைக் கொண்டாடுவதற்கு, ரோட்டரி நீர்த் திட்டம் (தண்ணீரைச் சேமிக்க RID 3232ன் முன்னெடுப்பு), பிரக்ருதி ஈகோ கேர் சொல்யூஷன்ஸ் வீணான உலோகங்களிலிருந்து மட்டும் உருவாக்கப்பட்ட, 'கற்பக மரம்' என்ற 10 அடி உயரமுள்ள சிலையைச் சென்னை ஸ்பென்சர் ப்ளாசா வளாகத்தில் திறந்து வைத்தார்கள். இந்தச் சிலை, வருங்காலத்தில் வறட்சிகளும் பஞ்சங்களும் வராமல் தடுப்பதற்கு நீரைக் கவனத்துடனும் மதிப்புடனும் பயன் படுத்தவேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.■



*சென்னை ஸ்பென்சர் ப்ளாசாவில் உள்ள கற்பக மரம்.*





# நௌஷாத் - பாலிவுட் இசையின் கோஹினூர்

**S R மது**

1946-ல், இசை மேஸ்ட்ரோ நௌஷாத் மற்றும் பழம்பெரும் பாடகர் K L சைகல் ஆகியோர் முதன்முறையாக ஷா ஜெஹான் திரைப்படத்தில் இணைந்தனர். சைகலுக்கு வழக்கமாக ஒரு பாடலைப் பதிவு செய்வதற்கு முன்பு அவருக்குப் பிடித்தமான பிளாக் லேபிள் பானம் தேவைப்பட்டது. ஜப் தில் ஹி டூட் கயா பாடலின் இரண்டு பதிப்புகளைப் அவர் குடிப்பதற்கு முன்பும் பின்பும் பதிவு செய்ய நௌஷாத் அவரை வற்புறுத்தினார்.

நௌஷாத் சைகலை அந்த பதிப்புகளைக் கேட்டு அதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார். குழப்பமடைந்த சைகல், குடிப்பதற்கு முந்தைய பதிப்பை தேர்ந்தெடுத்து நௌஷாத்திடம் கூறினார்: ‘‘நான் உங்களுடன் முன்பே வேலை செய்திருக்க வேண்டும்.’’

நௌஷாத், சைகல் என்ற ஒரு பாடகரின் இசை வாழ்க்கைக்கு மட்டும் வழிவகுக்கவில்லை. லதா, ரஃபி, முகேஷ், தலாத்,



*இசை இயக்குனர் நௌஷாத் அலி*

சுரையா, ஷம்ஷாத் பேகம், ஜோராபாய், உமா தேவி ஆகியோருக்கும் வழிகாட்டினார். அவர் சிறந்த பாடல்களை மட்டுமல்லாமல் சிறந்த பாடகர்களையும் உருவாக்கினார் என்று கூறப்படுகிறது.

"சங்கீத சாம்ராட்" என்றும், பாலிவுட் இசையின் கோஹினூர் என்றும் போற்றப்பட்ட அவர் வெறும் 65 படங்களுக்கு இசையமைத்திருந்தாலும், அவரது பாடல்களின் பழமையான மெல்லிசை, காலத்தினால் அழியாதவை — படைப் பாற்றலின் பிரம்மாண்டமாக இருந்தார். அவரது படைப்பு இந்திய இசை - கிளாசிக்கல், நாட்டுப்புற இசை, கசல்கள், பஜன்கள் மற்றும் கவ்வாலிகளின் இணைந்த தொகுப்பாக இருந்தது. "நௌஷாத்திடம் இருந்து தான் பிரபலத்துடன் தரத்தை எவ்வாறு இணைப்பது என்பதை இசையமைப்பாளர்கள் கற்றுக்கொண்டனர்." என S D பர்மன் கூறினார். ஆனால் நௌஷாத் தனது இசைத் திறனைப் பற்றி "அல்லா மட்டுமே இசையமைப்பாளர். அவர் என்னை விண்ணுக்கு உயர்த்தினார்" என்று பணிவுடன் கூறினார்.



*லதா மங்கேஷ்கருடன்.*

அவர் இந்திய சினிமாவிற்கு அதன் மூன்று சிறந்த இசைக் காவியங்களை வழங்கினார் - பைஜு பாவ்ரா (1952), மதர் இந்தியா (1957) முகல்-இ-ஆசம் (1960) மற்றும் பல தலைசிறந்த படைப்புகளையும் வழங்கினார். அப்படிப்பட்ட ஒன்றிரண்டு படங்கள் மட்டும் ஒரு இசையமைப்பாளருக்கு நட்சத்திர அந்தஸ்தைக் கொடுத்திருக்கும். ஒன்றாக, அவை அனைத்தும் ஒப்பிட முடியாத ஒரு பொக்கிஷம். அவரது 65 படங்களில், 35 வெள்ளி விழாவையும், 12 பொன் விழாவையும், மூன்று வைர விழாவையும் கொண்டாடியது.



**இடமிருந்து:** *மஜ்ரூ சுல்தான்புரி, உருது கவிஞர் கமல் ஷிஃபாய், ரஜிந்தர் கிஷன் மற்றும் நௌஷாத்.*

ஆர்கெஸ்ட்ரா, இசைக் கருவி மற்றும் ஒலியுடன் கூடிய புதுமைகளை அவர் அறிமுகப்படுத்தினார். பின்னணிப் பாடலில் குரல் மற்றும் இசைத் தடங்களைத் முதல்முறையாக தனித்தனியாகப் பதிவு செய்தவர் இவரே; புல்லாங்குழல் மற்றும் கிளாரினெட், சித்தார் மற்றும் மாண்டலின் ஆகியவற்றை முதலில் இனைத்தவரும் இவரே. அவர் இந்தி திரைப்பட இசையில் அக்கார்டியனை அறிமுகப்படுத்தினார் மற்றும் கஞ்சூரியுடன் தபலா, தோலக் மற்றும் கடம் போன்ற தாள வாத்தியங்களை கலந்து சிறப்பு தாளங்களை உருவாக்கினார். அவர் ஆன் படத்தில் 100 இசைக் கருவிகளையும், ஒரே பாடலுக்கு 100 பாடகர்களைக் கொண்ட ஒரு பாடலையும் வழங்கினார் (முகல்-இ-ஆஜாமில் ஏ மொஹபத் ஜிந்தாபாத்.) பின்னணி இசையைப் பயன்படுத்தி மனநிலையையும் உணர்வையும் உருவாக்கி நாடகமாக்குவதில் அவர் சிறந்து விளங்கினார்.

ஆனால் நௌஷாதின் மிகப்பெரும் பங்களிப்பு, பாரம்பரிய இசையை அவர்கள் விரும்பிய டியூன்களுடன் மக்களிடம் கொண்டு சேர்த்தது தான். அவர் பாரம்பரிய இசையின் ஜாம்பவான்களை சினிமாவுக்குக் கொண்டு வந்தார். பைஜு பாவ்ராவில் உஸ்தாத் அமீர்கான்



*லஷ்மிகாந்த், பியாரேலால் மற்றும் மனோஜ்குமார் ஆகியோருடன் நௌஷாத்.*

மற்றும் பண்டிட் D V புலாஸ்கரும், முகல்-இ-ஆஜாமில் உஸ்தாத் படே குலாம் அலி கானும் பாடினர்.

## அவருடைய சிறந்த பாடல்கள்

நௌஷாத் தொட்டதெல்லாம் பொன்னாக்கும் மனிதராகக் கருதப்பட்டார். அனைத்தையும் இசை பொன்னாக மாற்றினார்! சில எடுத்துக்காட்டுகள்:

ஆவாஸ் தே, கஹான் ஹை - அன்மோல் காடி, 1946: நூர்ஜஹானின் குரலின் சக்தி மற்றும் கம்பீரத்திற்கு ஒரு வெற்றிகரமான பாடல்.

து கஹே அகர் ஜீவன் பார் - அண்டாஸ், 1949. பியானோவில் திலீப் குமார் முகேஷின் குரலில் கதாநாயகி நர்கிஸை வசீகரிக்கிறார். முகேஷ் நௌஷாத்தின் வீட்டிற்கு சென்று 23 முறை ஒத்திகை பார்த்த பின்னரே மேஸ்ட்ரோ பாடலை ஒப்புக்கொண்டார். முதலில் முகேஷ், பிறகு தலாத், இறுதியாக ரஃபி நௌஷாத்தின் இசையில் திலீப்பின் குரலாக ஜொலித்தார்கள்.

துனியா பதல் கயீ மேரா ஜீவன் சாத்தி பிச்சாத் கயா - பாபுல், 1950. மனதைக் கவரும் மெல்லிசை. தலாத் மற்றும் சம்ஷாத் அவர்களின் உச்சத்தில், திலீப் மற்றும் முனாவர் சுல்தானா மீது படமாக்கப்பட்டது.

தில் மெய்ன் சுப்பகே பியார் கா டூஃபன் லே சாலே - ஆன், 1951. நௌஷாத் ரஃபியை “ஐ லவ் யூ” என்று பல குரல்களில் பாடவைத்தார். இதில் புன்னகையுடன், கிண்டலாக ரஃபியின் குரலில் முகம் சுளிக்கும் நதிராவை திலீப் வசீகரிக்கிறார்.

பைஜு பாவ்ராவின் பாடல்கள், 1952: திரைப்படத்தின் மூன்று ரஃபி பாடல்கள் — மன் தப்தத் ஹரி தர்ஷன் கோ ஆக்; இன்ச ான் பானோ; மற்றும் ஓ துனியா கே ரக்வாலே - ரஃபியின் மகத்துவத்திற்கும் நௌஷாதின் மேதைமைக்கும் சான்றாக இருந்தது. இரண்டு மேதைகளும் பாரம்பரிய ராகங்களை அடிப் படையாகக் கொண்ட இந்தப் பாடல்களின் மூலம் நட்சத் திரத்தின் உச்சத்திற்கு உயர்ந்தனர், மேலும் இந்தி இசை நிலப்பரப்பை மாற்றினர். லதாவின் மோஹே பூல் கயே சவாரியன் அழகும், மெல்லிசையும், துக்கமும் கலந்த அற்புதம். ரஃபியின் துடிதுடிக்கும் காதலனின் அழைப்பு து கங்கா கி மௌஜ் அந்த ஆண்டின் சிறந்த இசைக்கான பிலிம்பேர் விருதை நௌஷாத்திற்கு வாங்கித்தந்தது.

ராயல் திரையரங்கில் பைஜு பாவ்ரா வெள்ளி விழா கொண்டாடியபோது, நௌஷாத், நான் இந்த இடத்துக்கு எதிரே உள்ள நடைபாதையில் தூங்குவேன். சாலையைக் கடக்க எனக்கு 16 வருடங்கள் ஆனது என்றார்.

மதர் இந்தியா பாடல்கள், 1957. இந்த காவியம் லதா, ஷம்ஷாத், ரஃபி மற்றும் மன்னா டே ஆகியோர் குரலில் 12 பாடல்களை வழங்கியது. துனியா மே ஹம் ஆயே ஹைன் தோ ஜீனா ஹி படேகா மற்றும் நகரி நகரி துவேர் துவேர் ஆகிய இரண்டு பாடல்கள் லதாவின் இதயத்தை வருடும் மெல்லிசையில், அவை விதியின் அக்கிரமங்களை எதிர்த்துப் போராடும் நர்கிஸின் கோபத்தைப் படம்பிடித்தன. சில மனதை கவரும் டூயட்கள் மற்றும் குழு பாடல்களும் இந்த இமாலய திரைப்படத்தை அலங்கரித்தன.



பியார் கியா டு தர்னா கியா -முகல்-இ-ஆசம், 1960. காதலை மகிமைப்படுத்தும் மற்றும் அதன் எதிரிகளை இழிவுபடுத்தும் பாடலை நடனத்துடன் மதுபாலா திரையில் ஒளிரவைத்தார். லதாவின் குரல், வார்த்தைகள் மற்றும் நிகரற்ற சிம்பொனியுடன், மதுபாலா மீது படமாக்கப் பட்ட அந்த பாடல், அந்த படத்தை போல காலத்தினால் அழியாதது.

மொஹபத் கி ஜோதி - முகல்-இ-ஆசம், 1960. இந்திய சினிமாவின் விடிவெள்ளி சங்கிலியில் உள்ளது.



மேரே மெஹபூப் - மேரே மெஹபூப், 1963. ரஃபியின் மயக்கும் குரலில் ராஜேந்திர குமார் அழகிய சாதனாவை வேண்டி நிற்கிறார்.

நௌஷாத் டிசம்பர் 24, 2019 அன்று லக்னோவில் ஒரு ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தார். திரைப்படங்கள் மற்றும் இசையால் கவரப்பட்ட அவர், அடிக்கடி பள்ளியை தவிர்த்துவிட்டு லக்னோவில் உள்ள ராயல் திரையரங்குக்குச் சென்றார். மௌனப் படங்களுடன் கூடிய நேரடி இசைக்குழுவை அவர் பேரானந்தமாகக் கேட்டார் - இங்குதான் கருவி மேதை நௌஷாத் பிறந்தார். பழைய வாத்தியக் கடையில் துப்புரவுத் தொழிலாளியாக வேலை பெற்று, தந்திரமாக ஹார்மோனியம் வாசித்தார். ஒரு நாள் கையும் களவுமாக பிடிபட்டார், ஆனால் கடையின் உரிமையாளர் அவரின் திறமையால் ஈர்க்கப்பட்டு அவருக்கு ஒரு ஹார்மோனியம் பரிசளித்தார்.

நௌஷாத், உஸ்தாத் யூசுப் அலியிடம் இருந்து சிதார், பாபர் கானிடம் ஹார்மோனியம் வாசிக்கக் கற்றுக்கொண்டார். ஆனால், சிறுவனின் இசையின் மீதான மோகத்தால் அவரது தந்தை வருத்தமடைந்தார், ஹார்மோனியத்தை தூக்கி எறிந்துவிட்டு, வீட்டில் இசையில் ஒன்றைத் தேர்வு செய்யச் சொன்னார். நௌஷாத் இசை யைத் தேர்ந்தெடுத்தார். அது 1937, அவருக்கு வயது 18.

இளைஞனாக அவர் வட மற்றும் கிழக்கு இந்தியாவில் நிகழ்ச்சிகளை நடத்தும் ஒரு நாடக நிறுவனத்தில் சிறிது காலத்தை செலவிட்டார், மேலும் பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் மற்றும் சவுராஷ்டிராவின் நாட்டுப்புற பாடல்களைக் கற்றுக்கொண்டார். அந்த நிறுவனம் மூடப்பட்ட போது, நௌஷாத் வாய்ப்புகளின் தலைநகரமான பம்பாய்க்கு குடிபெயர்ந்தார் - அங்கே அவருக்கு வீடு இல்லை, நண்பர்கள் இல்லை, வேலையும் இல்லை.

பம்பாயில் சில வருடங்கள் கடினமான வாழ்க்கை. நௌஷாத் அடிக்கடி ராயல் சினிமாவுக்கு எதிரே உள்ள நடைபாதையில் உறங்கினார். வேலை தேடி கொலாபாவிலிருந்து தாதரில் உள்ள ஸ்டுடியோவுக்கு நடந்து சென்று இசையமைப்பாளர்களுக்கு பல்வேறு பணிகளைச் செய்தார். தனி இசையமைப்பாளராக அவரது முதல் வாய்ப்பு பிரேம் நகர் (1940) இல் வந்தது. ஆனால் நான்கு வருடங்கள் மற்றும் 10



*சங்கர் ஜெய்கிஷன் மற்றும் O P நய்யர் ஆகியோருடன்.*



*பிமல் ராய், மீனா குமாரி மற்றும் நௌஷாத் — முதல் ஃபிலிம்ஃபேர் விருதுகளுடன்.*

படங்களுக்குப் பிறகு அதிர்ஷ்டம் இறுதியாக அவரைப் பார்த்து புன்னகைத்தது. அவரின் ரத்தன் படம் பிளாக்பஸ்டர் ஆனது. ஜோஹ்ராபாய் அம்பாலேவாலி பாடிய அன்கியான் மிலகே மெகா ஹிட் ஆனது. அழகான டூயட் ஓ ஜானேவாலே பலம்வா (ஷாம் குமார் மற்றும் ஜோஹ்ராபாய் பாடியது) அனைவராலும் முனகப்பட்டது. நௌஷாதின் கட்டணம் ஒரு படத்திற்கு 25,000 ரூபாயாக உயர்ந்தது.

இந்த நேரத்தில் அவரது பெற்றோர் அவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள், மணமகளின் பெற்றோரிடம் தங்கள் மகன் ஒரு தையல்காரர் என்று கூறி, அவரது "மதிப்பற்ற" இசை தொடர்பை மறைத்தனர். சந்தர்பவசமாக, மணமகன் இசையமைத்த ரத்தனின் பாடல்களை திருமணக் குழு இசைத்தது - அவர் அமைதியாக அதை ரசித்தார்!

1946-இன் அன்மோல் காடி ஒரு சிறந்த வெற்றி. அவாஸ் டி கஹான் ஹை (நூர் ஜெஹான்-சுரேந்திராவின் டூயட்) பாலிவுட் இசையின் அடையாளமாக இருந்தது. அஜா மேரி பர்பத் மொஹபட்கே சஹாரே மற்றும் க்யா மில் கயா பகவான் ஆகியவை மறக்க முடியாத மற்ற பொக்கிஷங்கள்.

பைஜு பாவ்ரா, மதர் இந்தியா மற்றும் முகல்-இ-ஆசம் ஆகிய காவியங்களைத் தவிர - இசையின் தலைசிறந்த படைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன அவைகளில் 1940களில் ஷா ஜெஹான் மற்றும் அண்டாஸ் ஆகியவை அடங்கும்; 1950களில் பாபுல், தீதர், ஷபாப், ஆன், அமர் மற்றும் உதான் கடோலா; 1960களில் கோஹினூர், மேரே மெஹபூப் மற்றும் கங்கா ஜூம்னா. அவை ஒவ்வொன்றிலும் ஆழ்நிலையை வசீகரிக்கும் பல பாடல்கள் உள்ளன.

### நௌஷாத் மற்றும் ரஃபி

துலாரியில் (1949) ரஃபியின் முதல் பெரிய வெற்றியான சுஹானி ராத் தால் சுகியில் இருந்து, அவர் நௌஷாதுக்காக 80 தனிப்பாடல்கள் உட்பட 149 பாடல்களைப் பாடினார். ரஃபி பெரும்பாலான நௌஷாத் படங்களில் திலீப் குமாரின் குரலாக இருந்தார் மற்றும் பாலிவுட்டுக்கு பல தலை சிறந்த பாடல்களை வழங்கினார். 1970களில் கிஷோர் குமார் ஆட்சி செய்தபோது ரஃபி தன் திறன் மேல் சந்தேகத்தில் இருந்த காலக்கட்டத்தில் நௌஷாத் அவரை இந்தக் வட்டத்திலிருந்து வெளிக்கொண்டு வந்தார்.

### நௌஷாத் மற்றும் லதா

நௌஷாத் லதாவின் அற்புதமான திறமையை உணர்ந்தவுடன், அவரது நம்பர் 1 பெண் பாடகி ஆனார். அவரின் பட்டான் அசைவிற்கு 160 பாடல்களை லதா பாடினார். அது உஹ்தயே ஜா உன்கே சிதம் (அந்தாஸ்), மோஹே பூல் கயே சவாரியா (பைஜு பாவ்ரா) அல்லது தூண்டோ தூண்டோ ரே சஜானா (குங்கா ஜூம்னா) என எதுவாக இருந்தாலும், லதாவின் குரலும் திறமையும் மயக்கின. நௌஷாத் ஒரு பரிபூரணவாதி, மேலும் அவரது அறிவு இசையில் மட்டும் இல்லை. அவர் ஒரு திறமையான பியானோ வாசிப்பாளர், மேற்கத்திய குறிப்புகள் மற்றும் அனைத்து கருவிகளிலும் திறமையானவர்" என்று லதா கூறியுள்ளார். மேலும் அவர் ஒரு கவிஞராகவும் இருந்ததால், ஒவ்வொரு பாடல் வரிகளையும்



*நௌஷாத் மற்றும் மொஹமது ரஃபி.*

அதற்கு இசையமைப்பதற்கு முன்பு ஆய்வு செய்தார்.

### நௌஷாத் மற்றும் முகல்-இ-ஆசம்

மொகல்-இ-ஆசம் செல்லுலாய்டில் ஒரு நினைவுச்சின்னம், ஒரு இசைக்காவியம் மற்றும் நௌஷாத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். பைஜு பாவ்ரா ரஃபியின் உயர்ந்த திறமையை வெளிப்படுத்தியது, ஆனால் லதா தான் முகல்-இ-ஆஜாமை எட்டு மயக்கும் பாடல்கள் மற்றும் ஷம்ஷாத்துடன் மயக்கும் கவாலியுடன் ஆதிக்கம் செலுத்தினார். ஆனால் இதில் விதிவிலக்கானது படே குலாம் அலி கானின் இரண்டு சகாப்தத்தை உருவாக்கும் பாடல்கள் (பிரேம் ஜோகன் பான் கே மற்றும் ஷுப் தின் ஆயோ). ஹிந்துஸ்தானி இசை ஜாம்பவானான அவர் திரைப் படங்களுக்குப் பாடவில்லை



*உருது கவிஞர்கள் அலி சர்தார் ஜஃப்ரி, மஜ்ரூ சுல்தான்புரி மற்றும் கய்ஃபி அஸ்மி ஆகியோருடன்.*



என்றும், நௌஷாத் மற்றும் தயாரிப்பாளர் K ஆசிஃப் ஆகியோரை புறக்கணிக்க, ஒரு பாடலுக்கு ரூ.25,000 என்ற அபத்தமான கட்டணத்தை கேட்டார். (அந்நாட்களில் சிறந்த பாடகர்களுக்கு ஒரு பாடலுக்கு ரூ.500 முதல் ரூ.1,000 வரை ஊதியம் வழங்கப்பட்டது.) அவரை ஆச்சரியப்படுத்தும் வகையில் அவ்வளவுதானா? நீங்கள் விலைமதிப்பற்றவர் என்று K ஆசிஃப் பதிலளித்தார், அந்த இடத்திலேயே அவருக்கு முன்பணமாக ரூ.10,000 கொடுத்தார். ரஃபி படத்தில் ஒரு பாடலை மட்டுமே பாடினார் (மொஹபத் ஜிந்தாபாத்). ஆனால் அது 100 பாடகர்களின் கோரஸுடன் பாடப்பட்ட ஒரு உத்வேகமான காவியம்.

ராம் அவுர் ஷியாம் (1967) நௌஷாத்தின் கடைசி வெற்றி. லீடர் (1964), தில் தியா டார்ட் லியா (1966), சுங்குர்ஷ் (1968), பால்கி (1968) ஆகிய படங்களில் சில நல்ல பாடல்களை அவர் இசையமைத்தார். பகீசா (1972) மீனா குமாரி மீது படமாக்கப்பட்ட பல அழுத்தமான பாடல்களுடன் அலைகளை உருவாக்கியது, ஆனால் அதன் வெற்றிக்கான பெருமை அசல் இசையமைப்பாளர் குலாம் முகமதுவுக்குச் சென்றது. (குலாம் முகமதுவின் மரணத்திற்குப் பிறகு நௌஷாத் அப்படத்தின் இசையை முடித்தார்.)

இந்த “சங்கீத சாம்ராட்” இந்திய சினிமாவில் அழியாத முத்திரையை பதித்தார். நௌஷாத் 2006-இல் காலமானார். தாதாசாகேப் பால்கே விருது (1981) மற்றும் பத்ம பூஷன் (1992) ஆகியவை அவருக்கு வழங்கப்பட்ட பல கௌரவங்களில் இரண்டு மட்டுமே. அவரது மரபு இன்றும் வாழ்கிறது.

எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# இரத்த அழுத்தத்தை குறைப்போம்

பரத் - ஷலன் சவுர்

கவலை ஒரு நபரின் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். நாம் தீவிரமாக கவலைப்படும்போது, நமது உடல் மன அழுத்த ஹார்மோன்களான எபிநெஃப்ரின் மற்றும் கார்டிசோலை வெளியிடுவதன் மூலம் பதிலளிக்கிறது, இது நமது இதயத் துடிப்பை அதிகரிக்கிறது மற்றும் நமது இரத்த நாளங்களைச் சுருக்குகிறது. இந்த இரண்டு மாற்றங்களும் நமது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றன. 2015ஆம் ஆண்டில், அதிகமாக கவலைப்படுபவர்கள் இதயம், சிறுநீரகங்கள் மற்றும் இரத்த நாளங்களை சேதப்படுத்தும் இரத்த அழுத்தத்தில் திடீர் ஏற்றம் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

கவலையை சமாளித்தவுடன், இரத்த அழுத்தம் இயல்பு நிலைக்கு திரும்பியதும் கண்டறியப்பட்டது. அதே நேரத்தில், மன அழுத்தம் இன்றைய காலகட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், வயிற்று வலி, மனச்சோர்வு, தூக்கமின்மை, முடிவுகளை எடுக்கவோ அல்லது சில விஷயங்களை நினைவில் கொள்ளவோ இயலாமை, விவரிக்க முடியாத சோர்வு, பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி போன்ற இரண்டாம் நிலை அறிகுறிகள் வருகின்றன. நன்றாக உணர தின்பண்டங்கள் மற்றும் பானங்களை அதிகமாக உட்கொண்ட சிலருக்கு உடல் எடை மற்றும் இரத்தத்தில் கொழுப்புகளின் அளவு அதிகரிக்கின்றன. பலர் பகலில் அதிகமாக காபியையும் மாலையில் அதிக மதுவையும் குடித்து அவர்கள் உணர்ந்த பயத்தையும் விரக்தியையும் போக்குகின்றனர்.

### கவலையை வெல்லுங்கள்

இத்தகைய கடுமையான கவலை எதனால் ஏற்படுகிறது?, குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து துண்டிக்கப்படுவதை ஒரு முக்கிய காரணமாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தனிமைப் படுத்தப்பட்ட உணர்வு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தும். மிகை-பதற்றத்தைத் தடுக்கவும், இரத்த அழுத்தம் அதிகரிப்பதைத் தடுக்கவும் எடுக்கப்பட வேண்டிய படிகள்:

குடும்பம் மற்றும் நண்பர்களுடன் சமூக ஊடகங்கள், தொலைபேசி மற்றும் தனிப்பட்ட முறையில் முடிந்தவரை அடிக்கடி தொடர்பில் இருங்கள். அன்புக்குரிய உடன்பிறந்த சகோதரரையோ அல்லது நண்பரையோ சந்திப்பது மனதிற்கு இதமாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருக்கும். நீங்கள் நல்ல வைபரேஷன் பெறும் குழுவில் சேருங்கள், உடற்பயிற்சி கூடத்தில் சேருங்கள். சமீபத்தில், 83 வயது முதியவர் ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் வீடியோவைப் பார்த்தேன். அவர் வயிறு சிக்ஸ் பேக்ஸ் போல அவரது புன்னகையும் அகலமாக இருந்தது. உடற்பயிற்சி செய்வதன் பலன்களுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு சாதனையிலும் நீங்கள் ஹைஃபைவ் செய்ய ஆர்வமுள்ள நண்பர்களைக் கொண்டிருப்பது மிகவும் நல்லது. WHOஇன் படி, ஒருவரின் வயது என்னவாக இருந்தாலும் உடற்பயிற்சிகளுக்கான RDA, ஒரு வாரத்திற்கு 150 நிமிட மிதமான கார்டியோ பயிற்சிகள் மற்றும் இரண்டு வலிமை-கூட்டும் பயிற்சிகள்.

கவலை உங்கள் மருந்துகளை எடுக்க மறக்கச்செய்யும். முக்கிய இடங்களில் நினைவூட்டல்களை ஒட்டவும்-மருந்து பெட்டி, குளிர் சாதன பெட்டி, உங்கள் மேசை. வாரத்தின் நாட்களை அதன் பெட்டி



களில் எழுதியிருக்கும் மாத்திரை பெட்டியை பயன்படுத்தவும். தினசரி நடவடிக்கையுடன் சேர்த்து மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள் -பல் துலக்குதல், உணவு நேரம். மருந்துகளுக்கு ஒரு நிலையான இடம் வேண்டும்.

உங்கள் வேலை மற்றும் பொறுப்புகளை உங்களால் சமாளிக்க முடியாது என நீங்கள் உணர்ந்தால் நிபுணர்களை அணுகவும். நீங்கள் செய்ய விரும்பாத விஷயங்களை வேண்டாம் என்று சொல்லுங்கள் மற்றும் உங்களுக்கு முக்கியமில்லாத செயல்களுக்கு குறைந்த நேரத்தை கொடுங்கள்.

உங்களுக்கு முக்கியமான விஷயங்களைச் செய்யுங்கள். நல்ல புத்தகத்தைப் படியுங்கள். டெஸ்மண்ட் டுட்டு, தலாய் லாமா மற்றும் டக்ளஸ் ஆப்ராம்ஸ் ஆகியோரின் “தி புக் ஆஃப் ஜாய்”யை நான் மனதாரப் பரிந்துரைக்கிறேன். உறங்கும் நேரத்தில், டாக்டர் வெய்ன் டயரின் 5 நிமிட பாட்காஸ்ட்களைக் கேளுங்கள். அவை ஒரே நேரத்தில் உங்களை உயர்த்தவும் ஆற்றவும் செய்கின்றன. நல்ல ஆரோக்கியத்தைப் பற்றிப் பேசுங்கள், பரப்புங்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்வீர்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக வாழ்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இது இரண்டாவது முதுகெலும்பைக் வளர்ப்பது போன்றது. நீங்கள் உயரமாக, வலுவாக நிற்பீர்கள்.

### குறைந்த இரத்த அழுத்தம்

அமெரிக்க உளவியல் சங்கம் பல ஆண்டுகளாக உயர் இரத்த அழுத்தத்தைக் கொண்டிருப்பது அவர்களின் ஆரோக்கியத்தைப் பற்றிய மக்களின் கவலையின் அளவை அதிகரிக்கும் என்று கண்டறிந்துள்ளது. எனவே, கடந்த ஆண்டு, ஆராய்ச்சி யாளர்கள் எதிர் முனையிலிருந்து சிக்கலை நோக்கினார்கள்- இரத்த அழுத்தத்தைக் குறைப்பது கவலையைக் குறைக்குமா? நவம்பர் 2022க்குள், அவர்களிடம் பதில் கிடைத்தது – ஆம்!

நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் ‘நரம்பியல்வாதம்’ அல்லது கடுமையான கவலை குறித்த புதிய ஆய்வை மேற் கொண்டது. மேலும் அவர்கள் டயஸ்டாலிக் அளவீட்டிற்கும் நரம்பியல்வாதத்திற்கும் இடையே ஒரு தொடர்பைக் கண்டறிந்தனர். உயர்த்தப்பட்ட போது, டயஸ்டாலிக் அழுத்தம் (120/80mmHg அளவீட்டில் இருக்கும் 80) “நரம்பியல் விகிதங்களில் குறிப்பிடத்தக்க மரபணு காரண விளைவைக் கொண்டிருந்தது” என்று அவர்கள் ஜெனரல் சைக்கியாட்ரி இதழில் தெரிவித்தனர். அதிக பதற்ற அறிகுறிகளுடன் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டியைக் கொண்டிருப்பவர்கள் தங்கள் இரத்த அழுத்தம் மற்றும் வாழ்க்கை முறை குறித்து கூடுதல் கவனமாக இருக்க வேண்டும்.

நல்ல செய்தி என்னவென்றால், இரத்த அழுத்தத்தை 130/80–120/80 என்ற சாதாரண வரம்பிற்குக் குறைப்பது கவலையான உணர்வு களைக் குறைக்கிறது மற்றும் அதிக கவலைப்படுபவர்கள் ஒப்பீட்டளவில் நிலையாக உணர முடியும். அதிர்ஷ்டவசமாக, இரத்த அழுத்தம் மற்றும் பதற்றத்திற்கு சிகிச்சையளிக்க முடியும், எனவே அதை பற்றி எந்த கவலையும் இல்லை. இரத்த அழுத்தத்தைக் குறைக்க சுமார் 15 மருந்துகள் உள்ளன-டையூரிடிக்ஸ், கால்சியம் சேனல்-தடுப்பான்கள் முதல் பீட்டா-தடுப்பான்கள் மற்றும் பல. சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகள் தேவைப்படலாம்– உயர் இரத்த அழுத்தத்திற்கான பீட்டா-தடுப்பான்களின் கலவை, ஒரு ட்ராங்கோலைசர் (இது ஒரு தூக்க மாத்திரை அல்ல, ஆனால் மனதை அமைதிப்படுத்தும்) மற்றும், சில நேரங்களில், நோயாளி பேசும் மற்றும் வெளிப்படுத்தும் அறிகுறிகளுக்கு ஏற்ப மன அழுத்த எதிர்ப்பு மருந்து. சில இரத்தஅழுத்தத்தை குறைக்கும் மருந்துகளில் டையூரிடிக் பொருள் இருக்கும். உங்கள் மாத்திரை அப்படி இருந்தால், உங்கள் உப்பு உட்கொள்ளலைக் குறைக்க வேண்டுமா இல்லையா என்பதை உங்கள் மருத்துவரிடம் சரிபார்க்கவும்.

நேசமாக இருங்கள், விரக்தி யடைய வேண்டாம் எல்லாவற்றிற்கும் மேலாக, கவலைப்பட ஒன்றுமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் இரத்த அழுத்தத்தை ஆரோக்கியமான வரம்பிற்குள் வைத்திருக்க, உங்கள் மருந்துகள் மற்றும் வாழ்க்கை முறை காரணிகளைச் சரியாக அமைத்துக் கொள்ளுங்கள் – அவை உங்கள் உடல், மனம் மற்றும் வாழ்வில் ஆரோக்கியத்தைப் பாய்ச்சுகின்றன. விரக்தியை விட விருப்பத்தை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

விரக்தி கோபம், மனஅழுத்தம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வுக்கு வழிவகுக்கிறது. நேசம் உங்களை உங்கள் மருத்துவர், குடும்பத்தினர், நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மனதை மகிழ்விக்கும் சூழ்நிலைகளுடன் இணைக்கிறது, நேச உணர்வு- நல்ல ஹார்மோன்களான எண்டோர்பின்கள், டோபமைன், ஆக்ஸிடாஸின் ஆகியவற்றை வெளியிடுகிறது, அவை ஆழமான தொடர்பைக் கொடுக்கும். இது விமர்சனத்திற்கு பதிலாக புரிய வைக்கும். நீங்கள் ஒரு பெரிய இடத்தில் இருப்பதை உணர்வீர்கள், படிப்படியாக, எதிர்மறை நாட்களை விட அதிக நல்ல நாட்களைக் காண்பீர்கள் அந்த ஹய்-பைவ்க்கான நேரம் இது!

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# டூ யு ரீட் மீ



சந்தியா ராவ்

*டூ யு ரீட் மீ ? : இது பெர்லினில் உள்ள ஒரு புத்தகக் கடையின் பெயர். மேலும் உலகெங்கிலும் உள்ள புத்தகக் கடைகளைப் பற்றிய புத்தகத்தின் பெயர்.*

மக்களிடையே புத்தக கடைகளின் மேல் சுவாரஸ்யம் இல்லை என்று தோன்றுகிறது. புத்தகக் கடைகள் மூலம் புதுமைகள் வந்து சென்றும் விட்டன; எஞ்சியிருப்பவை புதுமையான பொருட்கள், சாக்லேட்டுகள், பைகள், குவளைகள், பொம்மைகள், செயற்கை நகைகள், சில பத்திரிகைகள் மற்றும்… ஒரு சில புத்தகங்கள் விற்கும் கடைகளாக மாறிவிட்டன. இது மனவருத்தத்தை அளிக்கும். புத்தகங்களிடம் ஏதோ ஒன்று இருக்கிறது, அவற்றின் தோற்றம், வாசனை மற்றும் உணர்வு, இதயம் மற்றும் ஆன்மாவை நிரப்புகிறது.

முன்னர், எனது கடைசி பிறந்த நாளில், எனக்கு ஒரு பரிசு கிடைத்தது: புத்தகக் கடைகளைப் பற்றிய புத்தகம்! குறைந்தது 2 கிலோ எடை இருக்கும்! வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சியுடன், நான் பக்கங்களை உலாவினேன் – பின்னர் அதை ஒரு இடத்தில வைத்து விட்டேன். அங்கேயே, மற்ற சிறப்புப் புத்தகங்களுக்கிடையில் அது இருந்தது… சில நாட்களுக்கு முன்பு வரை. ஒரு வார பல் வலியால், நான் அதிகாலை 3 மணிக்கு எழுந்தேன். விழித்திருந்த நான் டிவிக்கு கீழே சிறிய புத்தகம் வைக்கும் இடத்திலிருந்து, டூ யு ரீட் மீ புத்தகத்தை எடுத்தேன். அதில் 60க்கும் மேற்பட்ட கடைகள் இடம்பெற்றிருந்தது. அதில் ஒன்று துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள ஃபில்புக்ஸ்: ஒரு நொடிப்பொழுதில் நான் ஒரு விசேஷமான மந்திரத்தின் வலையில் வீழ்ந்தேன்.

புத்தகக் கடையின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தின் நன்கு காட்டப்பட்ட புகைப்படங்களுக்கு மத்தியில் ‘காபியின் நறுமணம் புதிதாக அச்சிடப்பட்ட பக்கங்களின் வாசனையுடன் கலந்திருக்கிறது,’ என்ற குறுகிய வாக்கியத்துடன் தொடங்குகிறது.

சிறந்த புத்தகக் கடைகள் ஆன்மா கொண்டவை, அவை நாகரிகத்தின் வாழ்க்கை மற்றும் காலங்களுடன் துடிக்கிறது; அவை அதன் செயல்கள், எண்ணங்கள், வார்த்தைகள், யோசனைகள், கனவுகள் ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன; அவை அனைத்து வகையான படைப்புகளுக்கு பிரதிநிதியாக இருக்கிறது. பெர்லினில், டூ யு ரீட் மீ? புத்தக கடையை நடத்தும் ஜெசிகா ரெய்ட்ஸ், மார்க் கீஸ்லிங்குடன் சேர்ந்து, அச்சி டப்பட்ட ஊடகங்கள் நெருக்கடியில் இருந்தபோது, புத்தகக் கடையைத் தொடங்க, மக்கள் எப்படி அவர்களை பைத்தியம் என்று நினைத்தார்கள் என்பதை நினைவு கூர்ந்தார்: ‘இதில் பெரிய விஷயம் என்னவென்றால், புத்தகங்கள் அல்லது பத்திரிகைகள் போன்ற ஒரு அனலாக் ஊடகம் உலகை வேறு கோணத்தில் பார்க்க உதவுகிறது. அந்த வெளிச்சத்தில், புத்தகக் கடைகள் மற்றும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள் போன்று உங்களை மெய்மறக்க அனுமதிக்கும் இடங்கள்.’

இந்த புத்தகக் கடைகளில் சிலவற்றின் பெயர்களில் கூட நீங்கள் உங்களை இழக்கலாம். உதாரணமாக, தி ரைட்டர்ஸ் பிளாக், லாஸ் வேகாஸ்; புக்ஸ் ஓவர் தி கிளவுட்ஸ், ஷாங்காய்; அன்டர் தி கவர், லிஸ்பன்; டெஸ்பரேட் லிட்டரேச்சர், மாட்ரிட்; ஜாஸ்ஹோல், லாகோஸ்; டிஸ்லெக்ஸியா லிப்ரோஸ், ஆன்டிகுவா; புக்ஆஃப், வார்சா; தி புக் பார்ஜ், கானால் டு நிவர்னாய்ஸ், பிரான்ஸ்; ஹாப்பி வேலி, மெல்போர்ன்.

இந்தப் புத்தகத்தை வெளியிட்ட கெஸ்டால்டனின் ஆசிரியர்களின் கூற்றுப்படி, அர்ஜென்டினாவில் உள்ள பியூனஸ் அயர்ஸில் தான் உலகின் மிக அழகான புத்தகக் கடை உள்ளது: ‘அதன் கிரிம்சன் தியேட்டர் திரைச்சீலைகள் மற்றும் மின்னும் தங்கப் பெட்டிகளுடன், எல் அட் டீனியோ கிராண்ட் ஸ்ப்ளெண்டிட் அற்புதமான புத்தகக் கடைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். மென்மையான பியானோ இசை ஒலிக்க, தங்களுக்கு விருப்பமான தலைப்பை தேடி பார்வையாளர்கள் உலாவுகிறார்கள்; அந்த அற்புதமான மண்டபத்தில் பியானோ கலைஞர் நேரடியாக வாசிக்கிறார். 1903-இல் திறக்கப்பட்ட அரங்கம், கிளாசிக் மேடை நிகழ்ச்சிகளுடன் துவங்கி, பின்னர் சினிமா, ரேடியோ ஸ்டுடியோ மற்றும் டேங்கோ ஹாலாகப் பயன்படுத்தப்படுத்தப்பட்டு, இறுதியாக 2000-இல் புத்தகக் கடையாக மீண்டும் திறக்கப்பட்டது.

குவாத்தமாலாவின் ஆன்டிகுவாவில், ஜான் ரெக்ஸர் ஒரு புத்தகக் கடை வைக்க வேண்டும் என்று கனவு கண்டார், ஆனால் அவருக்கு சேகரிப்பை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்று தெரியவில்லை. ஒரு மழைக்கால இரவில், அவர் தனது நாயுடன் கால்நடை மருத்து வமனையில் இருந்தபோது, தெருவிலங்குகளுக்கு நிதி திரட்டுவதற்காக அலமாரி நிரம்ப புத்தகங்கள் விற்பனைக்கு



வைத்திருந்ததைக் கண்டார். நெருக்கமான பார்வையில் அந்த சேகரிப்பு ஒரு புதையல் என்று தெரியவந்தது, ஒவ்வொரு தலைப்பும் ஒன்றரை டாலர்க்கும் குறைவான விலையில் இருந்தது. அவர் 300 புத்தகங்களையும் சுமார் $400க்கு வாங்கினார். “அமெரிக்க எழுத்தாளர் கோர் விடல் 1940களில் ஆன்டிகுவாவில் வசித்து வந்தார் என்பது தெரியவந்தது. இந்த புத்தகங்கள் அவரது காதலர் ஒருவருக்கு சொந்தமானது. விடல் இறப்பதற்கு முன், அவர் புத்தகங்களை கால்நடை மருத்துவ மனைக்கு நன்கொடையாக அளித்தார், அவை ஒவ்வொன்றிலும் முதல் பக்கத்தில் அவரின் தேதியிட்ட கையொப்பம் இருந்தது. ஆன்டிகுவா என்றால், அது டிஸ்லெக்ஸியா லிப்ரோஸ் ஆக இருக்க வேண்டும்.

புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளில் மூன்று புத்தகக் கடைகளுக்கு நான் சென்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்: பெர்க்லியில் உள்ள மோஸ் மற்றும் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள சிட்டி லைட்ஸ், இரண்டுமே கலிபோர்னியாவில் உள்ளது, மற்றும் புது டெல்லியில் உள்ள பஹ்ரிசன்ஸ். லைப்ரேரியா அக்வா ஆல்டாவில் பழைய கோண்டோலாக்கள், குளியல் தொட்டிகள் மற்றும் பீப்பாய்களில் வரிசைப்படுத்தப்படாமல் கொட்டி கிடக்கும் புத்தகங்களின் குழப்பமான மகிழ்ச்சியில் உள்ளது. புத்தகங்களால் கட்டப்பட்ட படிக்கட்டு புத்தகங்களுக்கு வழிவகுக்கிறது – நம்மில் சிலருக்கு புத்தகங்களை மிதித்து செல்வது மிக புனிதமற்ற செயல். ‘அக்வா அல்டா’ என்றால் ‘உயர்ந்த நீர்’, வேறு வார்த்தைகளில் வெள்ளம். எனவே, இந்த வெனிஸ் நகரத்தில் வெள்ளம் ஏற்பட்டால் புத்தகங்கள் கோண்டோலாக்களில் தஞ்சம் அடைகின்றன.




திறந்தவெளி புத்தகக் கடைகள், புத்தகக் கடைகளின் நகரம், பூனைகள் மற்றும் நாய்களை அனுமதிக்கும் புத்தகக் கடைகள், மலை உச்சியில் புத்தகக் கடைகள் மற்றும் படகில் ஒன்றும் உள்ளது, கடை உரிமையாளரின் தனிப்பட்ட பொருட்களுடன் சேர்ந்து புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும்! வெல்ஷ் கிராமமான ஹே-ஆன்-வையில் பல புத்தகக் கடைகள் உள்ளன, அதில் ஒரு நேர்மை புத்தகக் கடை உண்டு, ‘அந்தக் கடையில் எதையாவது படிக்க விரும்பினால் நீங்கள் அதற்கு ஒரு தொகையை அங்கே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடலாம்.’ சாரா ஹென்ஷாவின் மிதக்கும் புத்தகக் கடை, தி புக் பார்ஜ், இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படாத ஒரு புத்தகக் கடையை எனக்கு நினைவூட்டுகிறது: ஸ்ரீநகரில் உள்ள குல்ஷன் புக்ஸ், தால் ஏரியின் நடுவில் அமைந்துள்ளது. ஷிகாராவால் மட்டுமே அதை அணுக முடியும்! இந்த புத்தகக் கடை மற்றும் கஃபே ஏரியைத் தவிர சங்கராச்சார்யா மலை மற்றும் ஹரி பர்பத்தின் அற்புதமான காட்சியையும் வழங்குகிறது; காஷ்மீர் தொடர்பான எல்லா வகையான புத்தகங்களையும் அங்கே காணலாம்.

புத்தகத்தில் உள்ள அனைத்து புத்தகக் கடைகளின் பெயர்களையும் இங்கே குறிப்பிடுவது சாத்திய மில்லை, ஆனால் இங்கே – புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர் அண்ட் கம்பெனி, பாரிஸ் பற்றி ஒரு கடைசி வார்த்தை கூற விரும்புகிறேன் – எர்னஸ்ட் ஹெமிங்வே, கெர்ட்ரூட் ஸ்டெயின், T S எலியட், அனாயஸ் நின் மற்றும் ஜேம்ஸ் பால்ட்வின் என அதிக எண்ணிக்கையிலான இலக்கியவாதிகள் அங்கே வந்துள்ளனர். அகதா கிறிஸ்டியின் நினைவாக ஆகி என்று அழைக்கப்படும் அந்த கடையின் செல்ல பூனை அதன் ரசிகர்களிடம் இருந்து அஞ்சல்களைப் பெறுகிறது!



*ஷாங்காயில் உள்ள புக்ஸ் ஓவர் தி கிளவுட்ஸ் புத்தகக்கடை.*

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

புத்தகத்தில் இடம்பெற்றுள்ள மேலும் சில புத்தகக் கடைகளுக்கு *https://rotarynewsonline.org/do-you-read-me/*படிக்கவும்

## RC சிதம்பரம் மிட்-டவுன் — RID 2981



ஷெம்ஃபோர்ட் பள்ளியில் RCகள் சிதம்பரம் சென்ட்ரல், சிதம்பரம் டெம்பிள் டவுன் மற்றும் கடலூர் அரசு மருத்துவமனை இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் 350 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.

## RC டெல்லி ஹெரிடேஜ் — RID 3011



புது தில்லி Dr ஷ்ராஃப் கண் பராமரிப்பு நிறுவனத்தின் ஆதரவுடன் UPயில் உள்ள விருந்தாவன் முதியோர் இல்லத்தில் 58 நோயாளிகளுக்கு கண்புரை அறுவைச் சிகிச்சைகளைச் செய்தது.

## RC சேலம் மெட்ரோபோலிஸ் — RID 2982



அரியலூர் விநாயகா மிஷன்ஸ் மருத்துவக் கல்லூரியில் IPDG சுந்தரலிங்கம் வழிகாட்டு தலில் நடைபெற்ற ரோட்டரி கிங்க்ஸ் ப்ரீமியர் லீகில் 12 ரோட்டரி அணிகள் பங்கேற்றன.

## RC சோனேப்பட் மிட்-டவுன் — RID 3012



சரஸ்வதி சிக்ஷா சன்ஸ்தானில் நடைபெற்ற MHM முகாமில் 2,000க்கும் மேற்பட்ட சானிட்டரி பேட்கள் வழங்கப் பட்டன.

## RC திருச்சிராப்பள்ளி — RID 3000



சங்க உறுப்பினர்கள் உறையூரில் ஒரு முதியோர் இல்லம், கங்காரு மெர்சி இல்லம் மற்றும் லிப்ரா கண் பார்வை யற்றோர் இல்லத்தில் சுமார் 300 பேருக்கு மதிய உணவு வழங்கினார்கள்.

## RC புசவால் ரயில்சிட்டி — RID 3030



சங்கத் தலைவரும் பல் அறுவைச் சிகிச்சை வல்லுனருமான மகரந்த் சந்த்வாட்கர் ஜீஜாமாதா தொடக்கப் பள்ளியில் வாய் நல விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றுக்குத் தலைமை தாங்கினார்.

# செய்திகள்

## RC சூரத் ரவுண்ட் டவுன் — RID 3060



இந்தச் சங்கத்தின் பொன்விழா ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் RI இயக்குநர் A S வெங்கடேஷ் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார், DG ஸ்ரீகாந்த் இந்தானியும் பங்கேற்றார்.

## RC முஜாஃபர்நகர் மிட்-டவுன் — RID 3100

கஸ்தூர்பா காந்தி பெண்கள் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு முகாமில் 50 பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.



## RC ஃபக்வாரா மிட்டவுன் — RID 3070



IPDG உபிந்தர் சிங் கய் முன்னிலையில் 5 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## RC பரெய்ல்லி மெட்ரோ — RID 3110

பரெய்ல்லி ராம் லீலா மைதானத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் சுமார் 90 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள்.



## RC ஃபெரோஸ்பூர் ராயல் — RID 3090



ஃபெரோஸ்பூர் ஃபிரான்செஸ் நியூட்டன் மிஷன் மருத்துவ மனையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 135 பேருக்கு ரத்தச் சர்க்கரை பரிசோதனைகள் செய்யப்பட்டன.

## RC வாரணாசி நார்த் — RID 3120

சங்க உறுப்பினர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு தேவகாட் மகரிஷி வால்மீகி சேவா சன்ஸ்தானில் 4 பெண் களுக்குத் தையல் இயந்திரங்கள் கொடையளிக்கப் பட்டன.



## RC புணே மெட்ரோ — RID 3131



ஓர் ஓடையின் அருகில் சூழியலைப் பாதுகாக்கச் சுவர் ஓவியங்கள் வரையப்பட்டன.

## RC குடூர் — RID 3160

குடூர் கோதண்ட ராம ஆஞ்சநேய சுவாமி கோயிலின் திருக்குளம் ரூ.4.12 லட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்டது.



## RC டோம்பிவ்லி டைமன்ட்ஸ் — RID 3142



டோம்பவ்லி சரஸ்வதி உயர்நிலைப் பள்ளியில், சாம்பியன்ஸ் கராத்தே சங்க ஆதரவுடன் 75 பெண்களுக்குத் தற்காப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

## RC மணிப்பால் டவுன் — RID 3182

PDG ராஜாராம் பட், AG ராமச்சந்திர உபாத்யாய, சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் உடுப்பி பட்லா பள்ளிக்கு Rtn கணேஷ் நாயக் ஒரு பள்ளிப் பேருந்தை நன்கொடையளித்தார்.



## RC குண்டூர் விகாஸ் — RID 3150




நலிந்த பெண் களுக்கு வளங் குன்றா வருவாயை வழங்க ரூ.21,000 செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## RC பெங்களூரு பிளாட்டினம் சிட்டி — RID 3190

எலஹங்கா MEC பள்ளியில் சங்கத் தலைவர் பவன் குமார் ஜெயின் மின் கற்றல் திட்டத்தைத் தொடங்கி வைத்தார், பாட மென் பொருட்கள் நிரப்பப்பட்ட LED TV ஒன்று நிறுவப்பட்டது.



# செய்திகள்

## RC கோயம்புத்தூர் கேலக்ஸி — RID 3201



நிர்மலா பெண்கள் கல்லூரியில், தொழில்முனைவை ஊக்குவிப்பதற்கு, ரூ.3 லட்சம் மதிப்புள்ள 3 இயந்திரங்களுடன் தொழில் சார்ந்த பயிற்சி மையம் தொடங்கப்பட்டது.

## RC ராம்கர் சிட்டி — RID 3250

சங்கத் தலைவர் ஹரீஷ் சௌத்ரி முன்னிலையில் DG சஞ்சீவ் தாகுர் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கும் சஹேலி மையம் ஒன்றைத் தொடங்கிவைத்தார்.



## RC மார்த்தாண்டம் — RID 3212



நாகர்கோயிலில் உள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில், பிரேசிலில் உள்ள RC இவின்ஹெமா, RID 4470, உடன் இணைந்த GG திட்டம் மூலம் மாமோகிராம் வசதி நிறுவப்பட்டது.

## RC ராய்ப்பூர் வெஸ்ட் — RID 3261

ராய்ப்பூர் சென்ட்ரல் மார்வாரி யுவ மஞ்ச் மற்றும் யங் இந்தியா ஆதரவுடன் நடத்தப்பட்ட கை, கால் மாற்று முகாமில், கை, கால் நீக்கப்பட்ட 90 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்பட்டன.



## RC வேலூர் நார்த் — RID 3231



காட்பாடியில் உள்ள காங்கேயநல்லூர் கிராமத்தில், திட்டத் தலைவர் தரணிவாசன், சங்கத் தலைவர் ரவீந்திரன் முன்னிலையில், ஒருவருக்கு ஒரு புதிய வீட்டுக்கான சாவிகளை DG J K N பழனி வழங்கினார்.

## RC கல்கத்தா பிரெசிடென்சி — RID 3291

சிங்கர் நிறுவனம், RCC, ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சமிதி ஆதரவுடன் தொழில் சார்ந்த மையம் ஒன்று தொடங்கப்பட்டது.




ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# கோலாகலமாக தொடங்கியது மகளிர் ஐபிஎல்!

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) கடந்த மாதம் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தியது. மும்பை, டெல்லி, பெங்களூர், லக்னோ மற்றும் குஜராத் ஆகிய ஐந்து அணிகள் பங்கேற்ற மகளிர் ஐபிஎல்லின் முதல் பதிப்பை இது வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. அந்த பெண்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கிரிக்கெட்டை விளையாடினர், ஆண்களின் கிரிக்கெட் போட்டிகளை போலவே இந்த போட்டிகளையும் நான் ரசித்தேன் என்று தான் சொல்ல வேண்டும். நிச்சயமாக, பெண்கள் ஆண்களைப் போல் பந்தை கடினமாக அடிக்க மாட்டார்கள் அல்லது வேகமாக பந்து வீச மாட்டார்கள். ஆண்களுக்கு இருக்கும் மேல் உடல் வலிமை அவர்களுக்கு இல்லை. ஆனால் மற்ற எல்லா விஷயங்களிலும் அவர்களுக்கு இணையாக இருக்கிறார்கள். இது இரண்டு தசாப் தங்களாக தெளிவாக தெரிந்த ஒன்று, ஆனால் மீண்டும் மீண்டும் இதை சொல்ல வேண்டியிருக்கிறது.

மொத்தத்தில், இது ஒரு அற்புதமான காட்சியாக இருந்தது, மேலும் இந்த போட்டி நீண்ட காலத்திற்கு தொடரும் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதிகமான அணிகள் உருவாக்கப் பட்டு, போட்டியில் இணைந்து, மார்ச் மாத இறுதியில் தொடங்கி மே வரை தொடரும் ஆண்கள் ஐபிஎல் போன்று கோடையில் விளையாடுவதை விட மார்ச் மாதத்தில் தொடர்ந்து விளையாடினால் அது இன்னும் நிலையானதாக இருக்கும். மே மாதத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும், மேலும் வீரர்கள் 40 டிகிரி செல்சியஸில் விளையாடுவதை மிகவும் சோர்வடைவதாக உணர் கிறார்கள். போட்டிகளுக்கு இடையே அவர்களுக்கு நிறைய ஓய்வு தேவை. கடலோர நகரங்களில் உள்ள ஈரப்பதத்தை நீங்கள் சேர்த்தால், அது மேலும் சோர்வை அதிகரிக்கும். அதிர்ஷ்டவசமாக உலக கிரிக்கெட் நாட்காட்டியின்படி வசந்த காலம்தான் இப்போது மகளிர் ஐபிஎல் போட்டிக்கான ஒரே நேரம். இதைவிட எதுவும் சிறப்பாக அமையமுடியாது.

பெண்கள் நீண்ட காலமாக கிரிக்கெட் விளையாடி வருகின்றனர். ஆஸ்திரேலியாவில் அவர்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார்கள். இந்தியாவில் 1976ல் தங்கள் முதல் அதிகாரப்பூர்வ போட்டியை விளையாடினர். அதன்பிறகு மிக நீண்ட காலத்திற்கு அவர்கள் ஒரு பக்கவாத்தியமாகவே பார்க்கப்பட்டனர், முறையான ஆதாரங் களுடன் ஊக்குவிக்கப்படுவதை விட கேளிக்கையுடன் பொறுத்துக் கொள்ளபட வேண்டிய ஒன்றாக கருதப்பட்டனர். மேலும், சற்று முரட்டுத் தனமாக ஒலிக்கும் அபாயத்துடன், முந்தைய தலைமுறை பெண் கிரிக்கெட் வீரர்கள் மிகவும் நன்றாக விளையாடவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் இப்போது அதெல்லாம் மாறிவிட்டது. பெண்கள் அந்த நிலையை எட்டி விட்டனர். இப்போதெல்லாம் விளையாடுபவர்கள் ஆண்களுக்கு இணையாக உள்ளனர். மகளிர் ஐபிஎல் அதை நிரூபித்துள்ளது. உண்மையில், இப்போது பெண்கள் விளையாடும் நிலை 1970கள் வரை ஆண்கள் விளையாடிய நிலை. இன்று பெரும்பாலான கல்லூரி ஆண் அணிகள் தேசிய பெண்கள் அணிகளிடம் தோற்றுவிடும்.

காலப்போக்கில், பெண்கள் கிரிக்கெட் புத்திசாலிதனம் என்று அழைக்கப்படுவதை இன்னும் அதிகமாக வளர்த்துக் கொள்வார்கள். அவர்கள் இப்போதும் அவற்றை வைத் திருக்கிறார்கள், ஆனால் ஆண்கள் அளவிற்கு இல்லை. ‘கிரிக்கெட் புத்திசாலிதனம்’ என்பது சில வீரர்கள் விளையாட்டின் நிலையைப் பொறுத்து தந்திரோபாயமாக விளையாட வேண்டிய திறனைக் குறிக்கும் சொல். இது பெரும்பாலும் உள்ளுணர்வு தொடர்பானது ஆனால் போட்டி அனுபவம் அதில் பெரும் பங்கு வகிக்கிறது. எந்த நேரத்திலும் என்ன செய்ய வேண்டும் என்பது வீரருக்குத் தெரியும். M S தோனி, ரவீந்திர ஜடேஜா போன்ற வீரர்களுக்கும் இது பொருந்தும். கிரிக்கெட் என்பது வாய்ப்பின் விளையாட்டு மற்றும் சில மில்லிமீட்டர்கள் மற்றும் கோணங்களில் சிறிய மாற்றம் விளைவுகளில் வித்தியாசத்தை ஏற்படுத்தும். கிரிக்கெட் புத்திசாலி களுக்கு இதை எப்படி பயன் படுத்திக் கொள்வது என்று தெரியும்.

இதில் விசித்திரமானது என்ன வென்றால், கிரிக்கெட் சரியானதைச் செய்ய இவ்வளவு நேரம் எடுத்தது. டென்னிஸ், பேட்மிண்டன், கோல்ஃப், நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் ஒலிம்பிக்கில் சேர்க்கப் பட்ட பல விளையாட்டுகள் பெண்களுக்குத் தேவையான இடத்தை வழங்கியுள்ளன. ஆனால் கிரிக்கெட் பின் தங்கியிருந்தது. கடந்த இரண்டு தசாப்தங்களில் பெண்களுக்குத் தேவையான இடத்தை வழங்கத் தொடங்கி யுள்ளது. இந்த இழப்பு முழுக்க முழுக்க விளையாட்டு மற்றும் அதன் ரசிகர்களுக்குத்தான். என்ன பரிதாபம். ஆனால் அந்த புறக்கணிப்பு இப்போது கடந்த காலத்தின் ஒரு விஷயம், சமீபத்தில் முடிவடைந்த மகளிர் ICC உலகக் கோப்பை மற்றும் மகளிர் IPL இதற்கு சான்று. பெண்கள் சிறப்பாக கிரிக்கெட் விளையாடினர். இதற்கு மேல் ஒருவருக்கு இன்னும் என்ன வேண்டும்?■


# செய்தித் துளிகள்

## ஐ.நா.வின் பெருங்கடல் பாதுகாப்பு முயற்சி



10 வருடங்கள் கலந்துரையாடலுக்குப்பின் ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் High Seas Treaty என்னும் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் படி நாடுகளை சார்ந்த 30 சதவிகித பெருங்கடல்கள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்படும். ஐரோப்பிய ஒன்றியம் இதற்கு 820 மில்லியன் யுரோக்கள் அளிக்கவுள்ளது.■

## காசாவில் முதல் பெண் குத்துச் சண்டை சங்கம்



பாலஸ்தீனத்தின் காசாவில் உள்ள அனைத்து பெண்கள் குத்துச்சண்டை சங்கம் 40 சிறுமி களுக்கு குத்துச் சண்டையில் பயிற்சி அளிக்கிறது. குத்துச் சண்டை மையத்தில் முழு அளவிலான குத்துச்சண்டை வளையம், பயிற்சி உபகரணங்கள் மற்றும் சுவர்களில் மைக் டைசன் போன்ற குத்துச்சண்டை ஜாம்பவான்களின் சுவரொட்டி களும் உள்ளன. சங்கத்தின் மூலம், பாலஸ்தீனிய பெண்கள் பாரம்பரிய பாலின விதிமுறைகள் மற்றும் விளையாட்டுகளில் இருக்கும் பாலின வேற்றுமைகளை எதிர்கொள்கிறார்கள்.■

## சிகரெட் துண்டு சுத்தம் செய்வதற்கான மசோதா



புதிய சுற்றுச் சூழல் சட்டத்தின் படி, ஸ்பெயினில் உள்ள புகையிலை வணிகங்கள் ஒவ்வொரு ஆண்டும் புகைப் பிடிப்பவர் தூக்கி எறியப்பட்ட சிகரெட் துண்டு களை சுத்தம் செய்வதற்கு பணம் செலுத்த வேண்டியிருக்கும். இந்த முடிவு கழிவு-குறைப்பு மற்றும் மறுசுழற்சி முயற்சிகளின் தொகுப்பின் ஒரு பகுதியாகும்.■

## கார் பேட்டரிகளுக்கு இரண்டாவது வாழ்க்கை



நாட்டிங்ஹாம் அதிகாரிகள் சோலார் பேனல்கள் மற்றும் ஒரு பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்புடன் இணைக்கப் பட்டுள்ள 40 இரு வழி மின்சார வாகன சார்ஜர் களை நிறுவியுள்ளனர். இது பல ஆன்-சைட் கூடங்களுக்கு மின்சாரம் வழங்கவும் மற்றும் 200 நகராட்சி வாகனப் படையை சார்ஜ் செய்யவும், அதே நேரத்தில் இங்கிலாந்தின் மின்சார கட்டமைப்பை டிகார்பனைஸ் செய்யவும் உதவும்.■



## கால்பந்து ரசிகர்கள் காட்டிய ஒற்றுமை

துருக்கி சூப்பர் லீக் கிளப் பெசிக்தாஸ் இஸ்தான்புல்லின் ரசிகர்கள் ஆண்டலியாஸ்போர்க்கு எதிரான போட்டியை இடைநிறுத்தி ஆயிரக்கணக்கான பொம்மைகளை ஆடுகளத்தில் எறிந்து, துருக்கி மற்றும் சிரியாவில் சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தங்களின் ஆதரவைக் காட்டினர். பிப்ரவரி 6-ஆம் தேதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4:17 மணிக்கு பூகம்பம் தாக்கிய நேரத்தைக் குறிக்கும் வகையில் அந்த விளையாட்டு 4 நிமிடங்கள் 17 வினாடிகளுக்குப் பிறகு இடைநிறுத்தப்பட்டது.■

*ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

